ஐப்பசி – 2022 நன்கொடை 30

# கண்ணாமூச்சி

மண்சார் இலக்கிய இதழ் தனிச்சுற்று ஆடல் 1 பாடல் 4



# சன்மேன்

டெய்லர்ஸ்

எண்:9, அரிசிக் கடைத் தெரு, மன்னார்குடி.

உரிமை: கோ.அருணகிரி

செல்: 9976052585

பறவைகள்
உயரத்தில் மிதப்பது
சாதனை அல்ல
அதுவே
அதன் இயல்பு
கண்ணாமூச்சிக்கு வாழ்த்துகள்...













# நெகிழ்ச்சியும் மகிழ்ச்சியும்..

நினைத்துப் பார்க்கும்போது மகிழ்ச்சியாகவே இருக்கிறது. கண்ணாமூச்சி இந்த நான்காவது இதழோடு ஓர் ஆண்டை நிறைவு செய்கிறது. கண்ணாமூச்சி குறித்து பெருங்கனவு கொண்டிருந்தவர் கவிஞர் பரிதிபாண்டியன். பரிதியின் சிற்றிதழ் முயற்சி எழுச்சி, புதிய வெளிச்சம் என்று தொடர்ந்தாலும், அதே இதழ்கள் அவ்வப்போது நின்று போனாலும் சிற்றிதழ் நடத்துவது பற்றிய அவரது சிந்தனை மட்டும் அணையாத பெருந்தீயாய் எப்போதும் சுடர்விட்டுக் கொண்டே இருந்தது என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

அடுத்து, எங்கள் இலக்கிய கொடையாளர் அம்ராபாண்டியன் நடத்திய கருக்கல் விடியும் இதழ், பரிதியைப் பல்வேறு தளங்களுக்குக் கொண்டு சேர்த்தது. அதிலும், அவர் எழுதிய சுட்டுவிரல் சிலபல பேரைச் சுடக்கூடச் செய்தது. அந்த இதழும் நின்றுபோனபோது பரிதி, ஒரு சில கால இடைவெளியில் கண்ணாமூச்சி ரே..ரே.. என்ற சிறுவர் இதழை தொடங்கினார். இரண்டு இதழ்கள் வந்தபிறகு, ரே..ரே..யைக் கத்தரித்துவிட்டு கண்ணாமூச்சி என்கிற பல்சுவை இதழை கொண்டுவந்தார். கண்ணாமூச்சி அலுவலகம் கூட பரிதியின் பாண்டியன் மளிகைக் கடைதான். மளிகைப் பொருட்களோடு கண்ணாமூச்சிக்கான உரையாடல்களும் கொட்டிக் கிடந்த காலமது. மளிகைக் கடைக்கு புளி, மிளகாய், மல்லி வாங்கும் பணத்தை அவர் கண்ணாமூச்சிக்காக செலவு செய்ததை நன்கறிவோம் நாங்கள். தனது ஆசிரியர் பணி ஓய்வுக்குப் பிறகு எழுத்து, புத்தகங்கள், பத்திரிக்கை நடத்துவது குறித்தே அவரது செயல்பாடுகள் இருக்கும். அந்த ஆண்டிலேயே திடுமென நிகழ்ந்துவிட்ட அவரது மரணத்துக்குப் பிறகு பரிதியின் மகன் பாலாவும், நானும் நண்பர்களும் இணைந்து அம்ராவின் துணையோடு பரிதிபாண்டியனின் நினைவு சிறப்பிதழாக ஒரு கண்ணாமூச்சியைக் கொண்டு வந்தோம். அத்தோடு அதுவும் நின்று போனது. கையறுநிலைக்கு ஆளானோம்.

2022 சனவரி தொடக்கத்தில் ஒருநாள் பாலா பேசினார். “வீட்டிலேயே இருங்க. நான் வருகிறேன். உங்களுடன் பேச வேண்டும்” என்றார். பேசினோம். அப்பாவின் குறிப்பேட்டை புரட்டிக் கொண்டிருந்தேன். அருணகிரியின் ஒரு கவிதையை எழுதி கட்டம்கட்டி கண்ணாமூச்சிக்காக என்று எழுதி வைத்திருக்கிறார். இதழ் நடத்துவது குறித்த பரிதியின் பெருந்தேடலைப் புரிந்து கொண்ட பாலா மீண்டும் கண்ணாமூச்சி நடத்துவோம் என்றார். எனக்கு பரபரவென மனசுக்குள் பற்றிக் கொண்டது.

நண்பர்களை தொடர்பு கொண்டோம். நடத்துவோம் என்றனர். அம்ராவிடம் பேசினோம் மிகுந்த மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டார். அருணகிரியைத் தொடர்பு கொண்டு பரிதி எழுதி வைத்த அருணகிரியின் கவிதையைச் சொன்னோம். மனுசன் மகிழ்ந்து நெகிழ்ந்து போய்விட்டார். மீண்டும் கண்ணாமூச்சி ஆட்டத்தை ஆடிப்பார்க்கலாமா என்றோம். உடன்பட்டார். அடுத்த அரைமணி நேரத்தில் அருணகிரியின் கடைவாசலில் பாலாவும் நானும். அவர் ஆசிரியராய் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முதலில் மறுதலித்தாலும், நீண்டநேரம் பேசி உடன்பட வைத்தோம்.

எங்களுக்கு பாண்டியன் மளிகைக்கடை போல, சன்மேன் டெய்லர்ஸ் கண்ணாமூச்சிக்கான அலுவலக முகவரி ஆனது. தொடர்ச்சியாக படைப்பாளர்களின், வாசகர்களின் ஒத்துழைப்போடு ஓர் ஆண்டை நிறைவு செய்கிறது கண்ணாமூச்சி. மிகுந்த பொருளியல் நெருக்கடிதான். இருந்தபோதிலும் தொடர்ந்து வரும். நன்கொடை, ஆண்டு கட்டணம், விளம்பர பங்களிப்பு, இலக்கிய கொடையாளர்களின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம். குறைகளை எங்களிடம் சொல்லுங்கள் திருத்திக் கொள்கிறோம். நிறைகளை மக்களிடம் சொல்லுங்கள் வளரட்டும்.

இன்னுமொன்று. கண்ணாமூச்சி அச்சாக்கம், வடிவமைப்பு, உடனுக்குடன் செய்து தருகின்ற விடா பப்ளிகேசன்ஸ் நண்பர் விடாரண்யத்தின் ஒத்துழைப்பு எங்களுக்கு கூடுதல் பலம். இனி வருங்காலங்களிலும் கண்ணாமூச்சி ஆட்டத்தில் உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

நம்பிக்கையுடன்
ஆசிரியர் குழு.

**கண்ணாமூச்சி**
மண்சார் இலக்கிய இதழ்
தனிச்சுற்று
திருவள்ளுவர் ஆண்டு 2053
ஐப்பசி - 2022
நிறுவனர்
**ப. பரிதிபாண்டியன்**
ஆலோசகர்
**அம்ரா பாண்டியன்**
ஆசிரியர்
**கோ.அருணகிரி**
ஆசிரியர் குழு
கலை பாரதி
த.ரெ.தமிழ்மணி
சா.தமிழ்ச்செல்வன்
ஞா.ஜெயக்குமார்
சா.சிவகுமார்
க.தங்கபாபு
பாலகுமரன் பரிதி
தமிழாதன்
இதழ் வடிவமைப்பு
விடா பப்ளிகேஷன்ஸ்
அட்டைப்படம்
நான் இன்டியன் டெய்லர்,
மன்னார்குடி
புகைப்பட உதவி
த.பிரகதீஸ்வர்
தொடர்பு முகவரி
சன்மேன் டெய்லர்ஸ்
9 அரிசி கடைத் தெரு, மன்னார்குடி
திருவாரூர் மாவட்டம்.
கைபேசி: 9976052585, 9655480092

படைப்புகளை அனுப்ப
வாட்ஸ் அப் எண் 9659335462
மின்னஞ்சல்
kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சியில் வெளிவரும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

# உள்ளே...

சிறுகதை:
**அம்மா சாமி**
- அ.குணசேகரன் | 09

கட்டுரை:
**முருக ஊர்தி**
- த.ரெ. தமிழ்மணி | 17

கட்டுரை:
**ரயிலும் ரயில் சார்ந்த இடமும்**
- இரா.மோகன்ராஜன் | 28

கட்டுரை:
**அப்பா சித்தப்பாவின் அரசியல் நினைவுகள்**
- அம்ரா பாண்டியன் | 39

சிறுகதை:
**ஒரு பேனாவின் அலறல்**
- மன்னை எம்.என்.கண்ணன் | 48

பதிவு:
**போகிறபோக்கில்**
- சின்னப்பயல் | 50

சந்தா விவரம்:
**தனி இதழ். 30**
**ஆண்டு சந்தா 150**
அஞ்சல் செலவு உட்பட
**மூன்றாண்டு சந்தா. 450**
அஞ்சல் செலவு உட்பட
சந்தா, நன்கொடை வளர்ச்சி நிதி தொடர்புக்கு
**கூகுள் பே 9659335462**

# உடன்போக்கு, வதுவைமணம், மறுதரவு

சு. இராமசுப்பிரமணியன்



சங்க காலத்திற்கு முன்பாகவே தமிழ்ச்சமூகம் தாய்வழிச் சமூகத்திலிருந்து, தந்தைவழிச் சமூகத்திற்கு மாறியிருந்தது. ஆண்கள் வெளியில் சென்று பொருள்தேடுவதும், பெண்கள் இல்லத்தைப் பராமரிப்பதும் என்று ஆகிவிட்டது. சமூகத்தில் பெண்களுக்கானக் கட்டுப்பாடுகளும் உருவாகி நிலைபெற்றுவிட்டன. அதனால்தான் களவு வாழ்க்கைக்குப் பெண்கள் தள்ளப்பட்டனர்.

களவு வாழ்க்கையில், தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் சந்தித்துக்கூடி இன்புற்றிருக்கின்றனர். தலைவன்தான் தலைவியைத் தேடிவருகிறான். தலைவன், தலைவியைப் பெண்கேட்டு, பெண்வீட்டார் சம்மதத்துடன் திருமணம் முடிந்து கற்பு வாழ்க்கைக்குள் நுழைந்திருக்கின்றனர்..

திருமணத்திற்குப் பெண்ணின் பெற்றோர் சம்மதிக்காதபோது, பெற்றோருக்கும், உற்றோருக்கும் தெரியாமல் தலைவி, தலைவனுடன் உடன்போக்காகச் சென்றதும் நிகழ்ந்திருக்கிறது. தலைவியைப் பிரிந்துசென்ற தலைவன் திரும்பி வராமல் இருந்ததும் நிகழ்ந்திருக்கிறது. களவு வாழ்க்கையில் மெய்யுறு புணர்ச்சியும் நடந்திருக்கிறது. அது தலைவி கருவுறுவதற்கான வாய்ப்பையும் தருகிறது. தலைவன் திரும்பி வரவில்லை என்றால், கருவுற்றத் தலைவியின் நிலை என்ன என்பது பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இருப்பதாகத் தெரியவில்லை.

**உடன் போகா உடன்போக்கு!**

பெண்கள் தாங்கள் விரும்பிய காதலர்களுடன் யாருக்கும் தெரியாமல் உடன்போக்காக ஏன் சென்றார்கள், அப்படித் தெரிந்தால் என்ன நிகழ்ந்தது, காதலர்கள் மாட்டிக்கொண்டால் என்ன ஆகும், உடன்போக்கில் சென்றப் பெண்ணின் வீட்டில் பெற்றோர், உற்றோரின் மனநிலை என்ன, ஆண்வீட்டில் அந்தப்பெண்ணை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டார்களா என்பது போன்ற கேள்விகள் நமக்கு இயல்பாகவே எழுகின்றன. தலைவியைக் காணவில்லை என்று தேடும் பெற்றோர் மிகுந்த மனவேதனை அடைந்திருக்கின்றனர். சான்றாக, ஒரு பாடல்.

“விளம்பழம் கமழும் கமஞ்சூற் குழிசிப்
பாசம் தின்ற தேய்கால் மத்தம்
நெய் தெரி இயக்கம் வெளில்முதல் முழங்கும்
வைகு புலர் விடியல் மெய் கரந்து தன் கால்
அரி அமை சிலம்பு தழீஇ பல் மாண்
வரி புனை பந்தொடு வைஇய செல்வோள்
‘இவை காண்தோறும் நோவர்மாதோ
அளியரோ அளியர் என் ஆயத்தோர்’ என
நும்மொடு வரவுதான் அயரவும்
தன் வரைத்து அன்றியும் கலுழ்ந்தன

(நற்றிணை 12: கயமனார்)

உடன்போக்கிற்குத் தலைவி ஒப்புக்கொள்கிறாள். பொழுதுபுலரும் வேளையில், தலைவி கூறிய இடத்தில்

தலைவன் வந்து காத்திருக்கிறான். பொழுது புலர்வதற்கு முன்பாகவே எழுந்து, தலைவனுடன் உடன்போக்காகச் செல்ல விரும்பிய தலைவி, மற்றவர்கள் அறியாவண்ணம் தனது உடலை மறைத்துக்கொண்டு, காற்சிலம்புகளைக் கழட்டி ஒரு பந்தில் சுற்றி, ஓர் இடத்தில் வைக்கிறாள். அந்த கணத்தில், அதனைப் பார்க்கும்போதெல்லாம் தனது நினைவு வந்து பெற்றோர்களும் சுற்றத்தார்களும் மனம் வேதனைப்படுவார்களே என்று கருதும் தலைவி தனது முடிவை மாற்றிக்கொண்டுவிட்டதாகத் தோழி, தலைவனுக்கு உரைக்கும் பாடல்.

**உடன்போக்கும் ஆணவக்கொலையும்?**

தலைவி உடனபோக்காகச் செல்வதுத் தெரியவந்தால், அந்தப் பெண்ணின் தமையன்மார்கள் விரட்டிச் சென்றுத் தலைவியை மீட்டுவருவதும் நிகழ்ந்திருக்கிறது.

ஒரு தலைவி தலைவனுடன் உடன்போக்காகச் செல்கிறாள். தோழி வழி அனுப்பிவைக்கிறாள். அந்தச் செய்தி எப்படியோ தலைவியின் தமையன்மார்களுக்குத் தெரிந்துவிடுகிறது. அவர்கள் காதலர்களை விரட்டிச் செல்கிறார்கள். தலைவியுடன் திரும்புகிறார்கள். இதனைப் பார்த்தத் தோழி தலைவியிடம், காட்டில் என்ன நடந்தது என்று கேட்கிறாள். அதில் ஓர் உட்கிடக்கையும் உள்ளது. தோழியின் கேள்விக்குப் பதில் சொல்வதுபோல் அமைந்த ஐங்குறுநூறு பாடல் நமக்கு வேறு ஒரு கேள்வியையும் எழுப்புகிறது.

**“அறம்சா லியரோ அறம் சாலியரோ**
**வறன்உண் டாயினும் அறம்சாலியரோ**
**வாள்வனப் புற்ற அருவிக்**
**கோள்வல் என்ஐயை மறைத்த குன்றே”**

**(ஐங்குறுநூறு, 312, பாலை ஓதலாந்தையார்)**

“ஒளிபொருந்திய வாளைப்போன்ற அருவியே, அருவிபாயும் குன்றே, இன்று என் உடன்பிறந்தவர்கள் எங்களைத் துரத்திவந்தபோது அவர்கள் கண்களில் படாமல், கொண்ட கொள்கையைக் கைவிடாத எனது தலைவனை (என் ஐயை) மறைத்து வைத்துக் காப்பாற்றிவிட்டீர்கள். கடுங்கோடை வந்தாலும், உலகமே வறண்டு வாடிப்போனாலும் நீர்வளம் குறையாமல் நீ அறம் நிறைந்து வாழ்க” என்று மலையையும் அருவியையும் வாழ்த்துகிறாள் தலைவி.

அருவிபாயும் குன்றில் தலைவன் மறைந்துகொண்டதால், தலைவியின் தமையன்மார் கண்களிலிருந்துத் தப்பிவிட்டான். அதற்கு நன்றிசெலுத்தும் வகையில், அருவி, கோடைக்காலத்திலும் நீரளவு குறையாமல் வளமுடன் இருக்கத் தலைவி வாழ்த்துகிறாள்.

தலைவன், தனது தமையன்மார்களிடம் இருந்துத் தப்பிவிட்டான் என்னும் செய்தியைத் தலைவி, தோழிக்குக் குறிப்பால் உணர்த்துகிறாள். அப்போது அவளிடம் இருக்கும் படபடப்பும் நமக்குத் தெரிகிறது. தலைவனைக் காப்பாற்றிய மலைக்கும் அருவிக்கும் தலைவி நன்றிசொல்வது, நமக்கு வேறு ஒரு கேள்வியை எழுப்புகிறது.

ஒருவேளை தலைவன் மாட்டிக்கொண்டிருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும் என்பதுதான் அந்தக் கேள்வி. தலைவியின் படபடப்பைப் பார்க்கும்போது, தமையன்மார்கள் கைகளில் சிக்கியிருந்தால், தலைவன் ஒருவேளை கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்று நாம் யூகிக்கமுடிகிறது. ஆதனை ஆணவக் கொலை என்று கருதலாம் அல்லவா?.

இன்று நம் சமகாலத்தில், காதல் காரணமான ஆணவக்கொலைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இன்றைய ஆணவக்கொலைகளுக்குப் பெரும்பகுதி சாதி காரணமாக இருக்கிறது. சிறுபகுதி மதம் காரணமாக இருக்கிறது. மிக மிகக் குறைவாகப் பொருளாதாரமும் காரணமாக இருக்கிறது.

சாதிப்படிநிலையில் கீழ் இருக்கும் காதலனே கொலை செய்யப்படுகிறான். ஆனால், சங்க காலத்தில் ஆணவக் கொலைகளுக்கு, குடிப்பெருமை காரணமாக இருந்திருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது. காரணம் எதுவாக இருந்தாலும், காதலர்களைத் துரத்திச் செல்வது, பெண்ணை மீட்டெடுப்பது, காதலனைக் கொலைசெய்வது (?) என்னும் இன்றைய நடைமுறை சங்ககாலம் தொட்டே தொடர்ந்து வருகிறது என்று

சந்தேகிக்க வைக்கிறது, ஐங்குறுநூறு 312 வது பாடல்.

**உடன்போக்கும் அறநெறியும்:**

உடன்போக்கு பற்றிய பாடல்கள், அகஇலக்கியங்கள் எங்கும் விரவிக்கிடக்கின்றன. பெரிதும் தோழியே உடன் நின்று உடன்போக்கிற்குத் துணைசெய்கிறாள். மகள் உடன்போக்காகச் சென்றுவிட்டாள் என்று அறிந்தத் தாய், தனது மகளின் பிரிவை நினைத்து வருந்தினாலும், அவள் எடுத்த முடிவு அறத்தின்பால் நிற்பதுதான் என்று தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக்கொள்வதும் உண்டு.

ஐங்குறுநூறில் பாலைத்திணையில் 'மகட்போக்கிய வழித் தாய் இரங்கு பத்து' என்னும் தலைப்பில் பத்துப் பாடல்கள் உள்ளன. அவற்றில் ஒன்பது பாடல்கள் நற்றாயும் (பெற்றவள்), ஒரு பாடல் செவிலித்தாயும் (வளர்த்தவள்) உரைப்பதுபோல அமைந்துள்ளன.

"அறநெறி இதுவெனத் தெளிந்தஎன்
பிறைநுதல் குறுமகள் போகிய சுரனே"

(ஐங்குறுநூறு, பாலைபாடல் 371, வரிகள் 4,5)

தான் விரும்பிய காதலனுடன் செல்வது, அறநெறி என்று தெளிந்துதான் எனது மகள் சென்றிருக்கிறாள், என்று நற்றாய் தன்னைத்தானே சமாதானம் செய்து கொள்வது போன்று அமைந்த வரிகள்

"பல்லூழ் நினைப்பினும் நல்லென்ஊழ
மீளி முன்பின் காளை காப்ப
முடியகம் புகாஅக் கூந்தலள்
கடுவனும் அறியாக் காடிறந் தோளே"

(ஐங்குநுறூறு பாலை – பாடல் 374)

"கொண்டை முடியும் அளவிற்குக்கூட கூந்தல் வளராத இளம்பெண் எனது மகள். எத்தனை விதமாகச் சிந்தித்து ஆய்ந்தறிந்தாலும், தலைவனுடன் உடன்போக்காகச் செல்வதே சிறந்த வழி என்று முடிவெடுத்து எனது மகள் சென்றுவிட்டாள்" என்று நற்றாய் சொல்வதிலிருந்து, வெறும் காம உணர்வால் மட்டுமே தூண்டப்பட்டு தலைவி, தலைவனுடன் உடன்போக்காகச் செல்லவில்லை என்பதும் நமக்குப் புரிகிறது.

**உடன்போக்கில் சென்ற தலைவி பற்றிய தகவல் பரிமாற்றம்:**

தலைவி உடன்போக்காகச் செல்லும் வழி ஆபத்து மிகுந்த காட்டுவழி. அதனைக் கடந்து தலைவன் ஊருக்கு, தலைவி சென்றுவிட்டாளா என்று நற்றாயும், செவிலித்தாயும் வழிப்போக்கர்களிடம் தெரிந்து, தெளிந்திருக்கின்றனர். உடன்போக்காகச் சென்ற தலைவியும், வழிப்போக்கர்கள் வழியாக, தான் தலைவனின் பாதுகாப்பில் ஊர்சென்றுவிட்டதாகத் தகவல் அனுப்பியிருக்கிறாள். அந்தக் காலங்களில், தகவல் தொடர்பு என்பதே வழிப்போக்கர்களாகத்தானே இருந்திருக்கமுடியும். இதனைத் தெரிவிக்கும் வகையில், ஐங்குறுநூறில் 'உடன்போக்கின் கண் இடைச்சுரத்து உரைத்த பத்து' என்று பத்துப் பாடல்கள் (381-390) உள்ளன.

"புங்கண் யானையொடு புலிவழங்கு
அத்தம்
நயந்த காதலர் புணர்ந்துசென் றனளே

நெடும்சுவர் நல்இல் மருண்ட
இடும்பை உருவுதின் கடும்சூல் மகளே"

(ஐங்குறுநூறு, பாடல் 386)

மகளைப் பிரிந்த தாய், நீண்ட சுவர்களைக் கொண்ட வீட்டிற்குள் இருந்து, மகளின் பிரிவாற்றாமையால் வாடிக்கொண்டிருக்கிறாள். காட்டுவழியில் தலைவி, தலைவனுடன் சென்று கொண்டிருப்பதைக் கண்டவர்கள், தலைவியின் நற்றாயிடம், "உனது தலைச்சூல்மகள், அவள் விரும்பிய தலைவனின் பாதுகாப்பில் யானையும், புலியும் வசிக்கும் ஆபத்தானக் காட்டைக் கடந்துத் தலைவனது ஊர்போய்ச் சேர்ந்துவிட்டாள். அதனால், கலங்காதிரு" என்று சொல்வதாக அமைந்திருக்கிறது இப்பாடல்.

**வதுவை மணம்:**

சங்ககாலத் தமிழ்ச்சமூகத்தில், வதுவை மணம் என்னும் திருமணம் எப்படி நிகழ்ந்தது என்பதற்கு அகநானூற்றில் நல்லாவூர்க்கிழார் பாடிய "உளுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை"

*என்று தொடங்கும் 86வது பாடலும், விற்றூற்று மூதெயினனார் பாடிய "மைப்பு அறப் புழுக்கின் நெய்க்கனி வெண் சோறு" என்று தொடங்கும் 136வது பாடலும் சான்று பகர்கின்றன. சங்ககாலத் தமிழ்த் திருமணங்கள், பிள்ளைகளைப் பெற்ற பெண்களாலேயே நடத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.*

**"நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்**
**எம்மனை வதுவை நன்மணம் கழிகெனச்**
**சொல்லின் எவனோ மற்றேவென்வேல்**
**மையற விளங்கிய கழலடிப்**
**பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே"**

**(ஐங்குறுநூறு, பாலைபாடல் 399)**

*உடன்போக்கில் சென்ற தலைவிக்கு, தலைவனின் இல்லத்தில், தலைவனின் தாய், காற்சிலம்பைக் கழிக்கும் சடங்கைச் செய்வதாக, அதனைப் பார்த்தவர்கள் வந்து தலைவியின் தாயிடம் சொல்கிறார்கள். அதனைக் கேட்ட தலைவியின் நற்றாய், அவர்களிடம், "எங்கள் வீட்டில் செய்ய வேண்டிய 'சிலம்பு கழி நோன்பை உங்கள் வீட்டில் செய்கிறீர்கள். அதன்பின் செய்யும் வதுவை மணத்தையாவது எங்கள் வீட்டில் செய்தால் என்ன என்று நீங்கள் தலைவனின் தாயிடம் கேட்டிருக்கலாமே" என்று மிகுந்த கவலையுடனும், மகளின் மீதானப் பாசத்துடனும், அன்புடனும் கேட்கிறார்.*

*திருமணத்திற்கு முன்பாகப் பெண்ணின் கால்களில் உள்ள சிலம்புகளைக் கழட்டும் சடங்கு, பெண்வீட்டில் நடந்திருக்கிறது என்றும், வதுவை மணம் என்னும் திருமணம் தலைவன் வீட்டில் நிகழ்ந்திருக்கிறது என்பதும் நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறது.*

**உடன்போக்கும், மறுவரவும்:**

*இப்படியாக, உடன்போக்கில் சென்ற தலைவி, சில காலம் கழிந்தபிறகு, தலைவனுடன் மீண்டும் தனது இல்லம் திரும்பியிருக்கிறாள். எனில், அவர்கள்மீது அவளது தமையன்மார்களுக்கு ஏற்பட்ட சினம் தணிந்துவிட்டது என்று நாம் பொருள்கொள்ளலாம்... காதலர்களாகச் சென்று, கணவன் மனைவியாகத் திரும்பியவர்களை இன்முகத்துடன் வரவேற்று விருந்தும் அளிக்கப்பட்டிருக்கிறது. இதனை 'மறுதரவுப் பத்து' என்னும் பத்துப் பாடல்கள் (391-400) உரைக்கின்றன.*

**"மறுவில் தூவிச் சிறுகரும் காக்கை**
**அன்புடை மரபின் நின்கிளையொடு ஆரப்**
**பச்சூன் பெய்த பைந்நிண வல்சி**
**பொலம்புனைக் கலத்தில் தருகுவென் மாதோ**
**வெஞ்சின விறல்வெல் காளையொடு**
**அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே"**

**(ஐங்குறுநூறு, பாலைபாடல் 391)**

*"தூய சிறகுகளை உடைய சிறிய காக்கையே, அழகிய கூந்தலை உடைய தலைவியும், அவளைக் கூட்டிச் சென்ற தலைவனும் விரைந்துத் திரும்பி வருமாறு கரைந்தால், உனக்கும் உன் கூட்டத்திற்கும், புதிய இறைச்சியைக் கலந்து ஆக்கிய பலிச்சோறைத் தங்கக் கலத்தில் தருவேன்" என்று தலைவியின் தாய் கூறுகிறாள்.*

**'துறந்தற் கொண்டு துயர் அடச் சாஅய்**
**அறம்புலந்து பழிக்கும் அண்கண் ணாட்டி**
**எவ்வ நெஞ்சிற்கு ஏமம் ஆக**
**வந்தனளோநின் மடமகள்**
**வெந்திறல் வெவ்வேல் விடலைமுந் துறவே"**

**(ஐங்குறுநூறு, பாடல் 393)**

*தலைவனுடன் உடன்போக்கில் சென்ற மகளை நினைத்துக் கவலைகொண்டிருந்த தாயிடம் சுற்றத்தார்கள் சொல்வதாக அமைந்த பாடல். "அம்மையே, அன்று உடன்போக்கில் செல்வது அறம் என்று சொன்னவர்கள்மீது கோபம்கொண்டாய். இன்று, உன் மகள் ஆற்றலும், வேலும் உடைய தலைவன் முன்னே வர, அவனைப் பின்தொடர்ந்து உன் மகளும் வந்து சேர்ந்துவிட்டதில் உனக்கு மகிழ்ச்சிதானே?" என்று தாய்க்கு ஆறுதல்மொழி கூறுகின்றனர்.*

*இன்றும் நம் தமிழ்ச்சமூகத்தில் தொடர்ந்துவரும் திருமணத்திற்குப் பிறகான மறுவீடு என்னும் சடங்கு, இந்த 'மறுதரவின்' தொடர்ச்சியாகவும் இருக்கக்கூடும். காரணங்களோடு நிகழ்ந்த பல காரியங்கள் இன்று வெறும் சடங்குகளாக மிஞ்சிவிட்டன எனலாம்.*

சிறுகதை

# அம்மா சாமி

## அ. குணசேகரன்

நாளுங்கிழமை என்றால் அம்மாவுக்கு வழக்கத்தை விட இரு மடங்கு சுறுசுறுப்பு வந்துவிடும். அதற்கேற்ப வேலைகளும் பல மடங்கு குவிந்து விடும். அத்தனையையும் ஒத்தையாளாக இருந்து சமாளிக்கும். அப்போதெல்லாம் அம்மாவைப் பார்க்க கவலையாக இருக்கும், வியப்பாகவும் இருக்கும்.

அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் போல இது இருந்தால் என்ன? ஏன் இப்படிச் செய்து துன்பத்தைச் சுமக்கிறது? என்று நினைத்துக் கொள்வேன். அதோடு எனக்கும் தம்பி ஞானசேகருக்கும் அம்மாவிடமிருந்து பலவிதக் கட்டளைகள் வந்து குவிந்து கொண்டே இருக்கும்.

பெரிய புள்ள நீ அடுப்பப் பாத்துக்க.

ஞானசேகரு நீ இங்க வா... அந்தப் பரணில ஏறி, ரெண்டு ராட்டி எடுத்துப் போடு.

வெங்காயம் உறி... பூண்டு உறி...

இந்தக் காய நறுக்கு மாவு சலிச்சு குடு...

அடுப்புக்கு ரெண்டு சொனை குச்சு எடுத்துட்டு வா...

இப்படிப் பலப்பல கட்டளைகள்.

நாங்களும் தட்டாமல் சளைக்காமல் செய்வோம்.

அதிரசமோ முறுக்கோ செய்யும் போது மட்டும் அப்பாவைக் கூப்பிட்டு, இந்தா... இதக் கொஞ்சம் தட்டிப் போடு... அச்ச எடுத்து இந்த மாவ புழுஞ்சி வுடு... என்று கட்டளைகளைப் பிறப்பிக்கும்.

அப்பாவுக்கு அடுப்படி வேலை என்றால் இந்த இரண்டு வேலைகள் மட்டும் தான். அப்பப்போ விறகு பொளந்து கொடுக்கச் சொல்லும். வேறு எதுவும் செய்யவும் தெரியாது. அம்மாவும் அதற்கு மேல் அப்பாவுக்கு எந்த வேலையும் விடாது.

ஒவ்வொரு பண்டிகைக்கும் என்னென்ன செய்து முடிக்க வேண்டுமோ அத்தனையையும் சாமிக்குப் படைக்கும் நேரத்திற்குள் செய்ய வேண்டும் என்ற விறுவிறுப்போடு செய்யும். அது மட்டுமில்லாமல் படைப்பதற்கு முன் அவற்றை நாங்கள் எடுத்துச் சாப்பிட்டு விடக்கூடாது என்பதிலும் ஒரு கண் வைத்துக் கொண்டே இருக்கும்.

எல்லாம் செய்து முடித்தவுடன் கூட்டிப் பெருக்கிச் சுத்தப்படுத்தப்பட்டு இருக்கும் அறை வீட்டுச் சாமிக்கு எதிரில் பெரிய இலை போட்டு எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டுத் தூபக்காலில் நெருப்புமூட்டி வைத்து விட்டு வெளியே வந்து “மாமா வந்து படைங்க” என்று தாத்தாவைக் கூப்பிடும்.

அவரும் அந்த அழைப்புக்காகவே காத்திருந்தவர் போல, தோளில் போட்டிருந்த துண்டை எடுத்துக் கட்டிக்கொண்டு படைக்கத் தொடங்குவார். “ஓம் புள்ளைகளையும் வீட்டுக்காரனையும் உள்ள வரச்சொல்லுமா” என்பார்.

எல்லாரும் உள்ள வாங்க என்று அம்மா சொன்னதும் நாங்களெல்லாம் உள்ளே போய் கைக்கட்டி நிப்போம். அப்பா வராது. வெளியிலேயே உட்கார்ந்திருக்கும். அப்பாவுக்குச் சாமி படைக்கிறது, கும்பிடறது இதிலெல்லாம் அவ்வளவா நாட்டம் கிடையாது. ‘நீங்க போங்க’ என்று எங்கள அனுப்பி விட்டு வெளியிலேயே இருக்கும்.

அவன் வரலியா என்று தாத்தா கேட்டால், ஆமாம் அது எங்க வரப்போவுது... எப்பதான் வந்துது... அவங்க கச்சிக்கு சாமில்லாம் ஆவாது. நீங்க படைங்க...

தாத்தா படையலையெல்லாம் முறையாகச் செய்வார். வீட்டுப் படையலைக் கூட ஒரு கோயில் பூசாரி மாதிரி அழகா செய்வார். தேங்காய் உடைத்துச் சூடம் கொளுத்தி சாமிக்குக் காட்டிய பிறகு எங்க எல்லாரிடமும் காட்டி நாங்க தொட்டுக் கும்பிட்ட பிறகு எல்லாருக்கும் திருநீறு பூசி விடுவார். திருநீறு பூசும்போது ஒவ்வொரு முறையும் “நீ நல்லா இருக்கணும்” என்று அம்மாவுக்கும் “நல்லா படிச்சி மின்னுக்கு வரணும்”னு எங்களுக்கும் பூசி விடுவார். கைகட்டி நின்று கொண்டிருந்த நாங்களும் வலது கை விரல்களால் வாயைப் பொத்திக் கொண்டு தாத்தாவிடம் நெத்தியைக் காட்டிப் பூசிக் கொள்வோம்.

அறை வீட்டுச் சாமிக்குப் படையல் முடிந்தவுடன் “ஆயி ஓம் மாமியாருக்கு ஆணியில் கொஞ்சம் பூப்போட்டு விட்டு அவளுக்கும் ஒரு எல போட்டு வையி” என்று தாத்தா சொல்லி முடிப்பதற்குள் அம்மா அடுத்த வேலையாக அதைச் செய்து முடித்திருக்கும்.

“ஆயாதான் இல்லியெ தாத்தா... அவங்களுக்கு ஏன் எல போடச் சொல்ற.. அவங்க வந்து சாப்புடவா போறாங்க” என்று ஒரு நாள் நான் தாத்தாவிடம் கேட்டு விட்டேன். அதற்கு அவர் “அது அப்புடி இல்லப்பா... எல்லாம் ஒரு நெனப்பு தான்... நம்மோட இருந்தவங்க இப்ப இல்லாவிட்டாலும் அவங்களும் நம்மளோட இருந்து சாப்புடுறதா ஒரு நெனப்பு. அன்றாடம் இல்லாட்டினாலும் ஒரு நாளுங்கிழமையிலாவது அவங்கள நெனச்சு அவங்களுக்கு ஒரு மரியாதை செய்யுறது தான் வேற என்ன. அப்பதானே பந்தம் மறந்து போகாம இருக்கும். சாமிக்குப் படைக்கிறோமே, சாமியா வந்து திங்குது. அதுபோலத் தான். செத்தவங்க நம்ம வீட்டுச் சாமி மாதிரி” என்று தாத்தா பெரிய விளக்கம் கொடுப்பார். “இதற்குப் பிறகு அம்மாவிடம் ஆயாவுக்கு...” என்று நினைவூட்டும் நிலை இயல்பாகி விட்டது.

படையல் முடிந்து தம் இடுப்பில் கட்டிய துண்டை அவிழ்த்துத் தோளில் போட்டுக் கொண்டு வெளியில் வந்து எல்லாருக்கும் சாப்பிடக் கொடும்மா என்று அவர் சொன்னபிறகு தான் எல்லாம் கிடைக்கும்.

தாத்தா இருந்தவரை ஒவ்வொரு நல்ல நாளும் இப்படித்தான் கழிந்தது. தாத்தாவுக்குப் பிறகு எனக்குத் தெரிந்தவரை நான் படைப்பேன். அம்மா திருநீறு பூசி விடும். ஒரு கொறையும் இல்லாம எல்லாரும் நல்லா இருக்கணும் என்று சொல்லி அம்மா பூசி விடும் போது அதில் பெரிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் தொனிக்கும்.

அப்பா இதையெல்லாம் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை. அப்படி ஒரு நாளும் எங்களுக்கு எதுவும் பூசிவிட்டதுமில்லை. தாத்தாவுக்குப் பிறகு அம்மாதான். சில ஆண்டுகளுக்குப் பிறகு நானும் கொஞ்சம் கொஞ்சமாக அப்பாவைப் போல ஆகிவிட்டேன். அம்மாவும் ஞானசேகரும் படையலைப் பார்த்துக் கொண்டார்கள். நான் வெளியில் இருந்து கொண்டு, “சீக்கிரம் முடிங்க பசிக்குது” என்று சொல்கிற அளவுக்கு ஆகிவிட்டேன். மூளைக்குள் சிலது போகும் போது மனமும் பழக்கங்களும் மாறித்தானே போகும்.

அம்மா அது பற்றியெல்லாம் பெரிதுப்படுத்திக் கொள்வதில்லை. நாளுங்கிழமையும் எதையும் வேண்டாமென்று தட்டக்கூடாது. இந்தா இதைப் பூசிக்க என்று என் விருப்பத்தைப் பற்றியெல்லாம் நினைக்காமல் வாஞ்சையோடு என் நெற்றிக்குத் திருநீறும் குங்குமமும் இட்டுச் செல்லும்.

அம்மா அந்தப் பக்கம் போனவுடன் புறங்கையால் அவற்றை அழித்து விடுவேன். திரும்ப என் நெற்றியைப் பார்க்கும்போது அவை இல்லாமல் இருப்பதைப் பார்த்து “யாம்ப்பா இப்படி பண்ற” என்று நொந்து கொள்ளும். அம்மா பூசிவிடுவதும் நான் பிறகு அழித்துக் கொள்வதும் இடையறாத நிகழ்வாக ஒவ்வொரு முறையும் நடக்கத்தான் செய்தது.

எனக்குத் திருமணம் ஏற்பாடாகி வீட்டில் பந்தல்கால் முகூர்த்தம் தொடங்கி நலுங்கு போன்ற சிறு சிறு சடங்குகள் செய்வதற்காக அம்மா ரொம்பவும் கெஞ்சி கேட்டுக் கொண்டதற்காகத் திருமணம் முடியும்வரை மறுப்பு சொல்லாமல் வாய் பொத்தி பணிவுடன் அம்மா பூசிய திருநீறை ஏற்கும் போது அம்மாவுக்குள் விளைந்த அன்பையும் நான் நன்றாக இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தையும் புரிந்து கொள்ள முடிந்தது. அதன்பிறகு வழக்கம்போல அம்மா பூச நான் அழிக்க அது தொடர்ந்தது. அப்போதெல்லாம் “ஏம்பா இப்படி பண்றீங்க. அவங்க ஆசையா பூசறத இப்படி பண்ணலாமா?” என்று கலை ஒருமுறை சொன்னபோது “அது அப்படித்தான், நீ அடுத்து ஆக வேண்டியத பாரு ஆயி” என்று அம்மாவே அதற்கு ஒரு சமாதானத்தைச் சொல்லி விடும்.

என் திருமணத்திற்குப் பிறகு அம்மாவின் வேலைகளைக் கலை பார்த்துக் கொண்டதால் அதுக்குப் பெரிய விடுதலை என்று தான் சொல்லணும். இருந்தாலும் பலகாரங்கள் செய்வதில் மாவுகள் தயார் செய்வதில் உருண்டைகள் பிடிப்பதில் எல்லாம் வேலைகளைப் பகிர்ந்துகொள்ளும். பிள்ளைகள் வந்தபிறகு அவர்களைக் கூப்பிட்டுப் படையல் போடும் போது அப்பாவுக்கு நேர்ந்தது

போலவே எனக்கும் நேர்ந்தது.

ஏன் ஆச்சி படைக்கிற இடத்துக்கு அப்பா, அய்யாவையெல்லாம் கூப்புடாம எங்கள மட்டும் கூப்பிடுறீங்க?

ம்ம்... அவங்களெல்லாம் அறிவாளிங்க... அவங்களுக்கு சாமி, தெய்வம் எல்லாம் கிடையாது... அதெல்லாம் அவங்களுக்குப் புடிக்காது. அவங்க கெடக்குறாங்க நீங்க வாங்க... என்று கூறிவிட்டு எப்போதும் போல் தொடங்கும். எங்களிடம் காட்டச் சொல்லி பாப்பு கையில் சூடத் தட்டைக் கொடுத்து விட்டு எங்களுக்குத் தரும சங்கடத்தை ஏற்படுத்தும்.

சின்ன பிள்ளை... அதைக் குழப்பி விடுவானேன்... என்று தொட்டுக் கும்பிடுவது போல் பட்டும் படாமல் நான் தொட்டுக் கொள்வேன்... அப்பா அப்படிச் செய்யாமல் "சரி சரி பாத்தாச்சு... நீங்க போயி கும்பிடுங்க" என்று சொல்லி அனுப்பும்.

"போங்கய்யா நீங்க சரியில்ல. ரொம்ப மோசம்". பாப்பு சொல்லிவிட்டு உள்ளே போகும் போது அப்பா சிரித்துக் கொள்ளும், இதன் பொருட்டு யாரும் காயம்படக் கூடாது என்பதற்காக அவ்வப்போது நான் கொஞ்சம் இணங்கிப் போய் விடுவேன். ஆனால் அப்பா அப்படி இல்லாமல் எதிலும் எப்போதும் கறாராக இருந்து விடும்.

ஒவ்வொரு முறையும் அலுப்பே இல்லாமல் இந்தக் காட்சி வீட்டில் அரங் கேறும் போதெல்லாம் ஒரு இனம்புரியாத மகிழ்ச்சி இருக்கத்தான் செய்தது.

என்ன துன்பம் வந்தாலும் நல்ல நாள்களை விடாப் பிடியாகக் கொண்டாடுவதும் படையல் போட்டு குடும்பத்தாருக்குத் திருநீறு பூசி குங்குமம் இட்டு பிறகு எல்லோரும் ஒன்றாக அமர்ந்து உண்பது என கடந்து போன நாள்களின் மொத்த மகிழ்ச்சியிலும் அம்மாவே முதன்மையாக இருந்திருக்கிறது.

அம்மாவைக் குளிப்பாட்டி வழியனுப்பி வைப்பதற்காக நீர் எடுத்து வைத்திருந்த துறையில், சூழ நின்ற உறவுகளுக்கும் எனக்கும் தம்பிகளுக்கும் நெற்றியில் நெஞ்சில் கைகளில் எனப் பட்டைப் பட்டையாகத் திருநீற்றுப் பட்டைகளைப் பன்னீர் மாமா போட்டு விட்ட போது, எந்த மறுப்போ முனுமுனுப்போ இல்லாமல், தலையை அங்கும் இங்கும் ஆட்டாமல் அசைக்காமல் நேந்துவிட்ட ஆட்டுக்கிடாய் போல அவற்றை ஏற்றுக் கொண்டிருந்தேன். இனி இந்த நெற்றியில் அம்மாவால் பூச முடியாததை அம்மாவுக்காக ஏற்றுக்கொண்ட போது 'அம்மா என்னை மன்னித்து விடும்மா' என்று சொல்லிக் கதற வேண்டும் போல் இருந்தது. சாமிக்காகக் கூட பூசிக்கொள்ளாத அப்பா இன்று எதுவும் பேசாமல் அம்மாவுக்காகப் பூசிக்கொண்டு நின்றதைப் பார்க்கும் போது என்னைப் போல் அப்பாவும் நினைத்திருப்பாரோ என்றும் தோன்றியது.

நெற்றியில் பட்டையுடன் அம்மாவை வைத்திருந்த கைப்பாடையைக் குடும்பத்தார் எல்லோருடனும் சேர்ந்து நான் சுற்றி வந்ததைப் பார்த்த நண்பர்கள் சிலர், "பார்த்தீர்களா... என்ன படிச்சு என்ன பயன். இன்னும் கொஞ்சம் கூட பகுத்தறிவு இல்லாமல் பட்டைகிட்டையெல்லாம் இதுதான் சனாதனத்தின் வெற்றி" என்று தங்களுக்குள் விமர்சித்துக் கொண்டதாகக் கூட அறிந்தேன்.

அப்போது அதைப்பற்றியெல்லாம் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. அம்மாவுக்காகச் செய்யப்பட்ட சடங்கு அது நம்பிக்கையோ மூட நம்பிக்கையோ... அம்மாவுக்காக என்ற உணர்வில் எந்த மறுப்பும் இல்லாமல் மனம் ஏற்றுக்கொண்டு விட்டது.

இன்னும் சற்று நேரத்தில் இனி அம்மாவைக் காண முடியாத நிலை ஏற்படப்போகிறதே என்று எண்ணி மனம் நெகிழ்வுற்றிருந்ததே தவிர பகுத்தறிவுப் பக்கமெல்லாம் போகவில்லை. அம்மா என்ற உணர்தலுக்கு முன் வேறெதற்கும் இடமில்லாத நிலையில்தான் மனம் பயணப்பட்டுக்கொண்டிருந்தது.

இதுவும் கூட ஒரு மூடநம்பிக்கையோ... இருந்து விட்டுப் போகட்டுமே. நம்பிக்கை, மூடநம்பிக்கை எல்லாம் வேறு எவரையும் காயப்படுத்தாமல் இருந்தால் இருந்து விட்டுப் போவதில் எனக்கொன்றும் பெரிய தடையில்லை. என் நிலையும் அப்படித்தான். அவற்றை நான் ஏற்காமல் இருந்திருந்தால் என் தம்பிகளும் உறவுகளும் காயப்பட்டிருப்பார்கள். என்னையும் காயப்படுத்தியிருப்பார்கள். உறவோடு ஒன்றிப் போனது கூட ஒருவகையில் மனத்துக்கு ஆறுதலாகத்தான் இருந்தது.

இப்போதும் கூட வீட்டில் படையல் நடக்கிறதா... சாமி கும்பிடுகிறார்களா என்று நான் பார்ப்பதில்லை. என் நெற்றியில் யாரும் திருநீறு பூசுவதும் இல்லை. அது ஒரு பொருட்டும் இல்லை.

இருந்தாலும் ஒவ்வொரு வாரமும் வீட்டை விட்டு ஊருக்குக் கிளம்பும்போது என்னையே பார்த்துக் கொண்டு இருப்பது போன்று இருக்கின்ற அம்மாவின் படத்தை ஒரு முறை பார்த்துவிட்டு மனசுக்குள்ளேயே “பத்திரமா இரும்மா” என்று சொல்லிவிட்டுத்தான் போகிறேன். படத்துக்குக் கீழுள்ள திருநீற்றுக் கிண்ணத்திலிருந்து கொஞ்சம் எடுத்துப் பட்டும் படாமல் இட்டுக் கொண்டு செல்லும் போது அம்மாவே இட்டு அனுப்பி வைப்பதாக ஒரு உணர்வு. இதைப் பார்த்துக் கொண்டிருந்த கலை பிறகு அந்த இடத்தில் அந்த நேரத்திற்கு ஒரு கைவிளக்கையும் ஏற்றி வைத்து விடுகிறது. எதற்கும் எந்த மறுப்புமில்லை என்னிடம்.

அன்று ஏதோ ஒரு அவசரம். தொடர் வண்டியைப் பிடிக்க வேண்டும் என்ற பரபரப்பில் நான் பாட்டுக்குத் தோள் பையை எடுத்துக் கொண்டு கிளம்பி வாசலுக்கு வந்து விட்டேன். என் நெற்றியைப் பார்த்த கலை, ‘என்ன சாமி கும்பிடலையா’ என்று கேட்டது. நானும் ‘எந்த சாமியை’ என்று கேட்டு விட்டேன்.

அம்மாவைத்தான்.

ஆமாங் கலை... என்று திரும்பவும் உள்ளே சென்று வழக்கம்போல் அம்மா படத்தை வணங்கி விட்டுக் கிளம்பினேன்.

அம்மா என்னைப் பார்த்து சாமி கும்பிட அழைத்த போதெல்லாம் விலகி ஒதுங்கி நின்ற நான் இன்று அம்மாவையே கும்பிடத் தொடங்கி விட்டேன். ஆமாம் எல்லா நிலையிலும் என்னை ஆக்கியது என் அம்மா தானே... எனக்கு இனி அம்மா சாமி தான். ●

---

**கவிதை**

# ஞாபகம் வருதே...

என்னுடன்
ஒன்பதாம் வகுப்பில் படித்தாள்.
வகுப்பறையில் பார்ப்பதும்
சிரிப்பதுமாக இருப்பாள்.
கரும்பலகையில்
என் பெயரையும்
அவள் பெயரையும் எழுதி
‘லவ்’ என்று எழுதி இருந்தது.
எவனோ தெரியவில்லை..
எனக்கு அதிர்ச்சியாகவும் இருந்தது..
மகிழ்ச்சியாகவும் இருந்தது..!

நாலு நாட்கள்
அவள் பார்ப்பதும் சிரிப்பதும் தவிர்த்தாள்..
ஒரு நாள் யாரும் அறியா வகையில்
என் கையில்
ஒரு காகிதம் திணித்தாள்..!
அதில் ‘லவ்’என்று எழுதப்பட்டிருந்தது
ரொம்ப நாள் வைத்திருந்தேன்..
எப்படியோ காணாமல் போய்விட்டது..
அடுத்த ஆண்டு
அவளும் காணாமல் போய்விட்டாள்..!
அவளும் நானும்
ஒரு வார்த்தையும்
பேசிக்கொண்டதில்லை..!
எப்போதாவது நினைவில் வருவாள்..
முகம் கூட புகைபடிந்து விட்டது..!

இன்று என் பேத்திக்கு
பெயர் சூட்டு வைபவம்.
என்னென்னவோ
பெயர் சொன்னார்கள்.
நீங்கள் சொல்லவில்லையே
அப்பா என்ற மகனை நோக்கி
‘மைதிலி’ என்றேன்.
அப்படித்தான்
சொல்லி இருப்பேன் போல..

நெஞ்சில் இரு கையும் வைத்து
‘ஜீசஸ் ‘என்றாள் மருமகள்..!

**ப. பரிதிபாண்டியன்.**

கட்டுரை

# எக்சீமா என்றொரு காதலி!

## கோ நடராசன்

என் இளமைக்காலம் முதல் என்னுள் உயிரின் உயிராய், குருதியில் குருதியாய் உடலில் உடலாய் ஒட்டிப் போனவள் எக்சீமா.

எனது பதின்ம உச்சத்தில் அவள் என்னோடு ஒரு அட்டையைப் போல் ஒட்டிக்கொண்டாள். நான் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டேன். எனது விரல்களால் அவளை இதமாக வருடும்போது நெகிழ்ந்து விடுவாள். எல்லை மீறும்பொழுது காயத்தை ஏற்படுத்தி விடுவாள். சூட்டுக் கொப்புளத்திலிருந்து வெளியேறும் தண்ணீர் போல ஊழ் வெளியேறும்.

அவளிடமிருந்து நான் விடுபட வேண்டும் என்று எடுத்த எல்லா முயற்சிகளும் தோற்றுப் போயின. என் கல்லூரி நாட்களில் டினோவேட் தைலத்தையும் மரப்பு மாத்திரைகளையும் பயன்படுத்தி அவளை துரத்த முயற்சி செய்தேன். அச்சம் கொண்டவள் முதல் இரண்டு வாரங்களில் காணாமல் போனாள்.

எனக்குப் பிடித்த பல விடயங்கள் அவளுக்கு பிடிக்காமல் போனது. குறிப்பாக கத்தரி, கருனை, தட்டை, மொச்சை, இறைச்சி, கடலுணவு என்று பட்டியல் நீளும். இவற்றையெல்லாம் என்னால் ஒதுக்க முடியாமல் போனது. ஒவ்வாத உணவுகளையே விரும்பி உண்டதால் அவள் மீண்டும் மீண்டும் ஒட்டி கொண்டாள்.

திருமண ஏற்பாட்டின்போது இரண்டு மூன்று வீடுகளில் காதல் வடுக்களை பார்த்துவிட்டனர். என் எக்சீமாவை ஓட ஓட துரத்தினால்தான் திருமணமே நடக்கும் என்ற பரிதாப நிலை.

கிருட்டிணாபுரம் பால் பண்ணையில் பணியாற்றிய தமிழரசன், நாமக்கல்லில் இருக்கும் கண்ணகி மருத்துவமனையை பரிந்துரைச் செய்தார். மருத்துவர் பார்த்துவிட்டு காதல் செய்த காயங்கள் மீது, கட்டைவிரல், பாதம், மூட்டு என்று பல இடங்களில், பல்வேறு மருந்துகளை கலந்து, ஊசி குத்தினார். இரண்டு மூன்று நாட்களில் எக்சிமா இருந்த இடம் தெரியாமல் ஓடிப் போனாள். கரப்பான் என்று சித்த மருத்துவர்கள் கூறிய, கருகருத்துப் போன இடங்கள் எல்லாம் மிகவும் வெளிறிப் போனது வெண்குட்டம் போல். நான் அச்சத்தால் என்ன செய்வது என்று தெரியாமல் வெடவெடத்து போனேன். பெண் பார்க்கும் படலத்தை தள்ளிப்போட்டேன். நல்வாய்ப்பாக ஒரு மாதத்தில் பழைய இயல்பான நிறத்திற்கு வந்தது எக்சீமா தந்த முத்த எச்சங்கள்.

திருமணம் முடிந்தபிறகு விருந்திற்கு போகும் இடங்களில் எல்லாம், எல்லா இறைச்சி வகைகளையும் ஒரு வெட்டு வெட்டியதால் அடுத்த ஆறு மாதத்தில் என் காதலி என்னை மீண்டும் ஆட்கொண்டாள். காதலர்களில் பலவிதம் உண்டு. விலங்கு ஆர்வலர்கள், பறவை காதலர்கள், பட்டாம்பூச்சி காமுகர்கள், பச்சைக்கொடிப் போராளிகள், இயற்கையை துய்ப்பவர்கள், காடோடிகள், நாடோடிகள், கடலோடிகள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் எக்ஸிமாவிற்கு என் மீது இருந்த காதல் மனித இனம் தோன்றியது முதல் இன்று வரை குருதியில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஒருவகை மரபீனி காதல்.

மயிர் இல்லா மனித குரங்கு என்று ஒரு நூல் இருக்கிறது. காம இச்சையில் மனிதன் மட்டும் ஏன் பிற உயிரினங்கள் இருந்து வேறுபட்டு இருக்கிறான் என்று மிக ஆழமாக அலசும் ஆய்வு நூல் அது. மனிதனுக்கு மட்டுமே காமவெறி கட்டற்று இருப்பதாக சொல்லும் அந்த

ஆய்வு மனிதனை உயிரினங்களின் கடைசி அடுக்கிற்கு தள்ளி விடுகிறது. நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன்னடையும் கொண்ட செம்மாந்த இனம், இந்த விழுமியத்தில் பெரும் மனப்பிறழ்ச்சிக்கு ஆளாகி இருப்பதாக அந்த ஆய்வு சொல்கிறது. கணுக்கால் கூட கருப்பு இல்லை என்று இவன் உற்று நோக்கும் இந்த கயமைத்தனம் தான் பிற மனித இனங்களை எல்லாம் கொன்றொழித்து ஓமோசேப்பியன்களை மட்டும் வாழ வைத்ததாக அந்த ஆய்வு அடித்துக் கூறுகிறது.

எக்சீமா இந்த ஆய்வுக்கு எல்லாம் அப்பாற்பட்டவள். அவள் ஒரு தொன்ம அழகி. 3000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ராம்சே என்ற பாரோ அரசனின் சடலம் பிரமிடுகளில் பதப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு இருந்தது. அவனோடும் உயிரோடு உயிராக உடலோடு உடலாக ஒட்டி உறவாடி இருக்கிறாள் பாருங்கள் ஒரு எக்சீமா. நாம் அரசர்களைப் பற்றி எழுதிய அளவுக்கு அரசிகளைப் பற்றி எழுதாமல் விட்டு விட்டோமோ என்ற கவலை தான், என் எக்சீமாவை, என்னை ஆட்கொண்ட அந்தப் பேரழகியை, எனை ஆட்டி படைத்து ஆட்சி செய்யும் அந்த பேரணங்கை இலக்கியத்தில் எழுத வைத்து பெரும் புரட்சி செய்ய வைத்தவள். தேன் பொறி என்ற பொருளில் ஒரு ஆங்கில சொல் இருக்கிறது. தேடிப் பாருங்கள். இராச மாதா, இராச நர்த்தகி, இராச மருத்துவச்சி, என்ற வரிசையில் இராச என்ற முன்னொட்டோடு ஆயிரம் சொற்களாவது பெண்களின் மென்மையை அல்லது மேன்மையை எடுத்துரைக்க இருக்கிறது. என் எக்சீமாவை இந்த பெயர்களுள் கொண்டு வந்து அடிமையாக்கி விடாதீர்கள். இவள் 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நமது முதுபெரும் கிழவி இழைமணி ஈவாவின் (Mitochondria Eva) அவ்வையாக கூட இருக்கலாம்!

இப்பொழுது அவள் புதிய வடிவில் தன் தொல்லைகளை தர ஆரம்பித்தாள். தன்னை இதமாக வருடுமாறு கட்டளையிடுவாள். கைகள் எல்லை மீறும்போது வருடிய இடங்களிலெல்லாம் நகக்கீரல் காயங்களும், சில நேரங்களில் குருதியில் நோய் தொற்றுமாக மாறி, நெறிக் கட்டிக் கொள்ளும். இப்பொழுது கூடுதலாக நோயெதிர்ப்பிகள் எடுக்க வேண்டும். என் காதலிக்கு ஆங்கில மருந்துகள் என்றால் அறவே பிடிக்காது. ஏங்லோ போபியா என்பார்களே?! அந்த நோய் போலும். குறிப்பிட்டுச் சொல்லப் போனால் நோய் எதிர்ப்பிகள் அவளை வாந்தி எடுக்க வைத்து என்னைக் காட்டி கொடுத்து விடும்.

வரும்போகும் உறவினர்கள், நண்பர்கள், ஏன் அறிமுகம் இல்லாதவர்கள்கூட என் காதல் நோயை கண்டுபிடித்துவிடுவார்கள். அதன் அறிகுறி அப்படி இடம் பொருள் ஏவல் எதுவும் இல்லாமல் நான் அவளை வருடிக் கொண்டிருக்க வேண்டும். பார்வையாளர்களை நெருடிக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் சொல்லும் அறிவுரைகளை, பரிந்துரைகளை, அப்பப்பா!! நினைத்தால் உடல் அல்ல மூளையே சிலிர்க்கும் துன்பவியல்கள். சிறிய நங்கை பெரிய நங்கை, கீழாநெல்லி, மேலாநெல்லி, குப்பைமேனி, துளசி, முருங்கை என்று அவள் பூசி குளித்த மூலிகைகள் மட்டும் 200 வகைகளாவது இருக்கும். இவைகளால் அவளது பொலிவு கூடிக்கொண்டு போவதே அல்லாமல் ஒருநாளும் அவள் பொலிவு குன்றியதே இல்லை! மிகவும் பரிதாபப்பட்டு என் மனைவி ஒரு பரிந்துரை செய்தார்.

இஸ்லாமிய சித்த மருத்துவர். பெரம்பலூருக்கு அருகில் ஒரு மனை வைத்திருந்தார். தன்னை பரம்பரை மருத்துவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு, தானே பலவித பற்பங்களை தயாரிப்பதாகக் கூறி என்னிடம் சிலவற்றைக் காட்டினார். சில நேரங்களில் ஏதாவது உலோகத்தை உருக்கி உருக்கி, மூலிகை சாற்றில் முக்கி முக்கி, எடுத்து பற்பம் தயாரிப்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். பொன் மருத்துவம் செய்வதில் அவர் நிபுணர். நம்பிக்கை தரும் விதமாக பேசினார். நாடி பிடித்து பார்த்த அவர் மூலிகை மருத்துவம் செய்ய வேண்டுமாயின் முதலில் குடல் சுத்தி செய்ய வேண்டும் என்று எனக்கு அதற்கான மருந்தை ஒரு இலையில் வைத்து மடித்து கொடுத்து, நன்றாக மென்று விழுங்குங்கள்

என்றார். இரண்டு வகைப் பற்பங்களையும் சில மூலிகை மாத்திரைகளையும் பரிந்துரை செய்தார். அவர் பரிந்துரை செய்த கருடன் தைலத்தின் பயன் அளப்பரியது. ஆனால் பெருந் தொகையை கட்டணமாக வாங்கிக் கொண்டார். இதில் பெரும் வியப்பு என்னவெனில் முதல் வாரத்திலேயே காதலி ஓட்டம் பிடித்தாள்.

மீண்டும் வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதையாய், நான் எக்சீமாவிடமிருந்து கிடைத்த தற்காலிக விடுமுறையை தவறுதலாக பயன்படுத்தி, இப்போது மதுவிடம் அடிக்கடி போய் வந்ததால் என் காதலி சக்களத்தியாகி மீண்டும் தஞ்சம் அடைந்தாள். இவளுக்கும் மதுவுக்கும் என்றுமே ஒத்துவராது. அடிக்கடி குடுமிபிடி அடிதடியாயிருக்கும். இருவரையும் ஒருசேர துரத்திவிட வேண்டும் என்று தீர்க்கமாய் முடிவெடுத்து சித்த மருத்துவம் செய்து கொண்டிருக்கிறேன். சில முறை ஆங்கில மருத்துவமும் செய்வேன். ஆனால் இன்றுவரை எந்த பருப்பும் வேகவில்லை.

சில மருத்துவர்கள் ஒவ்வாமை என்கிறார்கள். தோல் அழற்சி என்கிறார்கள். மரபீனிகள் ஈன்றுக் கொண்டிருக்கும் மரபு நோய் என்கிறார்கள். பத்தியம் என்ற பெயரில் பச்சை பயிரைத் தவிர வேறெதுவும் புசிக்க முடியவில்லை. எனக்கு மிகவும் பிடித்த புளிசாதம், எலுமிச்சை சாதம் உண்டு 30 ஆண்டுகள் ஆகின்றன. இப்படி நான் விரும்பியுண்ணும், ஆனால் உண்ண முடியாத சுவையின் பட்டியலில் ஒரு நூறு வகைகளாவது அடங்கும். எத்தனை தலைமுறைகளாக எனது மூதாதையர் மரபீனிகள் அடுத்தடுத்த சந்ததிக்கு அனுப்பி வைக்கும் என்று தெரியவில்லை!!

தேவையற்ற கசடுகளை சிறுநீரகம், தோல், குடல் ஆகியன கழிவாக வெளியேற்றும் என்பதுதான் உடலியல் செயல்பாடு. மாறுபாடாக முத்துச்சிப்பி அவ்வாறு செய்யாமல் கடினமான கசடை ஆடையிட்டு ஆடையிட்டு, அடை காத்து அடை காத்து, முத்தாக மாற்றிவிடுமாம்!!

என் எக்சீமா கூட முத்தைப் போன்றவள் தான். ஒவ்வாமையை வடித்து வடித்து முடியாமல் போனபோது, அதை வியர்வையாக வெளியேற்ற முயற்சித்து, அதுவும் முடியாமல் போக தோலின் வலுகுன்றிய பகுதிகளை இனம்கண்டு, அங்கே கருப்புத் திட்டாக, ஒரு முத்துப்போல், கசடுகளை சேகரிக்கும் இவளை முத்தழகி என்று செல்லமாக அழைத்து முத்தமிடவேண்டும் போல!!

●

# பா.செயப்பிரகாசம்-மரணத்துள் வாழ்பவர்.



மரணம் இயல்பானது. ஆனால் அது அழகானதாக அமைய வேண்டும். வாழ்வு அர்த்தமுள்ளதாக இருக்கும் போது மரணமும் அழகானதாக மாறிவிடுகிறது. செயற்பாட்டாளர் தோழர் பா. செயப்பிரகாசம் அத்தகைய அர்த்தமுள்ள வாழ்வு வாழ்ந்து மரணத்தை அழகானதாக மாற்றியவர். அவர் எழுத்தாளர். ஆனால் அறை எழுத்தாளர் அல்ல. கள எழுத்தாளர். இந்தி எதிர்ப்பு போராட்டம், தமிழீழ ஆதரவு,தாய் மொழிக்காப்பு, இயற்கை காப்பு முதலானப் போராட்டக் களமனத்திலும் அவரது தலையீடு இருந்தது. சிறைவாழ்வும் உண்டு. கவிதை, சிறுகதை,கட்டுரை, புதினம் அனைத்திலும் அவரது மானுட அக்கறை சுடர்விடும். மரணத்திற்குப் பிறகு என் உடலை காட்டில் வீசிவிடுங்கள் பறவை விலங்குகளுக்கு உணவாக பயன்படட்டும் என்று மரண வாக்குமூலம் தந்த தோழர் நாகிரெட்டியைப் போல மரணத்துக்குப் பிறகான தன் உடலை மருத்துவக் கல்லூரி பயிற்சி மாணவர்களுக்கு கொடையளித்துள்ளார் தோழர். பா.செயப்பிரகாசம். கண்ணாமூச்சிக்காக அவரிடம் தொடர்பு கொண்ட போது எங்களை உற்சாகப்படுத்திப் படைப்பு தந்து உதவினார். அவரது கடைசி படைப்புகூட கண்ணாமூச்சியில் வெளியிட்ட எட்டாம் வகுப்பு சிறுகதையாக இருக்கலாம். மிகுந்த மகிழ்ச்சியோடு உரையாடினார். 23. 10.2022 அன்று சமூகத்திற்கான தன் உரையாடலை நிறுத்திக் கொண்டார். ஆனாலும் ஈதலாலும் இசைபட வாழ்தலாலும் தமிழ் எழுத்துலகில் மனிதநேய செயற்பாட்டாளர் பா. செயப்பிரகாசத்தின் பெயர் என்றும் நிலைத்திருக்கும்.

●

## கடல் பார்த்தல்

கடல் மீதாடிவரும்
படகு..
பிறகு
அலை..
பிறகு
படகு..
நுரைக்கும் அலை துரத்திச் சென்று
திரும்பும்
ஈர சிற்றடிகளில்
கடல் பார்த்தல் என்பது
வேறு
கடலாகிவிடுதல்
பிறிதொன்று!

## பறத்தல்

அந்த ஒற்றைச் சிறகை
கிளியுடையதென்றாள்
அவள்.
பருந்துடையது என்றான்
அவன்.
ஆகாயத்தினுடையது என்றார்கள்
அவர்கள்.
ஒற்றைச் சிறகுதான்
அது புலியுனுடையதாக இருக்கலாம்.
மானினுடையதாக இருக்கலாம்.
மீனுடையதாகக் கூட இருக்கலாம்.
சிறகில் என்ன இருக்கிறது பறக்க..
விடுபடுதலில் இருக்கிறது
எல்லாம்.

## பசி

பச்சை
ரஸ்தாளி
பூவன்
கற்பகவள்ளி
எத்தனை வாழை...!
கிள்ளும் பசி
கொல்லும் பசி..
அகோரப் பசி..
வாழையில் அத்தனை
இருக்கும் போது
பசியில் இத்தனை
இல்லாமல் போகுமோ..!

**இரா.மோகன்ராஜன்**

## நிலம்பெயர் மயில்

குருதி வடியும்
நெடுங்குன்று முலைக்காம்பு.

காய்ந்த தேனடையை
அப்பிக்கிடக்கும்
புழுபுழுத்த ஈக்கள்

பாளம்பாளமாய்
வெடித்த நிலம் புதையும்
பச்சையும் மஞ்சளும்!

கானல் குடித்து
இளைப்பாறும்
தாகம்
தணியாத ஊருணி.

அறம் வழுவிய ஊரில்
அகவித் திரிகிறது
நிலம்பெயர் மயிலொன்று...

**கலைபாரதி**

# முருக ஊர்தி

த. ரெ. தமிழ்மணி



தமிழ்மண்ணில் குதிரை நிலவூர்தியாகவும் படைஊர்தியாகவும் இருந்தது யானை: பரிசில்களை ஏற்றிச் செல்ல, மன்னன் புலவர்க்கு வழங்கியது யானை. அந்தக் களிற்று யானை நிரையில் வீறார்ந்ததே பிணிமுகம், அதுவே முருக ஊர்தி.

தொல்மாந்தனுக்குத் தொல்விலங்கே ஊர்தியாக இருந்தது. மயில் ஊர்தி என்பது நகைப்பிற்கு உரியது. விநாயகனுக்குப் "பெருச்சாளியை (பெருத்த எலியை) ஊர்தியாக்கினது, சிறுபிள்ளையின் உத்திக்கும் பொருந்தாச் செய்தியாம்" (தமிழர் மதம், பக்கம் 64) என்று பாவாணர் கூறியது மயிலுக்கும் பொருந்தும்.

உரையாசிரியர்கள் பிணிமுகம் என்பதற்கும் மயில் என்றே பிழையாகப் பொருளுரைத்து வந்துள்ளனர். பிணிக்கப்பட்ட முகம் உடையது யானை. மயிலுக்கு ஏது பிணிமுகம்?

தொல்லிலக்கியங்கள் யாவும் யானையை முருகனின் ஊர்தி என்றே பாடுகின்றன. முருகனைத் தம் இல்லத்திற்கு வரவழைக்கும் தாய், அவனுக்குரிய கடம்ப மலரையும், ஆண்யானையையும் பாடுவதைக் காட்டுகிறது அகநானூறு.

"உருகெழு சிறப்பின் முருகு மனைத்தரீஇ
கடம்பும் களிறும் பாடி" (பாடல் 138)

இதைப்போன்று நக்கீரன் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றும் பதிவு செய்கிறது.

"... ......................மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும்"
(பாடல் - 56)

"மாறாத வெற்றியை உடையவனும் பிணிமுகமாகிய யானையினை ஊர்தியாக உடையவனுமாகிய ஒளிபொருந்திய கால்பதிக்கும் முன்னர் செய்யோன் எனும் முருக வேளும்" என்று பொருளுரைத் திருக்கிறார் பேரா.வெ. சத்திய நாராயணன்.

இமயவரம்பன் நெடுந்சேரலாதனின் போர்த்திறத்தை முருக வீரத்தோடு ஒப்பிட்டுப் பாடிய குமட்டூர் கண்ணனார் முருகவூர்தியைக் குறிப்பிடுகிறார்.

"கடுஞ்சின விறல்வேள் களிறுஊர்ந் தாங்கு" (பதிற்றுப் பத்து 116)

'கடும் சினமும் வீரமும் உடைய முருகவேள் யானையில் வந்ததைப் போல' என்பது அதன் பொருள்.

பரிபாடல், வெவ்வேறு அடிகளில் முருகவூர்தி யானை என்பதை அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தியுள்ளது.

"ஊர்ந்ததை
எரிபுரை ஓடைஇடை இமைக்குஞ் சென்னி
பொருசமம் கடந்த புகழ்சால் வேழம்"
(பரிபா. 21, பா 1, 2)

ஊர்ந்ததை – ஊர்தி, ஓடை - யானைப்படம், வேழம் யானை

"சேயுயர் பிணிமுகம் ஊர்ந்து"
(பரிபா. 7:2)

"படுமணி யானை நெடியோய்"
(பரிபா. 19: 28)

திருமுருகாற்றுப் படையிலும், சிலப்பதிகாரத்திலும் முருகன் யானை மீதேறி வருவதைக் கண்ணாரக் காணலாம்.

"கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழமேற் கொண்டு"
(திருமுருகு, அ.81, 82)

"பிணிமுகம் மேற்கொண்டு அவுணர் பீடு
அழியும் வண்ணம்'
(சிலம்பு. 24. உரையிடை)

பிணிமுகம் என்பது யானையே என்பதற்குச் சான்று பகரும் அடிகளும் திருமுருகாற்றுப்படையில் உள்ளன.

"ஓடாப் பூட்கை பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தனர்"
(247, 248)

புறங்கொடுத்து ஓடாத, முருக ஊர்தியாகிய பிணிமுகத்தை வணங்கி வேண்டியோர் வேண்டியதைப் பெற்றனர். இதில் பூட்கை என்பது புழைக்கை. அதாவது துளையை உடைய கை... தும்பிக்கை. தும்பிக்கை உடைய பிணிமுகம், யானை தானே?

மயில் வேறு, பிணிமுகம் வேறு என்பதற்கும் சான்றுகள் உள. திருப்பரங்குன்றம் கோயில் திருவிழாவிற்கு அன்பர்கள் கொண்டு செல்லும் பொருட்களைத் திருமுருகாற்றுப்படை பட்டியலிடுகிறது.

"மணியும் கயிறும் மயிலும் குடாரியும்
பிணிமுகம் உளப்படப் பிறவும் ஏந்தி"

இதில் மயிலும் பிணிமுகமும் தனித்தனியே கூறப்பட்டுள்ளன. அதுபோல புறநானூற்றிலும், பரிபாடலிலும் காணலாம்.

"மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும்"
(புறம். 56)

"மணிநிற மஞ்ஞை ஓங்கிய புட்கொடி
பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைவ"
(பரிபா 17-46)

இதில் மஞ்ஞை என்பது மயில்.

இதுவரை கண்ட சான்றுகள் முருகனின் ஊர்தி பிணிமுகம் என்பதையும், பிணிமுகம் என்பது தும்பிக்கை உடைய யானை என்பதையும் மயில் வேறு: பிணிமுகம் வேறு என்பதையும் மெய்ப்பிக்கும்.

முருகவூர்தி மயிலன்று: முருகன் மயில் வாகனன் அல்லன், எதையும் உள்வாங்கி கடைவிரிக்கும் ஆரியம், தமிழ் முருகனையும் தம் வயப்படுத்தும் சூழ்ச்சியில் சுப்பிரமணியனின் 6 உருக்களில் ஒன்றாகக் கொண்டு அதற்குக் கஜவாகனன் என்ற பெயரையும் சூட்டி விட்டது. அடித்துக் கொல்வது இல்லையேல் அணைத்துக் கொல்வது அதன் உத்தியல்லவா?

முருகன் எதன் மீது ஏறி வந்தாலென்ன என்பது சூழச்சியான கேள்வி. தமிழ்க் கடவுளரை ஆரியத்திடம் இருந்து மீட்டால்தான் தமிழும் அறிவும் தழைத்தோங்கும். தமிழ்முருகன் என்பது திரு.வி.க. தந்த சொல்லாட்சி. அது வெறும் சொல்லாட்சியாக நின்று விடக் கூடாது. அதன்மீது ஆரியம் சுமத்திய அழுக்குப் புனைவுகளை வெளியேற்றித் தமிழ் முருகனை மீட்க வேண்டும். ●

கவிதை

# அப்பாவின் சைக்கிள்

பழைய சைக்கிள்
லொட லொட என்கிறது
அப்பாவின் சைக்கிள்
என்பதைத் தவிர
அதிலிருக்கும்
எல்லா பாகங்களையும்
மாற்றியாகி விட்டது.

அம்மா புதுப்பெண்ணாய்
அப்பாவுடன் சைக்கிளில் அமர்ந்து
சென்றிருக்கிறாளா
என்று கேட்டாள்
இல்லை என்பாள்.

"உங்க அப்பாவுக்கு
சைக்கிள்விடத் தெரியாதுடா
தள்ளிக் கொண்டே போவார்."

ஒரு மழைநாள் இரவில்
நஞ்சுண்டு மாண்டுபோன
அப்பாவை திருடனென்று
எல்லோரும் சொன்னார்கள்.

வேலையை விட்டு நீக்கிய
அப்பாவின் மில் முதலாளி
பத்துநாள் கழித்து வந்து
பணம் கிடைத்துவிட்டது என்று
எங்கள் வீட்டுச் சுவரில்
சாய்ந்து நின்றபடி
சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்தச் சுவரில்தான்
அப்பா எப்போதும்
சைக்கிளை சாய்த்து வைத்திருப்பார்.

**ச. மோகன்**

# பாண்டி கோவக்காரன்...

## பாலகுமரன் பரிதி

அப்பாவின் பெயர் பரிதி பாண்டியன் இப்படி ஒரு பெயரை அந்த காலத்திலேயே வைத்திருக்கிறார்களே என தாத்தாவின் ரசனையை எண்ணி வியந்திருக்கிறேன். அப்பாவுக்கும் அவரது பெயர் பிடிக்கும் ஆனால் அந்த பெயர் மீது சிறு வருத்தமும் இருந்தது. புதிய நண்பர்களிடம் பெயர் சொல்லும்போது மீண்டும் சொல்லுங்கள் என்று கேட்பார்கள். அது அப்பாவிற்கு எரிச்சலை ஏற்படுத்தும். வீட்டிற்கு வரும் திருமண பத்திரிக்கைகளில் பருத்தி பாண்டியன் என எழுதியிருப்பதைப் பார்த்து ஆத்திரப்படுவார்.

திருமணத்தில் மொய் எழுதுபவரிடம் அப்பா பரிதி பாண்டியன் என்பார். அவர் மருது பாண்டியன் என எழுதுவார். மீண்டும் அப்பா எழுதுபவர் காதருகே சென்று பரிதி பாண்டியன் என்று கத்திவிட்டு வருவார்.



சில நேரங்களில் இந்த மனிதர்களுக்கு காது கேட்காதா என்று சலித்துக்கொள்வார். அதனாலேயே அப்பா தெரியாதவர்களிடம் தன் பெயரை பாண்டியன் என்றுதான் சொல்வார்.

அப்பாவின் நண்பர் ஒருவர் இருந்தார் “உங்க அப்பா பரவாயில்லை நல்ல பேருதான் வச்சிருக்காரு. எங்க அப்பா வச்சிருக்காரு பாரு எனக்கு பேரு பிச்சைனு அதுவும் இன்சியலோட சொன்னா ரா.பிச்சை அதனாலதான் பரிதி என் புள்ளைக்கு பாரினு பேரு வெச்சேன்“ என்பார் அந்த நண்பர்.

அப்பாவுக்கு அவரது பெயரை தவறாக உச்சரித்தால் கோபம் வரும். ஆமா அப்பாவின் நண்பர்கள் பரிதி கோவக்காரர் என்பார்கள் உறவினர்கள் பாண்டி கோவக்காரன் என்பார்கள்.

அப்பாவுக்கு கோவம் வரும்போது அவரது குரலில் மாற்றம் ஏற்படும். பைக்கை கிக் ஸ்டார்ட் செய்யும் போது மெதுவாக சத்தம் தொடங்கி ‘உர்ர்‘ என சீறும் அப்படித்தான் அப்பாவின் கோபமும் தொடங்கும்.

நான் ஏழாம் வகுப்பு படித்தபோது காலாண்டு தேர்வில் ஆங்கிலம், கணக்கு பாடங்களில் பெயில் ஆகிவிட்டேன். அப்போது பள்ளியில் பெற்றோர்கள் நேரில் வந்து ரேங்க் கார்டில் கையெழுத்துப் போட வேண்டும் என்றார்கள். நான் அப்பாவிடம் போய் சொன்னேன் என் நச்சரிப்பு தாங்காமல் வேண்டாவெறுப்பாக பள்ளிக்கு வந்தார்.

என் வகுப்பாசிரியர் வருவதற்கு அரை மணி நேரம் தாமதமானது எரிச்சலுடன் சாலையில் போகும் பேருந்துகளை பார்த்துக் கொண்டு நின்றிருந்தார் அப்பா. வகுப்பாசிரியர் வந்தார் ஒவ்வொரு மாணவர்களின் பெற்றோரிடமும் பேசிவிட்டு என்னிடம் வந்து “உன் அப்பா எங்கே?” என்றார். நான் அப்பா என்றவுடன் திரும்பிப் பார்த்தவரிடம் ஆசிரியர் பேசத்தொடங்கினார்.

‘‘சார் உங்க பையன் சரியில்ல இரண்டு பாடத்தில் பெயில், அங்க பாருங்க இந்த பையன் பர்ஸ்ட் ரேங்க் கணக்குல 95 மார்க் அவங்க அப்பாவும் வந்து இருக்காங்க. உங்க பையன் கணக்கில 15 மார்க் என

சொல்லி முடிப்பதற்குள் அப்பா குறுக்கிட்டார்

''சார் நீங்க என்ன சொல்ல வரீங்க பையன் சரி இல்லன்னு சொல்ல வரீங்களா?''

''இல்ல அப்பா சரி இல்லன்னு சொல்ல வரீங்களா?'' என்றார்.

திடுக்கிட்ட ஆசிரியர்.

''அப்படி இல்ல சார் என சமாளிக்க முயன்றார்''

''என்ன இல்ல சார் நொல்ல சார்னு நீங்க ஆசிரியர்தான பெற்றோருடன் எப்படி பேசணும் தெரியாதா'' பைக் சீற தொடங்கியது.

சத்தம் கேட்டு வந்த தலைமையாசிரியர் அப்பாவை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார். அதன் பிறகு எந்த ஒரு பெற்றோர் ஆசிரியர் கூட்டத்திற்கும் அப்பாவை நான் அழைத்ததில்லை. பள்ளி நிர்வாகமும் அப்பா வராமல் இருப்பதே நல்லது என எண்ணியிருப்பார்கள் போல.

ஒருநாள் குச்சியை எடுத்து காதை குடைகின்றேன் என்று என் காதில் குச்சியின் சிறு பகுதி மாட்டிக்கொண்டது. ENT மருத்துவரிடம் அப்பா அழைத்துச் சென்றார். அந்த மருத்துவர் இடுக்கி போன்ற ஒரு கருவியை காதில் விட்டு குச்சியை வெளியில் எடுத்துப் போட்டார். பீஸ் 150 ரூபாய் என்றார்.

அப்பா பேசத்தொடங்கினார்

“சார் நான் மளிகை கடையில வேலை பாக்குறன் எனக்கு தினமும் 250 ரூபாய் கூலி இதுக்கு போய் மனசாட்சியே இல்லாம நூத்தம்பது ரூபா கேக்குறீங்க” என பேசி முடிப்பதற்குள் கம்பவுண்டர் அப்பாவின் கையைப் பிடித்து வெளியில் அழைத்து வந்தார்.

மற்றொரு முறை தொண்டை வலி என என்னை டாக்டரிடம் அழைத்துச் சென்றார். எங்கள் ஊரில் பிரபலமான டாக்டர். இரண்டு மணி நேரம் காத்திருந்து டாக்டரை சந்தித்தோம்.

“பையனுக்கு தொண்டைவலி என்னன்னு பாருங்க சார்“என்றார் அப்பா.

சிறிது நேரம் பரிசோதித்துவிட்டு மருந்துகளை எழுதிக் கொடுத்து செல்லுங்கள் ” என்று சைகை காட்டினார் மருத்துவர்.

அப்பா தன்மையாக கேட்டார்

“ஏன் சார் தொண்டை வலி?ஏதாவது பிரச்சனையா?” என்று அதற்கும் சைகையிலேயே பதில் சொன்னார் அந்த மருத்துவர்.

கடுப்பான அப்பா

“எதுக்கு எங்கள உள்ள கூப்பிட்டீங்க? நான் வாசலில் இருந்தே தொண்டை வலின்னு எழுதிக் கொடுக்குறன், நீங்க உள்ள இருந்தே மருந்தை எழுதிக் கொடுக்கலாம்ல” என்றார்.

அதற்கும் அந்த மருத்துவரிடம் சைகை மட்டுமே பதிலாக இருந்தது. மருத்துவ சீட்டை மருத்துவரின் மேசையிலே எறிந்துவிட்டு வெளியில் வந்தார் அப்பா.

நான் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றேன். சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைப்பு வந்தது. அதில் காண்டாக்ட் சர்டிபிகேட் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. நானும் நான் படித்த பிஎட் கல்லூரிக்கு சென்று காண்டாக்ட் சர்டிபிகேட் கேட்டேன். 500 ரூபாய் பணம் கட்ட சொன்னார்கள்.

“நான்நல்லவன்னு சர்டிபிகேட் கொடுக்க, நான் 500 ரூபாய் கொடுத்து அதை நீங்கள் வாங்கினால் நானும் நல்லவன் இல்லை நீங்களும் நல்லவன் இல்லை” என சொல்லிவிட்டு வெளியேறினேன்.

அப்பாவிற்கு போன் செய்து நடந்தவற்றை கூறினேன். “சபாஷ்“ சரியாதான் சொல்லி இருக்க என்றார் அப்பா.

உடன் வந்த நண்பன் இதே மாதிரி சூழ்நிலையில நான் இருந்தா எங்க அப்பா “500 ரூபா இல்லடா மகனே ஆயிரம் ரூபாயாவது கொடுத்து அந்த சர்டிபிகேட் வாங்கிட்டு வந்துரு” என்று சொல்லியிருப்பார் என்றான்.

அப்போதுதான் உணர்ந்தேன். கோவப்பட வேண்டிய இடத்தில் கோவப் படாமல் குனிந்து சென்று நல்லவன் எனப் பெயர் வாங்குவதை விட கோவக் காரனாகவே இருந்து விட்டுப் போகலாம்.

ஆமா பாண்டி கோவக்காரன்தான்...

●

# அம்மாயி வருகையும் ஆட்டுக்கொடல் கொழம்பும்

கோ.அருணகிரி

மரவள்ளிக்கிழங்கு, மாங்காய், தேங்காய், பச்சக்கல்ல இதுகூட ரெண்டு பிஞ்சி சுரைக்காயும் கண்டிப்பாய் இருக்கும். அம்மாயி எப்ப வீட்டுக்கு வந்தாலும் அது கொண்டு வருகிற கொட்டுக் கூடையில.



உள்ளிக்கோட்டை, ஆலங்கோட்டை, திருப்பாலக்குடி, கூப்பாயட்ட, (கூப்பாச்சிக்கோட்டை) பரவாக்கோட்டை பகுதி பொண்டுவளுக்கு மாடுகன்னு வச்சிக்கிறது, விவசாயம் இதவுட்டா பொழப்புன்னா அங்காடி விக்கிறதும் ஒன்னு. சோளம், கடலை, மாங்காய், தேங்காய், புளி இதுவொள ஒரு கொட்டுக் கூடையில வச்சி, சீலைத்தலைப்பையே சுத்தி சும்மாடா வச்சிக்கிட்டு வடசேரியிலேந்து பட்டுக்கோட்டை வரையிலும் இந்தாண்ட வந்தா மன்னாருடிலேந்து (மன்னார்குடி) மேலவாசல் வரைக்கும் கால்நடையாகவே நடந்தே அங்காடிவிக்க வருவாவோ!

அம்மாவும் அம்மாயிகூட அங்காடி விக்கப் போயிருக்காங்க சின்ன வயசுல. அந்த அனுபவம் பற்றி சொல்லையில,

‘தடங்கண்ட எடத்துலே நடப்போம், தண்ணி கண்ட எடத்துல குடிப்போம், திண்ணகண்ட எடத்துல படுப்போம்’

ஆமா, வூட்டவுட்டுக் கௌம்புனா, திரும்புறதுக்க ரெண்டு, மூணு நாள்கூட ஆகும். அதுவரைக்கும் கால்நடையாகவே யாவாரம் செஞ்சிக்கிட்டுப் போறது. இருட்டிப் போச்சுன்னா அங்குனக்கவுள்ள வீட்டுத் திண்ணையிலேயே தூங்குவாங்க. அதுவரைக்கும் சும்மாடா இருந்த முந்தானையில தூசியத் தட்டிவிட்டு, வெறுந்தரையிலேயே படுத்துக்குவாங்க. பாடி பரதேசியா இருந்தாலும் வூட்டுத் திண்ணையில படுக்கும் சனங்களுக்கு வெறும் வயிறா இருக்குமேன்னு சாப்பிட்டியலான்னு கேட்டு அதுவ வூட்டுல இருக்குற கஞ்சோ, கூழோ கொடுக்குங்க. யாவாரம் செஞ்சி கையில, மடியில இருக்கும் காசுவோல அதுவகிட்டியே கொடுத்து வச்சிட்டு திரும்ப வர்றப்போ வாங்கிக்கிறேன்னு சொல்லிட்டு பொழுது விடிந்தவுடன் கிளம்புவோம்.

எங்கையாவது விருந்தாடி போனாக்கூட ஆடு கெடக்கு, மாடு கெடக்கு, கறக்குற மாட்ட விட்டுட்டு வந்துட்டோம். பால்காரு வந்துடுவாரு. மாடு கறக்கனும்னு கால்ல வெந்நீர ஊத்துனாப்புல கௌம்பிப் போற உழைப்பாளி சனங்க அதுவோ!

சிங்கப்பூர் காசு வந்து ஊர் பூராவும்மாடிவீடா ஆனாலும்இன்னும்கூட சில உள்ளிக்கோட்டை, பரவாக்கோட்டை பெண்கள் அதிகாலை நாலு மணிக்கு எந்திரிச்சு மாடு கறந்துட்டு, அஞ்சி மணிக்கு மொத பஸ்ச புடிச்சி புளி, தேங்காயை வச்சிக்கிட்டு ஒக்கார்ந்திருக்கிறதையும், ஆம்பளை ஆளுவோ டீ குடிச்சிக்கிட்டு நிக்கறதையும் பார்க்க முடியுது, மன்னாருடி கடைத்தெருல...

‘‘ஏம்மா... இதுவொள இன்னுந் தூக்கிக்கிட்டு அலையுறீங்கனு’’ கேட்டா,

“கஷ்டப்பட்ட எங்களுக்கு கால நீட்டிப் படுக்க மனசு வரலையே. எல்லாத்துக்கும் புள்ளையோள எதிர்பார்த்திருக்க முடியுமா? ஏதோ கைச்செலவுக்கு ஆவுமேன்னு ஓடியாரேய்யா...’’ என்பார்கள்.

அப்படி அங்காடி விக்க வந்து மீதமாகிப்போன மரவள்ளிக் கெழங்கு, காய்கறி, சாமாஞ்செட்டோட எங்க வூட்டுல இருந்துட்டு ரெண்டு மூணு நா தங்கிட்டு போகும் அம்மாயி. அது பையில இருக்கும் சொரக்காய் மட்டும் எங்க வூட்டுக்காகவே எடுத்து வந்தது. சொரக்கா

போட்டு ஆட்டுக்கொடலு கொழம்புன்னா அம்மாயிக்கு உசுரு,

''யம்மாடி...! யா யா குடிக்க கொஞ்சம் தண்ணி கொடுங்கடி. இந்தப் புள்ளையோல பாத்து நாளாச்சி, கண்ணுக்குள்ளேயே நிக்கிதுவோன்னு வந்தேண்டி ஆயா...! என்ன வெய்யிலு'' என்றபடி அம்மாயி திண்ணையில வந்து ஒக்காரையிலயே ''எப்பக்கா வந்தே?'' என்ற விசாரிப்புடன் காசியம்மா வந்துரும். காசியம்மா அம்மாயிக்கு தூரத்து உறவு. ரெண்டு பேரும் திண்ணையில ஒக்காந்து ஊருகத, ஒறவுகத எல்லாம் பேசுனா மணிக்கணக்கா ஆயிடும்.

''ரெண்டு நா இருப்பியேம்மா. காசியம்மா எங்கே போவப்போவுது.. வந்த காலோட ஒக்கார்ந்திருக்கே உள்ளே வான்னு'' அம்மா கூப்பிட்டவுடன், அம்மாயியும் உள்ளே வந்து தான் கொண்டு வந்த சாமாஞ்சட்டுகள அப்படியே தரையில் பரப்பி வைக்கும். தலையாட்டி பொம்மைப் போல ஆடியபடி இருக்கும் அந்தப் பிஞ்சி சுரைக்காயை வேடிக்கைப் பார்த்தபடியே நானும் இருப்பேன்.

''யம்மா... நல்ல சொரக்காயா இருக்கே?''

''ஆமாண்டி யாயா, இத போட்டு நாளக்கி ஆட்டுக்கொட கொழம்பு வச்சிடு''

''நானே நெனச்சிக்கிட்டு இருந்தேன். இந்த சின்னப்பய என்னம்மோ சோத்த கண்டாலே மூஞ்சியில அடிச்சாப்புல வருதுங்கறான்.. கெடக்குற ரெண்டு திருக்கக் கருவாட்டோட கத்தரிக்கா போட்டு கொதிக்க வச்சி எரியெண்ண காச்சி ஊத்தனுன்னு...''

எரியெண்ண காச்சி ஊத்துறது என்னன்னா...

சின்ன புள்ளையோ சொந்தபந்த வீட்டுவோள்ள சாப்பிடல்ல.. இல்ல நம்ம வீட்டுல சாப்பிடயில கீழமேல சிந்தாம நாலு வாயின்னாலும் நறுக்குன்னு அள்ளித் திங்குறானேன்னு யாராவது வாயால சொல்லாட்டியும் மனசால நெனச்சாக்கூட அந்தப் புள்ள அப்பறம் சரியா சாப்பிடாது. அப்படியான புள்ளையோளுக்கு கருவாடோ, மீனோ ஏதோவொரு கவுச்சிக் கொழம்ப வச்சி யாரும் சோத்த எச்சிப் பண்றதுக்கு முன்னாடி, ஒரு கரண்டி சாம்ப அடுப்பில வச்சி நல்லா பழுக்கக் காய வைக்கணும். அனலுள அது காஞ்சிக்கிட்டு இருக்கையிலேயே சின்ன எலையப் போட்டு சுடுசோத்த அள்ளிவச்சி அதுல சலும்ப கொழம்ப ஊத்தி, ஒரு துண்டு கருவாடோ, மீனோ எடுத்து வச்சி, சாப்பிடாத புள்ளைய எலைக்கு எதுத்தாப்புள்ள தயாரா குந்த வச்சிக்கணும்.

அடுப்புல காயிற கரண்டிய ஒரு துணியிலப் புடுச்சிக்கிட்டுப் பத்திரமா எடுத்தாந்து நல்லெண்ண பாட்டில தொறந்து வச்சிட்டு ஒருத்தரு தயாரா நிக்கணும். கரண்டி காம்ப சோத்துல வச்சதும், நல்லெண்ணய ஊத்தணும். சொ..ர்...ர்..ன்னு சத்தத்துடன் வர்ற புகையை பயல தலையைக் குனிய வச்சி, நல்லா மூச்சோட சேத்து இழுக்கணும். கரண்டி காம்பு அனலும், புகையும் அடங்குனப் பிறகு அந்த சாதத்த அப்படியே கொண்டுபோய் தெருநாய்க்கிட்ட வச்சா அது மோந்து பாத்துட்டு ஓடிப்போயிடும். 'கவுச்சி சோத்துக்குப் பறக்குற நாயி, இந்த ஓட்டம் ஓடுதே, புள்ளைக்கு நல்லாதான் கண்திருஷ்டி பட்டிருக்கு'ன்னு பொண்டுவ பேசிக் கொள்வார்கள். இப்படி ரெண்டு, மூணு நா செஞ்சா, என்னைக்கு நாயி சோத்த திங்க ஆரம்பிக்குதோ அன்னைக்கு பிள்ளையும் சோத்த திங்க ஆரம்பிப்பான். திருஷ்டி கழிஞ்கிட்டுன்னு அர்த்தம்.

சரி ஆரம்பிச்ச எடத்துக்கு வருவோம்.

சொரக்கா போட்டு ஆட்டுக்கொடல் கொழம்பு! மாங்கா போட்ட ஆத்துமீனு கொழம்பு..! பிஞ்சி கத்தரிக்கா போட்ட திருக்க கருவாட்டுக் கொழம்புல ரெண்டு அவிச்ச முட்டைய வவுந்து போட்டு, கொழம்புல ஊறுன அந்த முட்டையைத் திங்கிறது எல்லாம் தேனாமிர்தமா இருக்கும்.

இதெல்லாம் முடிஞ்சி சாம்பார், ரசம், பொரிச்ச கொழம்புன்னு வரயில...! அம்மாவுக்கும் அம்மாயிருக்கும் சின்னச் சின்ன வாய் வார்த்த திடீர்னு ஒருநா பெரிய சண்டையாயிடும். ஒனக்கும் எனக்கும் இனிமே செத்தா வாழ்ந்தா இல்ல. நா ஊசிமுத்தாவூட்டு முத்தையனுக்கு முந்தி விரிச்சவளா இருந்தா இந்த வூட்டு வாசப்படி இனி மிதிக்க மாட்டேன்னு'' துணிமணியள அள்ளிக்கிட்டு கௌம்பிடும் அம்மாயி.

காசியம்மாவும் அவ புருசன் ராமலிங்கமும் பஞ்சாயத்துக்கு வருவாங்க'

''யாரு பேசுனா... ஒம் பொண்ணுதானே!

இதுக்குப் போயியா செத்தா வாழ்ந்தா இல்லேன்னு கௌம்புற.. யாரு முன்னே போறா. யாரு பின்னே போறான்னு யாருக்குத் தெரியும்? நீ செத்தா நாந் தூக்கிப் போடுறேன். நாஞ் செத்தா நீ தூக்கி போடு. இங்க வராட்டி என் வூட்டுக்கு வா...''ன்னு ராமலிங்கம் பேசுற எதையும் காதுல வாங்காம, அம்மாயி முந்தானையில மூக்க சிந்திக்கிட்டு கௌம்பிடும். இது வழக்கமா நடக்குறதுதான்.

இதுல என்ன வேடிக்கைன்னா, பஞ் சாயத்து பேசுற ராமலிங்கம் சித்தப்பாவப் பத்தி ஊருக்குள்ளாற என்ன பேச்சி இருக்குன்னா...?

''நெத்தியில பட்டையும் கழுத்துல கொட்டையுமா எல்லா வூட்டுக்கும் பஞ்சாயத்து பண்ற ராமலிங்கம் வயசு காலத்துல பெரிய காமலிங்கம்! என்னய்யா நா சொல்றது?''

"அட ஆமாங்குறேன். இவனுக்கு யாரும் பொண்ணு கொடுக்கல. வேலவெட்டி இல்லாம சுத்துறப் பயலுக்கு எவன் பொண்ணு கொடுப்பான். ஆயி அப்பனும் இவனுக்கு வடிச்சிக் கொட்டுறதே போதும். ஊராவூட்டு பொண்ணயும் கொண்டாந்து நாம சொமக்க வேணான்னு பெத்தவுகளும் விட்டுட்டுவ. இவன் என்ன பண்ணான் தெரியுமா? ஒரு கட்டுக்கழுத்தி பொம்பளையோட கொடுக்கல் வாங்கலா இருக்க ஆரம்பிச்சுட்டான். இது அரசபுரசலா எல்லோருக்கும் தெரிய... ரெண்டு பேரும் வூட்டுக்குள்ள மேலும் கீழுமா இருக்குறத அவ புருசனே பாத்துட்டான். பஞ்சாயத்து கூடுது, அந்தச் செருக்கி என்ன சொல்றான்னா எனக்கு புள்ளபுருசன் வேண்டாம். நா இவங்கூடவே போறேன்ங்குறா...''

''இந்தாளு என்ன சொன்னான்?''

''பொறு அந்தக் கூத்ததான் சொல்ல வந்தேன். எனக்கு கல்யாணம் பண்ணி வையுங்க. நா இவள வுட்டுறேனு போட்டானே ஒருபோடு. அவ தலையிலேயும் வயித்துலேயும் அடிச்சிக்கிட்டு அழ இவன் கல்லுளிமங்கனாட்டம் நிக்கிறான். அவன் ஆயி அப்பனுக்கும் ஊருக்கும் மெல்ல விசயம் புரிய ஆரம்பிக்குது. இப்படியெல்லாம் ஏதாவது அசிங்கம் பண்ணினாதான் கல்யாணம் பண்ணி வைப்பாங்கன்னு திட்டம் போட்டுத்தான் இப்படி செஞ்சிருக்கான்...''

''யப்பா நீ ஒம்புள்ள பொண்டாட்டிய கூட்டிக்கிட்டு போ. இவன் இனிமே ஒம்ம வூட்டுப்பக்கம் வரமாட்டான். யம்மாடி நீயும் இவனப்பத்தி தெரிஞ்சுக்கிட்டே இல்ல. ஒழுங்காப் போயி ஒம் பொழப்ப பாருன்னு அவனுக்கும் புத்தி சொல்லி அனுப்புனோம்''

இப்படியானக் கதைகள் அவரைப் பத்தி இருந்தாலும் எந்த வூட்டுல என்ன பிரச்சினைன்னாலும் புருசனும் பொண்டாட்டியும் ஓடியாந்து நிக்கிற நல்ல சனங்க!

ஒரு ரெண்டு மாசம் கழிச்சி...

"இவ பேசுன பேச்சுக்கு இந்த வாசப்படி மிதிக்கக்கூடாதுன்ன தான் நெனச்சேன். என்ன பண்றது. இந்தப் புள்ளையளோ பாத்து நாளாச்சி. கண்ணுக்குள்ளேயே நிக்குதுவோ... மனசு கேக்காம ஓடியாந்தேன். யப்பா என்ன வெயிலுடி யாயா...''

என்றபடி வழக்கமான சாமாஞ் செட்டோடும் பிஞ்சி சொரக்காயோடும் அம்மாயி திண்ணையில வந்து ஒக்காந்தது. அம்மா ஆட்டுக்கொடலு வாங்க பைய எடுத்துக்கிட்டு கிளம்பியது.

●


**படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!**

கதை சொல்லிகளிடமிருந்து கதைகள், கவிஞர்களிடமிருந்து கவிதைகள், கட்டுரையாளர்களிடமிருந்து கட்டுரைகள், பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் அறிவியல் சார்ந்த, கல்வி சார்ந்த செய்திகள் என வாசகர்களின் பங்கேற்பினை கண்ணாமூச்சி எதிர்பார்க்கிறது...

மன்னார்குடி பற்றிய நல்ல செய்திகள் பழைய நினைவுகள் மன்னார்குடி சார்ந்த உங்களின் கனவுகள் அனைத்தையும் எழுதி அனுப்புங்கள். தகுதியான படைப்பிற்கு களம் அமைத்துக் காத்திருக்கிறது கண்ணாமூச்சி!

படைப்புகள் அனுப்ப வாட்ஸ்அப் எண்: 9659335462 மின்னஞ்சல்: kannamoochi.mannai@gmail.com

**கண்ணாமூச்சிக்கு இதழ் வளர்ச்சி நிதி அனுப்ப கூகுள் பே 9659335462 விவரத்தை எங்கள் வாட்ஸ்அப் எண்ணிற்குத் தெரிவிக்கவும்.**

# நூறு ரூபாய்

## ஹரணி

வெண்ணாறு நிரம்பி ஓடிக்கொண்டிருந்தது. முறைத்தண்ணி விட்டிருக்காங்க என்று யாரோ பேசிக்கொண்டு போனார்கள். எல்லாவற்றுக்கும் முறை இருக்கிறது. நாள் முழுக்க வண்டிதான் எதற்கும். கடைத்தெருவிற்கு சென்று ஒரு பன்னீர் சோடா வாங்குவது என்றால்கூட வண்டிதான். நடக்க சோம்பேறித்தனம். அலுப்பு. பத்து ரூபாய் பொருள் வாங்க பதினைந்து ரூபாய் பெட்ரோல் செலவழித்து வாங்கவேண்டிய சொகுசுத்தனம். அறிவியலில் ஆராய்ச்சி செய்யும் மகன் எச்சரிக்கை செய்தான். அப்பா.. ரொம்ப தப்பு நீங்க பண்ணறது. ஒரு நாளைக்கு இருபது நிமிடமாவது நடங்க... இல்லாட்டி சைக்கிளாவது ஓட்டுங்க... அலுப்புப் பாத்தீங்கனா எல்லா நோயும் ஈசியா உள்ளே வந்துடும். அப்புறம் கலர் கலரா மாத்திரைங்கதான்...

அத்தோடு விடவில்லை அவனே ஆன்லைனில் பார்த்து ஒரு சைக்கிளை ஒன்பதாயிரம் விலையில் வாங்கியும் அனுப்பி விட்டான். அது பார்க்கவே விநோதமாக இருந்தது. இரண்டு சக்கரங்களை மட்டுமே வைத்துக்கொண்டு அது தன்னை சைக்கிள் என்று சொல்லிக்கொண்டது. நல்லவேளை அடிப்பதற்கு ஒரு பெல் இருந்தது. வேறு எதுவும் பழைய காலத்து சைக்கிளுக்குரிய எந்த அம்சமும் இல்லாதிருந்தது. வெங்காய சருகுபோல முன் சக்கரத்திற்கும் பின் சக்கரத்திற்கும் மேல மட்காடு. சின்ன பிள்ளைகள் சைக்கிளில் உள்ளது போன்ற பெல். பூட்டு கிடையாது. கேரியர் கிடையாது. டபுள்ஸ் போக முடியாது. ஆனால் மிதிக்க எளிதாக இருந்தது. முதல்நாள் ஏறி உட்கார்ந்ததும் கையகலமே இருந்த உட்காரும் சீட்... சிரமமாக இருந்தது. அப்புறம் பழகிவிட்டது. கால்களுக்கு அலுப்பில்லாமல் வேகமாகச் சென்றது. வழியில் பார்க்கிறவர்கள் கேள்விகளைக் கேட்டுவிட்டுப்போனார்கள்.

என்ன சார்.. திடீர்னு சைக்கிள்?

ஸ்போர்ட்ஸ்மேன் மாதிரி யங்கா மாறப்போறீங்களா?

சைக்கிள் நல்லதுதான். ஆனா இது உங்களுக்கு லாயக்குப் படாது.

இதுதான் சார் இப்ப மாடல்.. மிதி வாங்காது.. வேகமாகப் போகும்.

சைக்கிள் மிதிச்சா நல்ல பயிற்சி. இரத்த ஓட்டம் நல்லா இருக்கும். மூளைக்கு எந்தப் பிரச்சினையும் வராது.

எல்லாருக்கும் ஒரே பதில்தான்.

இல்லங்க.. நாள் முழுக்க டூவீலர் ஓட்டறேன்.. தொட்டதுக்கெல்லாம் வண்டிதான். ஒரு சேஞ்சுக்காக காலையில் மட்டும் சைக்கிள். என் பையனும் உடம்புக்கு நல்லதுன்னான்.. அதான்.

உண்மையில் சைக்கிள் ஓட்டுவது நன்றாக இருந்தது

சைக்கிள் ஓட்டிய இளமைப் பருவத்தின் நிகழ்வுகளை அது நினைவூட்டி களிப்புறச் செய்தது. எத்தனை கிலோமீட்டர் என்பதெல்லாம் இல்லை.. தொட்டதுக்கெல்லாம் சைக்கிள்தான்.. ஐந்து நிமிடத்தில் அரைகிலோமீட்டர்.. சினிமா தியேட்டருக்கு சினிமா தொடங்குவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்பாக சைக்கிளில் ஓடி.... டிக்கட் எடுத்து.. வேர்க்க விறுவிறுக்க சினிமா பார்த்தது அன்றைய சாகசம்.. அக்கா வாழ்க்கைப்பட்டுப்போன திருவையாற்றுக்குப் பக்கத்திலுள்ள கிராமத்துக்கு வீட்டிலிருந்து பதினைந்து கிலோமீட்டர்... வாரத்திற்கொருமுறை சைக்கிள்தான்.. அக்கா கிராமத்தின் டீக்கடை காராச்சேவுக்கும் இனிப்புப் போண்டாவிற்கும் அடிமையாகிப்போன நாக்குடன்...

கல்லூரிக்குப் போகும்போது அப்பா முதன் முதலில் ஹீரோ சைக்கிள் மாதத்தவணை ஐம்பது ரூபாய் கட்டி வாங்கித்தந்தார். கல்லூரிப் படிப்பு முழுக்க அந்த சைக்கிளில்தான்..

சைக்கிள் பற்றி ஒரு புராணமே பாடலாம். அத்தனைக் கதைகள் இருக்கின்றன. சைக்கிள் ஓட்டக்கற்றுக்கொண்டது தொடங்கிப் பயணித்தது வரை..

நினைவுகளைக் கலைத்து இப்போது வெண்ணாற்றுப் பாலத்தைத் தாண்டியதும் இடதுபுறமுள்ள ஒரு ரைஸ் மில் வெளியே பந்தல் போடப்பட்டிருந்தது. நாலைந்துபேர்கள் நாற்காலிகள் போட்டு உட்கார்ந்திருந்தார்கள். கொஞ்சம் நாற்காலிகள் காத்திருந்தன. தள்ளி பறை ஒலித்துக்கொண்டிருந்தார்கள். சட்டென்று அதிர்ந்துபோனேன்.. இது தனபால் வீடாச்சே.. அவங்க வீட்டுலே வயசானவங்க கிடையாதே.... தனபால் பள்ளியில் ஒன்றாம் வகுப்பு ஆரம்பித்து கல்லூரியில் பியுசி படித்தவன். அப்புறம் நடிக்கப்போகிறேன் என்று சென்னை போய்விட்டவன்.

யாருக்கு என்ன ஆச்சு? கடவுளே.. என்று பயந்தபடியே சைக்கிளை விட்டு இறங்கியதும் பயந்துதது போலவே ஆகிவிட்டது. தனபால்தான் இறந்துபோயிருந்தான். ஒரு முறை உடம்பு அதிர்ந்து அடங்கியது. என்ன ஆயிற்று? நேற்று என்னிடம் பேசினானே... அதற்குள் என்ன ஆயிற்று? என்ன பிரச்சினை? ஏதும் தானாக முடிவைத் தேடிக்கொண்டானா?

ஓரமாய் சைக்கிளை நிறுத்தி ஒரு நாற்காலியில் போய் அமர்ந்து சற்று நேரம் அமைதியாக இருக்க முயன்றும் முடியவில்லை. பக்கத்தில் இருந்தவரிடம் கேட்டேன்..

தனபாலுக்கு என்னங்க ஆச்சு?

அவர் உடனே பதில் சொல்லவில்லை. என்னை ஏறஇறங்கப் பார்த்தார். அப்புறம் என்ன நினைத்தாரோ சொன்னார்.. என்ன எழவையோ குடிச்சிட்டாங்க.. ராத்திரியே குடிச்சிட்டுப் படுத்துட்டான்... விடிஞ் சிதான் தெரிஞ்சிருக்கு.. உசிரு எப்போ போச்சுன்னே தெரியல தம்பி.. என்றார்.

தற்கொலையா? தனபாலா? நேற்று அப்படிப் பேசியவனுக்கு ஒரு நாளைக்குள் தற்கொலை செய்துகொள்ளுமளவுக்கு என்ன ஆகியிருக்கும்?

நேற்று பேசும்போது இதற்கான அறிகுறியே எதுவும் தென்படவில்லையே.. நேற்று பார்த்த அவன் முகமும் பேச்சும் நினைவிலாடின.

வழக்கம்போல அல்ல சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பிய முதல் நாள். கொஞ்சம் உட்காரும் இடம் பழகவில்லை. சைக்கிள் மிதிப்பதே கொஞ்சம் சங்கடமாக இருந்தது. சமாளித்து ஆத்துப்பாலத்தைக் கடந்துபோகையில் குரல் கேட்டது. டேய்.. சரவணா... சட்டென்று இறங்க தனபாலன்.

பார்க்க ஆளே மாறியிருந்தான். ஆள் குள்ளம், நல்ல சிவப்பாக இருப்பான். தலையெங்கும் அடர்த்தியான சுருள் முடி, கண்கள் துருதுரு, முகம் அழகு, சினிமாவில் நடிக்கவேண்டும் என்பதற்காகப் பரதநாட்டியம் கற்றுக்கொண்டிருந்தான். சிரிக்கையில் பற்கள் அழகாக இருக்கும். இத்தனையும் மாறிப்போன தனபாலாகத் தெரிந்தான். பற்களில் ரத்தம் கட்டிய நிறம். இடுக்குகள் தாராளமாய் ஒரு பல்லுக்கு இன்னொரு பல்லுக்கு இடையில் தலையில் மேல்பகுதியில் வழுக்கை ஏறிக்கிடந்தது. உடம்பு இளைத்துக் கிடந்தது. மனம் அதிர்ச்சியாக இருந்தது.

என்ன தனபாலு இப்படி ஆயிட்டே? என்னாச்சு? என்றேன்.

அதைக் கேட்டு என்ன பண்ணப்போறே? உக்காரு. தினமும் இந்தப் பக்கம் சைக்கிள் ஓட்டிப்போறியா...? நான் பார்க்கவேயில்லியே என்றான்.

சைக்கிள் கதையை சொன்னேன்.

உக்காரு என்றான். உட்கார்ந்து பேசினோம்.

என்னடா தனபால் ஆச்சு உனக்கு?

எதைப் பேசியும் எதுவும் ஆகப் போறதில்ல. நாம நினைக்கறது வேற... நடக்கறது வேற.. என்னோட எல்லாமும் நான் நினைச்சமாதிரி நடக்கலே... எல்லாத்தையும் இழந்துட்டேன்.. கௌரவம் ஒண்ணுதான் ஒட்டிக்கிடக்கு.. அதுவும் என்னோட மனைவி, மகள் இவங்களால.. அவங்க ஓட்டுற இந்த மாவு மில்லால.. வாய்க்கும் வயித்துக்கும் பசியில்லாமப் பாத்துக்கறாங்க.. கௌரவத்தால என்னோட உசிரு..இருந்துகிட்டிருக்கு... எதுவும் கேக்கறதுல்ல. அதான் பெரிய உறுத்தலா இருக்கு.. பொண்ணு ப்ளஸ்டூ வந்துட்டா..

தனபாலுக்கு எல்லாமும் தாமதம். திருமணம், பிள்ளைப்பேறு அதில் ஒன்று, முப்பத்தெட்டில்தான் அவனுக்குத் திருமணம் நடந்தது. சினிமாவில் நடிகன் ஆகிவிடுவேன் என்று போய் ஒரு படத்தில் நடித்தும் அது வெளிவராமல் போய்.. அத்துடன் அது புதைகுழிக்குள் போனது தனிக்கதை.

அடிக்கொரு தரம் உள்ளுக்குள் எட்டிப்பார்த்துக்கொண்டே பேசினான்.

என்னடா தனபால் உனக்கு வேணும்? என்றேன்.

சட்டென்று என் கைகளைப் பிடித்துக்கொண்டான். கண்கள் கலங்கியதைக் கண்கள் மட்டுமே அறியப் பார்த்துக்கொண்டான். கருவிழியைச் சுற்றி கண்ணாடிப்படலம் போல கண்ணீர்...

யார்கிட்டயும் கேட்க முடியாது. முடியல்லே.. என்னை இந்த ஊர் பார்த்த தனபால் வேறு. அந்தத் தனபாலாவே இருந்துட்டுப் போயிடலாம்னு ஆசைப்படறேன்.. என்று சற்று பேச்சை நிறுத்திவிட்டு.. உள்ளே ஒருமுறை எட்டிப்பார்த்துவிட்டு அவசரமாய் சொன்னான்.. சரவணா ஒரு நூறு ரூவா இருந்தா கொடு.. சட்டுனு என் பையில வச்சுடேன் என்றான். சட்டென்று எடுத்ததும் தெரியாமல் வைத்ததும் தெரியாமல் வைத்தேன். ஒருமுறை சட்டைப் பையை அமுக்கிப் பார்த்துக்கொண்ட தனபால் முகத்தில் அத்தனை ஒளியை எதிர்பார்க்கவில்லை. பிரகாசமாக இருந்தது.

தம்பி..என்று யாரோ நினைவு கலைத்தார்கள். பக்கத்தில் உட்காந்திருந்தவர்தான்.

சொல்லுங்க ஐயா என்றேன்.

தனபால்கிட்ட பணப்புழக்கமே இல்லாமப்போயிடிச்சு. ஆனா ஒரு குறையுமில்லாம பொண்டாட்டியும் புள்ளங்களும் பாத்துக்கிட்டாங்க... வயலுக்குத் தெளிக்கிற மருந்து பாக்கெட் புதுசு... வாங்கியிருக்கான். அதுக்குக் காசு எங்கிருந்து வந்ததுன்னு தெரியல தம்பி... யார் கொடுத்தாங்கன்னு தெரியல தம்பி... என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டதும். ஒருகணம் எனக்கு நானே வெடித்துச் சிதறுவதுபோலத் தோனியது. அடப்பாவி அதுக்குத்தான் நூறு ரூபா கேட்டானா? அடக்கடவுளே அவன் சாவுக்கு நாமதானா காரணம். அதிர்ச்சியாக இருந்தது. குற்றவாளிபோல அங்கே உட்காரப் பிடிக்கவில்லை, அவன் சாவதற்கு நான் துணையாக இருந்ததுவிட்டேனா..? அவனைக் கொன்றது நான்தானா? ஒரு குற்றவாளியின் தப்பிக்க முயலும் மனநிலை வந்துவிட்டது எனக்கு. எல்லோரும் என்னைப் பார்ப்பதுபோலவே தோனியது... என்னங்க தம்பி இப்படிப் பண்ணிப்புட்டிங்க... ஏது என்னன்னு விசாரிக்காமப் பணத்தக் கொடுத்திட்டிங்களே.. இப்படிஒரு காரியத்த கூடப்படிச்சவனுக்கு யாராச்சும் பண்ணுவாங்களா... அவனோட பொண்டாட்டி.. புள்ளய பாருங்க...அதுவும் கன்னி கழியாதப் பொட்டப்புள்ள.. இத்தனை பாவத்தையும் ஏந்திக்கிட்டிங்களே..

இவன்கிட்ட என்னங்க பேச்சு... எம்புருஷன் விஷம் குடிச்சு சாவறதுக்கு இவன்தான் காரணம்.. போலிசுக்குப் போன் பண்ணுங்க...

மனம் எல்லைக் கடந்த பேச்சுகளைக் கற்பனை செய்து குழம்பியது. தலைசுற்றியது.. அப்படியே மெல்ல எழுந்து வந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு திருப்பினேன்...

எங்க தம்பி.. போறீங்க என்று கேட்டார்.

இந்தா வரேன்.. தலைய வலிக்குது.. ஒரு டீ சாப்பிட்டு வரேன்...

ஆமாமா... எடுக்க நாலு மணியாகும்.. போயிட்டு வாங்க.. என்றபடி பெரியவர் வேறு ஒருவருடன் பேச்சைத் தொடங்கினார்.

போகிற வருகிறவர்கள் எல்லாம் என்னையே பார்ப்பதுபோலப் பயம் வந்தது. ஏதாவது ஒரு கடிதம் எழுதி வச்சிருப்பானா.. சரவணன்தான் எனக்கு நூறு ரூபாய் கொடுத்தான் என்று...! இல்ல சொல்லியிருப்பானா வீட்டுல. அதான் உள்ள எட்டிப் பார்த்து எட்டிப் பார்த்துக் கேட்டானா.. அவனோட மனைவிக்கும் மகளுக்கும் தெரிஞ்சுருக்குமா? நானா போய் கொடுத்தேன். அவனா கேட்டான். எதுக்குக் கேட்டான்னு தெரியாது. சீக்கிரம் பையில வையுன்னான்.. வச்சேன்... அவன் விஷம் வாங்கிக் குடிக்கறதுக்குன்னு எனக்கு எப்படித் தெரியும்? என்கிட்டயும் சொல்லலியே.. இதை யாராச்சும் சொல்லுவாங்களா...

உடம்பு முழுக்க வியர்த்தது. முதன் முதலாக சைக்கிள் பயிற்சிக்கு என்று வாங்கி இப்படி ஆகுமென்று நினைக்கவேயில்லை.

வீட்டிற்குள் வந்து ஃபேனில் உட்கார்ந்தும் வியர்வை அடங்கவில்லை. இதயம் படபடன்னு அடிச்சுக்கிட்டுது.. என்னடா தனபாலு இப்படி சிக்கல்ல மாட்டிவுட்டுப்போயிட்டியே... என்று

மனதுக்குள் கேட்டாலும் போலிஸ் பயம் பூதம்போல நின்றது.

என்னங்க.. ஏங்க என்னவோ போல இருக்கிங்க... கேட்டாள்.

ஒண்ணும் இல்லப்பா... புழுக்கம்.. தாங்கல்லே.. என்றேன்.

ஏங்க ஃபேனைப் பாருங்க... எவ்வளவு ஸ்பீடா ஓடுது... புழுக்கம்னு சொல்றீங்க? மறுபடியும் கேட்டாள்.

வெளியிலப் பாரு வெயிலை.. சுள்ளுன்னு இருக்கு... இது மழைய உண்டாக்குற வெயிலு... அந்தப் புழுக்கம்..

என்னன்னவோ கேட்டாள். பதில் சொன்னேன்.

அன்றைய பொழுது தனபால் சுடுகாடு செல்லும்வரை நெருப்பாகச் சுட்டது எனக்கு.

என்ன நடக்குமோ என்கிற அச்சம் பாம்பாய் நகர்ந்துகொண்டிருந்தது மனதுள்.

வரட்டுமே.. சார்.. அவன் என்னோட பிரண்ட்.. ஏதோ கஷ்டம்னு என்கிட்ட பணம் கேட்டான்.. ரொம்ப நல்லவன் சார்.. என்ன முடையோன்னு எடுத்துக்கொடுத்தேன். இதுவரைக்கு என்கிட்ட அப்படிக் கேட்டதுல்ல. ரொம்ப கௌரவம் பாக்கறவன்...சார்.. எனக்கும் இதுக்கும் சம்பந்தமில்ல சார்.. என்று பேசிவிட்டால் போகிறது என்றும் மனதுக்குள் நினைத்துக்கொண்டேன்.

அன்றைக்கு புதன்கிழமை வாசலில் குரல் கேட்டது.. அங்கிள்.. என்று ஒற்றைக்குரல் ஒற்றைச்சொல்லை உரத்துச் சொன்னபடியே.

எட்டிப்பார்த்தேன். ஒரு நடுத்தரவயது பெண்ணும் அவள் மகள்போல ஒரு பெண்ணும்..

யாரும்மா? என்றேன்.

அங்கிள்.. நான் தனபால் பொண்ணு அங்கிள்.. அப்பாவோட காரியம் பதினோராம் நாள் வச்சிருக்கோம்.. நாளைக்கு இரவு கல்நிறுத்தி நாளை மறுநாள் கருமாதி அங்கிள்.. வந்துடுங்க.. என்றாள்.

எனக்கு என்னவோ போலிருந்தது.. ஏம்மா அப்பாவோட காரியத்துக்கு நீயே வந்து சொல்லலாமா? வேறு யாரும் இல்லியா?

இருக்காங்க அங்கிள்.. ஆனா நான் உங்ககிட்ட முக்கியமான விஷயம் பேச வந்தேன்.. அப்பா சொன்னது.. என்றதும் உடம்பு முழுக்க ஒருமுறை அதிர்ந்து குலுங்கியது.. அந்த நூறு ரூபாய் மேட்டர்தான்.. மாட்டுனேன்.. அடப்பாவி தனபால் இப்படிப் பண்ணிப்புட்டுப் போயிட்டியே.. எதையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் சொல்லும்மா உள்ள வா என்றேன்.

இல்ல அங்கிள் உள்ள வரக்கூடாது.. இவங்க என்னோட சித்தி.. என்றபடி சொல்ல ஆரம்பித்தாள்.

அங்கிள் அப்பா அடிக்கடி உங்களைத்தான் சொல்லிக்கிட்டு இருப்பாங்க.. என்னோட ப்ரெண்ட்ஸ்லேயே சரவணன்தான் நல்லாப் படிப்பான். ஒழுங்காப் படிப்பான்.. அமைதியானவன்.. ஒழுக்கமானவன்.. வீட்டுல அப்பா அம்மா சொல்றத கேட்டு நடக்கறவன். இன்னிக்கு வாழ்க்கைல நல்லா இருக்கான்.. என்னைப் பொருத்தவரைக்கும் அவன மாதிரி இருக்கணும் வாழணும்னு காலம்போன கடைசில யோசிச்சு என்ன பண்ணமுடியும்? உனக்குன்னு நான் எதுவுமே பண்ண முடியாமப் போயிடிச்சு.. நீ நல்லாப் படிக்கணும்.. அந்த சரவணன் மாதிரிப் படிக்கணும்.. அவன் என்னோட நண்பன் மட்டும் இல்ல.. கூடப்பிறக்காதப் பிறப்பு.. அவன்கிட்ட நூறு ரூபாய் கடன் வாங்கியிருக்கேன்.. இந்தா.. இதுல பேனா வாங்கிக்க.. சரவணன் காசுல பேனா வாங்கினா நல்லாப் படிப்பு வரும்.. மிச்சக் காச பத்திரமா வச்சுக்க.. சரவணன் மாதிரி படிக்கணும்.. சொல்லி நேத்து நீங்க கொடுத்த நூறு ரூபாவை என்கிட்டதான் கொடுத்தாரு அங்கிள்.. அவருக்குள்ள ஏதோ ஒரு குற்ற உணர்ச்சி.. எங்கள அம்போன்னு விட்டுட்டுப்போயிட்டாரு.. ஆனாலும் நான் உங்கள மாதிரி படிப்பேன் அங்கிள்.. எங்கப்பாவோட ஆசை அங்கிள்.. உங்க காசுலதான் ஒரு பேனா வாங்கப்போறேன்.. அதை வச்சுதான் என்னோட அடுத்தக் கட்டப் படிப்பத் தொடரப்போறேன் அங்கிள்.. மறக்காம அப்பா கருமாதிக்கு வந்துடுங்க.. அம்மாவும் சொல்லச் சொன்னாங்க..

சட்டென்று எல்லாப் பயமும் தீர்ந்தது போல உணர்ந்தேன். மனசு தெளிவாக இருந்தது. மனதுக்குள் தனபாலை நினைத்துக்கொண்டேன்.

●

# ரயிலும் ரயில் சார்ந்த இடமும்

இரா.மோகன்ராஜன்



மனுசன் மனச கொரங்குக்கு ஒப்புமை சொல்வாங்க ஓரெடத்துல நிக்காது நெனப்புக் கிளைகள்ள அது தாவித் தாவிப் போய்கிட்டே இருக்கும். கொஞ்சம் ஒரு கிளையிலத் தரிச்சா செரங்கு நெனப்பு வந்து அதை நோண்டிப் புண்ணாக்கிக்கும், அதால அதுக்குச் சொகமா இருக்குறது தாவுறது மட்டும்தான்.

பறவைங்களும் அப்படித்தான்; பறக்குறதுதான் வாழ்க்க. பறந்தா பாதி சொம கொறஞ்சிரும். மனுசனுக்கு றெக்க இல்ல. அதாலதான் மனசு இருக்கு அத பறக்கவுட்டுட்டு அவன் ஒக்காந்துக் கிடக்கான். ஒடம்பு பெருஞ் சுமைங்கறதாலேதான் அதவிட்டுட்டு மனசு பறக்குது. எப்பவாது உடம்பு கெஞ்சிக் கேட்டா மனசு அதோட களிப்ப ஓடம்புக்குக் கொஞ்சம்போல உட்டுக் குடுக்கும், அப்படி உட்டுக் கொடுக்குறப்போ மனசோட சேந்து ஒடம்பும் கொஞ்சத் தூரம் பறந்து சொம தாங்காம வைகோலு படப்புக் கோழி போல, தொப்புனுத் தரையில வுழுந்துடும்.

எல்லா நேரமும், காலமும் ஒடம்பும் மனசும் சேந்து பறக்கறதில்ல. அப்படி சேந்து பறக்கறதுன்னா மனசு தாவாம இருக்கிறப்பதான நடக்கும். அப்படியான அதிசயம் மனசும் ஒடம்பும் கண்ணும் அலுக்காமப் பாக்குறதா நடக்குறதா இருக்கணும். அப்படி மனுசன் பாக்க அலுக்காதது நாலு இருக்கு கடலு, யானை, ரயிலு.

கொழந்தையா இருந்தாலும் சரி, குமரியா இருந்தாலும் சரி, தள்ளாத கெழவயசா இருந்தாலும் சரி, மனுசன கொழந்தயா மாத்துற சக்தி இதுகளுக்கு உண்டு.

கடலுக்கிட்ட வாழுறவங்கள கேளுங்க, கடலு பாக்க ஒங்களுக்கு அலுக்கலியான்னு. இல்லேனுதான் சொலுவாங்க. தாயப் பாக்க அலுத்தாலும் கடலப் பாக்க அலுக்காதும்பாங்க. கடலு சலிச்சா வாழ்க்கையும் எப்பவோ அவுங்களுக்குச் சலிச்சுடும்.

மிருகத்துலலேயே பெருசு யானை. திருவிழா, பண்டிகை, தெருக் கோடினு எங்கனாலும் யான வருதுடோய்னு குரலு வந்தா மணிச் சத்தம் கேக்குதான்னு கூட பாக்காம ஓடி போய்ப் பாக்க மனசும் ஒடம்பும் பறக்கும் கொழந்தைங்களுக்கு. நேத்துதானே திருவிலாவுல கிட்டபோய் காசு போட்டுட்டு வந்தேன்னு சொன்னாக் கூட பசங்க கேக்கமாட்டாங்க. ஒரு எட்டு வேலயப் போட்டுட்டுப் பெரியவங்கக் கூட அந்த அசையுற மலைய,யானய பாத்துட்டு வந்து, பாக்காதவங்கக்கிட்ட ஒரு கெழமைக்குக் கத அளப்பாங்க. யான பத்திப் பேசுறது மட்டுமில்ல கேக்குறதுக்கும் அலுக்காதில்ல.

அப்படித்தான் மனுசன் கண்டுபுடிச்ச ரயிலும்.

செவப்பு அட்டக்கணக்கா அது ஊந்துப் போறப்பொ அதிசயப்படாத மனுசப்பயலே கெடயாது. இத்தனைக்கும் மனுசக் கண்டுபுடிப்புதான் ரயிலு. அதாலேயே அது அதிசயமாயிட்டுது.

சோத்து மூட்டக்கட்டிக்கிட்டு ரயிலு பாக்க வந்த கிராமத்து சனங்களும் அது பிகிலூதூர சத்தத்தக் கேட்டு, டவுனுக்கே வந்தன்னாபாருன்னுப் பின்னங்காலு பொடனில தெறிச்ச சின்னானும் ரயிலுப் பாத்த அதிசயத்தச் சொல்லாம செத்ததில்ல.

ஜீவா ஏறுனா ரயிலு எறங்கினா செயிலும்பாங்கே. வீட்டுப் படி எறங்கினா ரயிலு. ரயிலடி எனக்கு. கடலு மக்களப் போல ரயிலடி மக்களுக்கும் ஒரு வாழ்வு இருக்கு. அவங்களுக்குக் கடல நம்பின வாழ்க்க. ஆனா இவங்களுக்கு ரயில நம்புன

வாழ்க்க இல்லேனாலும் ரயில பாக்குற வாழ்க்கயா அது இருக்குது.

எழுத்தாளர் சுந்தரராமசாமி தனக்குப் புடிச்ச இடங்கள்ல ரயிலடி பெஞ்சும். அங்க இருக்குற ஆலமரங்கள பத்தியும் சருகு இல உதிர்ராப் போல நெனப்பு வச்சு செலாகிச்சிப் பேசிட்டே இருப்பாரு. அப்படித்தான் ரயிலும் ரயில் சார்ந்த இடமும் இருக்குன்னு நெனைக்கிறன். அதும் ரயிலு ஸ்டேசன் எதித்தாப்போல இருந்தா சொல்லவே வேண்டாம்.

வெள்ளக்காரன் போட்ட தண்டவாளம், ரயிலு மேடை, மரங்க, கல்லு பெஞ்சு. இப்ப வரைக்கும் எங்கூர்ல இருக்கத்தான் செஞ்சுது. இருக்கத்தான்னா இப்போ இல்ல. வெள்ளக்காரன் காந்தியக் காப்பாத்தி நம்மகிட்ட உட்டுட்டுப்போனா(ன்) நாம அவர கொன்னுட்டம். அப்படித்தான் அவன் நமக்கு விட்டுட்டுப்போன ரயிலு, ரயிலடி பெஞ்சுவரைக்கும் உடைச்சுப்போட்டு நம்மோட தேசப்பக்தியக் காமிக்கிறம்.

ஆலமரங்கள உள்ளூரு கொள்ளக்காரங்க கொண்டுப் போய்ட்டாங்க. புதுசா ஸ்டேசன் வந்துருச்சு. அகண்ட பாதயும் போட்டாச்சு ரயிலுதான் வாரதில்ல..வந்தாலும் நிக்கிறதில்ல. கரி எஞ்சின் நின்னு போகும் டீசல் எஞ்சின் நிக்காம போவுது.

வெள்ளக்காரன் அவனுக்காக ரயிலு போட்டாலும், நாமளும் அதுல ஏறத்தான் செஞ்சோம். அவன் ரயிலு (தண்டவாளம்) போட்டக் கதங்க நம்ம ஊரு பெரிசுங்ககிட்ட அந்தத் தண்டவாளம் போல நீண்டு நெடிஞ்சு கெடக்கு. எங்க ஊரு ரயிலடி ஆலமரம், வேப்பமரம், புங்க அப்பறம் புளிய மரம் எல்லாம் 200 வருசத்து மரங்க. ரயில அதிசயமா பாக்குற சனங்களுக்கு அந்த மரங்களும் அதிசயம்தான்.

ஊரு கிளிங்க பறவைங்க எல்லாம் காலையில கிளம்பி போறப்போவும், சாயங்காலம் மசண்டையில அடையிறப்பவும் ரெண்டு நேர ரயிலுக்கு கட்டியமா இருக்கும். ரயிலோட நீராவி என்ஜின் சத்தத்துக்கு அவையெல்லாம் அந்தப் பக்க மக்களப்போல சட்டப்பண்ணாதுங்க. ஊருலந்துச் சொந்தக்காரப் பசங்க ரயில பாத்து அது எழுப்புற சத்தத்தக் கேட்டு காதைப் பொத்திக்கிட்டு பாப்பாங்க அப்படித்தான் எடம் தவறி வாற பறவைங்க எப்பவாச்சும் ரயிலடி மரத்துகிட்ட ரயிலு வந்து நிக்கிறப்போ சடசடக்கும்.

சட்டுனு ரயிலடினா மரங்கதான் நெனப்புக்கு வரும். அப்புறம்தான் குச்சி ரயிலு, யான ரயிலு எல்லாம். குச்சி ரயிலுங்குறது எஞ்சினுக்கு ரெண்டுப் பக்கமும் காது இருக்காது. அது ஒரு தகர அடப்பு. யான ரயிலுக்குக் காதுபோல அடப்பு இருக்கும். அப்பறம் குச்சி ரயிலு சவுண்டு பெருசா இருக்கும். யான ரயிலு அப்படியில்ல. குச்சி ரயிலு ஊசி போலப் பறக்கும். இது யான போல மெதுவாதான் வரும்.

ரயிலு, ரயிலு சார்ந்த எடமும் ரயில்திணை என்றறிக. கழிப்பற இல்லாத காலம் எல்லாம் மக்களுக்கு கழிப்பற ரயிலு தண்டவாளம்தாங்க. இன்னைக்கும் உலகின் நீண்ட கழிப்பறன்னு ரயிலு தண்டவாளத்ததான் சொல்றாங்க. கடற்கரச் சனங்க கடற்கரையில எப்படிக் காலைக்கடன கழிக்கிறாங்களோ அப்படித்தான் ரயில்திணை சனங்களும். அது ஒரு அவலமான வேடிக்கை.

நெய்தல் மக்க அலவாரப்போ பின்பக்கத்தத் தூக்கிக்கிட்டு எழும்புறதும் ஒக்காருறதும் போல இங்க ரயிலு வாரப்போ எழுந்து நின்னுக்குவாங்க அது லைட்டு வெளிச்சம் மேல படுமேனுட்டு. ஆனா பல பேரு அப்படியெல்லாம் கண்டுகிறதுல்ல. கூச்ச சுபாவம் உள்வங்களுக்கு அப்படி.

பிரெஞ்சுக்காரங்க காரைக்கால் கடற்கரச் சனங்க கடற்கரயில ஒதுங்கக் கூடாதுன்னும் அப்படி ஒதுங்கினா தண்டம் வசூலிக்கப்படும்னு சட்டம் போட்டதா “மானுடம் வெல்லும்‘ நாவல்ல பிரபஞ்சன் எழுதுவாரு.

ரெண்டு வேள காலக்கடன முடிக்கிறவங்களுக்கு ரெண்டு நேர ரயிலு ஊதிட்டு வாறப்போவே சரியா வயித்தக் கலக்கும். ரயிலு வந்துட்டுனு சொன்னவே கழிய வந்துட்டுன்னுதான் அர்த்தம். செலபேருக்கு கைவேல பாக்குறப்போ மறந்துட்டுருப்பாங்க. ரயிலு ஊதல் அத நெனனப்புப்படுத்திடும். அப்படியானவங்க ரயிலடி கருவக்காட்டுப் புதருக்குள்ள அவரசமா ஒதுங்குவாங்க.

முன்னாடியெல்லாம் ரயிலு பூண்டுதான் தண்டவாளத்துலயும், மிச்ச எடங்கப் பூராவும் இருந்துச்சு அரசாங்கம் சும்மா கெடக்குற எடம்னு எப்போ கருவ வெதயத் தூவுனாங்களோ அப்போ புடிச்சு அதுங்கக் காட்டுக்கு நடுவதான் ரயிலு போற மாதிரி ஆகிடுச்சு.

ஆனாலும் ரயில நம்பி இல்லாத சனங்க அந்தக் கருவக்காட்டதான் நம்பி இருந்தாங்க. ஒதுங்குறதுக்கும், அடுப்பு வெறகுக்கும் ஆடு மாடு வளப்புக்கும் கருவக் காடு அவங்களுக்குப் பெரிய ஒதவியா இருக்கு.

காலையில ஆம்பளைங்க ஒதுங்குனா, அந்தில பொம்பளைங்களுக்கு. இது யாரோ பேசிவச்சாப் போலக் காலம் காலமா நடக்குறது. வேளதப்பிப் போனா ரகளதான்.

ஆம்பள குத்து, பொம்பள குத்துன்னு கருவ பொதரும் ஒதுக்கல்ல இருக்கும். அது போகத்தான் தண்டவாளத்துல நேரா போய் குத்த வைக்கிறதும். ஒலகத்தோட நீண்டக் கழிவறைன்னு சும்மாவா சொன்னாங்க.

ஆடுங்க, மாடுங்க ரயிலு வந்தாலும் கண்டுக்காம ஒதுங்கி அதுங்க கருவ காயி, புல்லு .திண்ணுறதிலே கண்ணா இருக்கும். புதுசா அந்தப் பக்கம் வார ஆடு மாடுங்க ரயிலு ஊதிட்டு வாறப்போ எங்கிட்டு ஓடுறதுன்னுத் தெரியாம மாட்டிச் செதறிப்போகும்ங்க. அடிபட்ட ஆடு, மாடு குருதி வழியிற எல்லாம் சேத்துதான் ரயிலடி. அடிபட்ட ஆடுகள மாடுகள வளக்குறவங்க அதுக்குச் சொந்தம் கொண்டாட முடியாது. ரயில்வேயில தண்டம் போடுவாங்க. அதுக்குப் பயந்துச் சனங்க மூச்சுவிடமாட்டாங்க. ஆனா வாயப்பொத்திட்டு அதுமுதிட்டுத் திரும்புவாங்க.

ரயிலு அரசாங்கத்துச் சொத்து போல அடிபட்ட ஆடு காங்கிமேனுக்குத்தான் சொந்தம்.

ரயிலு தளத்துல டேசனுக்குச் கெழக்கே தனிச்சு கெடக்குற சிமெண்ட் பெஞ்சுக்கு காதலர் பெஞ்ச்சுனு பேரு.

ஊருக்குப் புறத்தால இருக்குற காதல் சோடி, சோடி மாறினக் காதல், காதல்மாறின சோடி, பள்ளிக் காதல் காதல் பள்ளி எல்லாமே அந்தக் கடைசிப் பெஞ்சுதான். ரயிலு போறதுந்தெரியாது வாரதுந்தெரியாது அதுகளுக்கு. ஆனா அவங்க ஒலகம் வேற. அப்படி ஒரு ஏகாந்தப் பூங்காவா அந்தப் பெஞ்சு இருக்கும்.

வீட்டுத் தெருவாசலுக்கு நேரா அந்த ஒத்தப் பெஞ்சு இருந்துச்சா.. சொல்லவே வேண்டாம். அப்படி ஒரு தரிசனம் இருக்கும்.

காதலர் மாறிட்டே இருந்தாலும் பெஞ்சு அப்படியேதான் இருந்துச்சு. அவங்க சிரிப்பு, தவிப்பு, கண்ணீரு எல்லாத்தையும் சொமந்துகிட்டு.

கூட்ஸ் ரயிலு வந்தா கொண்டாட்டம் தான். சாக்கட்டி வெச்சு மனசுலபட்டத எழுதுறது தொடங்கிச் சொந்தப்பேரு, ஊரு எழுதுறது, நம்மப் போல எத்தனப்பேரு கிளம்பிருப்பாய்ங்க கெட்வார்த்த, படங்க போடுறது இப்புடி.. சொல்லப்போனா பாரதிராசாவோட ரயிலு ராதிகா சுதாகருக்கு முந்தி நாங்கதான் இந்த ரயிலு மெயிலு கடுதாசிக்கு முன்னோடினா பாத்துக்கலாம்.எவனோ பாரதிராஜாகிட்ட நம்ம ஐடியாவே போட்டுவிட்டுருக்கான். இப்போ கொஞ்சம் போல எழுதவருதுண்ணா அது ரயிலு கூட்ஸ்சு பொட்டில எழுதிப்பாத்ததாதான் இருக்கணும்.

கூட்ஸ் ரயிலுங்குறது சரக்குப் பொட்டி. நெல்லு, உப்பு இதெல்லாம் ஏத்திப் போவும் வரும். வெறுசா வார பொட்டியில பூனை, நாய்னு தொல்லை பொறுக்காத குட்டிங்களை யாராவது சனங்க சரக்குப் பொட்டில தூக்கிப் போட்டுருவாங்க. பொட்டிய எங்க முழுசாத் தொரக்குறாங்களோ அங்க இதுங்க கீழ எறங்கி டேசன் பக்கத்துல இருக்க வீடுங்களுக்குப் போயுடும்ங்க.

அப்படி வந்த நாய் பூனைங்கள கூட்டிச் சேத்தா ஒரு பண்ணையே வைக்கலாம். அப்படி வந்த பூனை நாய்ங்கதான் நம்ம வளப்பாவும் இருந்துதுங்க. அதுங்க மட்டும்தான் ரயில இப்பவும் மெரட்சியோட பாக்கும்ங்க.

கர்ணன் போல, தளபதிபோல அதுங்களுக்கும் அப்படியொடு பிளாஷ் பேக்கு இருக்கும்

சில நேரம் பாசஞ்சர் ரயிலுலே மனுசங்களும் வருவாங்க விட்டுலே கோவிச்சிட்டுக் கிளம்பினவங்க, அநாதனு சொல்றவங்க. இப்படி... அவங்களப் பாத்தாப் பரிதாபமா இருக்கும். வீட்டுப் பெரியவங்கச் சாப்பாடும் போட்டு, அவங்கச் சோகக் கதயலாம் கேட்டு, ஊருக்கு இல்லே. வேலைக்குப் போனாத் தகவலுச் சொல்லுங்கனு முகவரி காகிதத்தையும் கையில் கொடுத்து அடுத்த ரயிலுலே ஆறுதல் சொல்லி அனுப்பி வப்பாங்க.

அதெலாம் அந்தக் காலம். அப்படி வீட்டவிட்டு ஓடிவந்து நம்மூட்டுல பசியாறி மாத்துக்குப் பழைய உடை வாங்கிப் போய் இன்னைக்கு எத்தனப் பேரு சினிமா டைரக்டரா... நடிகர், நடிகையா.. இல்லே தொழிலதிபரா ஆகிருப்பாங்கனுதா தெரிலே.. எப்படியோ நல்லா. இருந்தாசரிதான்.

ஆனா ரயிலுலே விழுந்து உயிரவிடுறவங்களதான் புரிஞ்சுக்க முடிலே டேசன் வாசல்லே துணிப் போத்திக் கொண்டு வந்து வைக்கிற எத்தனையோ சடலங்கள பாத்தாச்சு. வெத வெதமா வெறச்சு நீட்டுனக் கால்கள் மட்டுமே ஆயிரம் கத சொல்லும்.

சந்தோசமான விசயம்னா சலசலத்து ஓடுற ரயிலுலத் தெரியும் சன்னல் முகங்கதான். குழந்தைங்க கையாட்டுறது. ரயில்லேயும், ரயிலடி குடிசைப் பக்கத்து குழந்தைங்க அலுக்காம ரயில கொண்டாடுறதும்தா.

ஏர்போட்டு பக்கத்துல வசிக்கிறவங்க எப்டி ஏரோபிளேன்ல போறது ஒரு கனவோ அப்படி கையசப்போட கனவு காணுறவங்க ரயிலடி தெருக்கள்ளேயும் இருக்கதான் செய்ராங்க..என்ன..ரயில இவங்கத் தொட்டு..ஏறி ஆசத் தீர நின்னுட்டாவது வருவாங்க ஏரோப்பிளேன்ல அப்படி முடியாது.

ரயில்திணையினு சொன்னா ஒலகமே அது ஒட்டிதான் ஓடும். எட்ரை மணி ரயிலு வந்தாச்சு, ஒம்போதர கம்பன் எக்சுபிரசு வந்துடன்டான் ராமேசுவரம் போய்ட்டான் இப்படிதான் இருக்கும். திணை மொழியுங்கூட ஸ்கூலு போகாதப் புள்ளைங்கள அம்மாகாரவங்க நீ ரயிலு எஞ்சினுல கரி அள்ளத்தான் போகனும்பாங்க அப்படி சொன்னாவே கொழந்தைங்களுக்குப் பயம் வந்துடும். ஒன்னுக்கும் ஒதவாம திண்ணப்பேச்சு பேசறவங்கள கரி அள்ளத்தான் லாயக்கும்பாங்க. அத்தன கஷ்ட்டமான தொழிலு ரயிலு பெட்டில கரி அள்ளுறது.

கரிஎஞ்சின் பொட்டி வீட்டுக்கு நேரா நிக்கும். அவங்க கஷ்டம் என்னானு எங்களுக்கு நல்லாவே வெளக்கம். எரியுற கொல்லன் துருத்திப்போல எஞ்சின் அடுப்புல எஞ்சின் பின்னாடி கொட்டி வச்சிருக்குற நெலக்கரி கட்டிய கரியேந்தல்ல லாவகமா அள்ளி அள்ளி போடனும். எட்டி நின்னு பாத்தா சூரியன் போல தக தகனு மின்னும். மெய்யாவே சூரியன் கிட்டப் போனா எப்படி இருக்குமோ அப்படி இருக்கும் அந்த சின்ன சூரியன். எஞ்சின் டிரைவர் கொஞ்சம் சொகுசா இருக்க, அவருக்குத் துணையா இருக்கற ரெண்டு பேருதாம் இந்த வேலயப் பாக்கணும். அதும் வண்டி ஸ்டேசன்ல நின்னு கெளம்பறப்போதான் வேலயே. மாங்கு மாங்குனு அள்ளிப் போட்டு எரியவிட்டாதான் வண்டியே ஸ்டாட்டாகும்.

எஞ்சினு, உள்ள வேகுற வெக்கையால், சனங்கள அள்ளிட்டுவற களப்புள அதும் நின்னு தண்ணி குடிக்கும். கரி அள்ளிபோடுறவங்கதாம் சங்கிலிய இழுத்து அது வாயில இரும்புப் பொனல வச்சுவிடுவாங்க அத பாத்ததும் அவங்களுக்கும் தொண்டை வறலும்.

ரயிலு நிக்கறபோ அவங்க நம்ம வீட்டுக்கு வந்துத் தண்ணிக் கேப்பாங்க. கொண்டுப் போய் கொடுக்குறபோவே பயமா இருக்கும். அப்படி ஒரு கோலம். பாக்குற நமக்கு ஏண்டா இப்டியான வேல அதுக்கு பள்ளிக்கோடம் போயி வாத்தியாருகிட்ட அடிவாங்காலாம்னு தோணும். கரியள்ளுறவங்க மேலயும் முகத்துலயும் கரி படிஞ்சு பாக்கவே பயமாவும், பரிதாபமாவும் இருக்கும்.

வீட்டுல அம்மாகாரங்க பொம்பள பிள்ளைங்கவேலப் பாக்காமகதபுஸ்தகம் படிச்சுட்டே இருந்தா "ஒனக்கு ரயிலு எஞ்சின்ல கரிஅள்ளி போடுறவன்தான்டி புருசனா வருவான்னு!" சாபமல்லாம் கொடுப்பாங்கன்னா பாத்துக்குங்க.

●

# அல்லிக்குளம்

## மீனாசுந்தர்

பழுத்த கனியில் நெளியும் புழுக்களென மனிதர்களுக்கு நினைவுப் புழுக்களின் அவஸ்தை. நடமாட்டமின்றி கைகால் நடுங்க படுக்கையாகி நான்கு சுவற்றுக்குள் முடங்கிய பின்னும் கூட, ஒரு சம்பவத் தெறிப்பில் நினைவின் ஆழத்திலிருந்து ஊறி நொதிக்கும் அவற்றின் வாதையை என்னவென்பது? கொப்பளிக்கும் கண்களுடன் அவற்றை அனுபவித்தவர்களுக்கே புரியும்.



சுவற்றில் மாட்டியிருந்த காலண்டரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார் விசுவலிங்கம். 12.08.1953 என்ற நேற்றைய காகிதம் இன்னும் கிழிபடாமலேயே காற்றில் சலசலக்கிறது. இன்றைக்கு தேதி பதின்மூன்று என்பதை மனத்திற்குள் ஓட்டியவாறே எரி வீழ்ந்து கருகிய தென்னையாய்த் துடித்துப் போகிறார் விசுவலிங்கம். மனம் ஆற்றாமையில் புகைச்சலெடுக்கிறது. துக்கம் தொண்டைக் குழியிலிருந்து கீழிறங்க மறுத்திற்று. ஒன்றுக்கும் உதவாத அற்ப விஷயத்திற்கே பெரும் மன உளைச்சலடையும் அவரிடம், ஆத்மநாதம் பிள்ளை காலையிலேயே இந்தச் செய்தியைச் சொல்லியிருக்க வேண்டியதில்லை.

“அஞ்செல எறந்து பெயிடுச்சாம். ராப் படுக்கயிலியெ வாயில நொர தெள்ளிக் கெடந்திர்க்கு. குடிச சொவத்துல சனி மூலயில வெளி வெளிச்சம் உள்ள வர்ற மாரி பெரிய வெடிப்பிருந்திருக்கு. அதில ஏதும் பூச்சிபொட்டய்வொ அடஞ்சிக் கெடந்திச்சோ என்னவோ. காலுல கடிச்ச மாரி பல்லு பதிஞ்சிருந்திருக்கு. அந்த எடத்தில கடிபட்ட புண்ணு இருக்காம். அதிலருந்து ரெத்தம் வழிஞ்சி காஞ்சிக் கெடந்திருக்கு. நாவம் தீண்டிருக்கலான்னு பேசிக்கிறாங்க. அப்பபடித்தெங் எனக்குந் தோணுது. கை காலெல்லாம் நீலம் பாரிச்சி கெடந்திருக்கு. பொழுது சாஞ்சி சாயிந்திரம் எடுக்கறதா கேள்வி. பெயிட்டு வெருவமா?” என்றார் ஆத்மநாதம்பிள்ளை.

விசுவலிங்கத்திற்கு வீசும் காற்றின் தழுவலும் மேனியில் உரைக்கவில்லை. நிமிடத்தில் உடலே கண்ணீர் சிந்துவதைப் போல வியர்த்துக் கொட்டிற்று. அவர் வாய் அனிச்சையாய்த் தாயேவென முனகிற்று. எதிரில் நிற்கும் ஆத்மநாதம் பிள்ளையின் உருவம் அலையலையாய்க் கானல் காட்சியாய்த் தெரிகிறது. திகைப்பைக் காட்டும் வண்ணம் விசுவலிங்கத்தின் கைகள் வாயைப் பொத்திக் கொண்டன. அப்படியே சிறிது நேரம் கல்லாய்ச் சமைந்து விட்டார்.

விசுவலிங்கத்திற்கும் ஆத்மநாதம்பிள்ளைக்கும் பால்ய கால சினேகிதம். விசுவலிங்கத்தின் ஏற்றத் தாழ்வுகள் அத்தனையிலும் பிள்ளை அருகிலிருந்திருக்கிறார். ஆத்மநாதம்பிள்ளை வாழ்க்கையின் முக்கியத் தருணங்களில் விசுவலிங்கமும் கூடவே பயணித்திருக்கிறார் அவ்வளவு புரிதல் அவர்களுக்குள் இழையோடிக் கிடந்தது. எதையும் சங்கோஜமின்றி பகிர்ந்து கொள்ளும் நட்பின் அடர்த்தி. ஒரே பகுதியில் பிறந்து, வளர்ந்து, ஒரே வகுப்பில் அருகருகே அமர்ந்து படித்தவர்கள் இப்போதும் அங்கேயே வாழ்பவர்கள் இன்று வரை அந்த நட்பிற்கு ஊசி முனையளவும் பாதகமில்லை.

மனைவி ராஜலட்சுமி இறந்து, ஒரே மகளையும் திருமணம் செய்து கொடுத்த பின் ஒண்டிக் கட்டையாகிப் போன விசுவத்திற்கு இப்போது காலையும் மாலையும் ஆத்மநாதம்பிள்ளை தான் அணுக்கத் துணை. அனைத்திற்கும் ஆபத்பாந்தவன்.

ஆத்மநாதபிள்ளை வீடு வரை சென்று வருவதாகச் சொல்லி நகர்ந்து விட்டார்.

துக்கத்தில் தவித்த விசுவலிங்கம் கயிற்றுக் கட்டிலில் மல்லாந்து, வலது கையை நெற்றியின் மேல் மடக்கிப் போட்டுக் கண்களை மறைத்தபடி படுத்துக் கிடந்தார். வயிறு ஏறி இறங்கிற்று. நெஞ் செலும்புகள் துருத்திக் கொண்டு தெரிந்தன. அஞ்சலையை அவர் எப்படி மறக்க முடியும்? தாயை யாராவது மறக்க முடியுமா? ஒருவகையில் அவளும் தாய் தான். ஆற்றொண்ணாத் துயரில் தேம்பிய அவரின் ஆழ்மனத்துள் பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்வுகள் ஊற்று நீராய்ப் பொங்கியெழுந்தன.

.....

அல்லிக்குளத்தின் புகழ் பாடிக் கொண்டிருந்தாள் அஞ்சலை.

அவள் சொல்ல சொல்ல வியப்பாய் இருந்தது. விசுவலிங்கம் அவளை அதிசயம் போலப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார். அல்லிக்குளம் குளிர்ச்சியென்பது தெரியும். அஃது உடல் சூட்டிற்கும் மூலத்திற்கும் இத்தனையளவு பயன்படுமென்று அவர் அறிந்தவரல்லர். இத்தனை காலமும் அந்தக் குளத்தைப் பார்த்துக் கொண்டு சென்றிருக்கிறாரேயொழிய அதில் கால் நனைத்ததில்லை. அது கீழத்தெரு ஆட்கள் புழங்குகிற குளம், இவர் மேலத்தெரு. மேலத்தெரு ஆட்கள் கீழத்தெரு மக்கள் பயன்படுத்தும் எதையும் தொட்டுக் கூடப் பார்ப்பதில்லை. அதை அவர்கள் பெரிய கௌரவக் குறைச்சலாக நினைத்தார்கள். ஒருவேளை பயன்படுத்தினாலும் கீழத்தெரு ஆட்களே அதை ஏற்றுக் கொள்வார்களா என்பதும் ஐயம் தான். அவர்கள் தகுதிக்கு இங்க வருவதாவென மருகுவார்கள். விசுவலிங்கம் வயல் வரப்பைப் பார்க்க அந்தப் பக்கம் போவாரேயொழிய வேறு ஜோலி வைத்துக் கொள்வதில்லை. அவர் தெரு ஆட்கள் குளிக்க, தெப்பக்குளம் வாயைப் பிளந்து கொண்டு கிடக்கிறது. அதில் அல்லிக் குளத்தைப் போலச் செடிகளோ தூசு தும்பட்டுகளோ இல்லை. கடலைப் போல விரிந்து கண்ணாடி நிறத்தில் இக்கரைக்கும் அக்கரைக்குமாய் அலையடித்துக் கொண்டு கிடக்கும் தெப்பக்குளத்தின் பக்கம் கீழத்தெரு ஆட்கள் செல்வதில்லை. சென்றால் சிக்கல்கள் முளைக்கும்.

இரண்டாண்டுகளுக்கு முன் கீழத்தெரு இளவட்டுகளால் ஏற்கனவே சில பிரச்சனைகள் ஏற்பட்டு அசமடக்கப்பட்டிருந்தன. வேறு எதுவென்றாலும் பரவாயில்லை. ஆடு, மாடு, நாய்கள், நரிகள், குருவிகளுக்குக் கட்டுப்பாடுகளில்லை. அவை நினைத்தது போல வாழலாம். எந்தக் குளத்திலும் குளிக்கலாம். நீரருந்தலாம். கீழத்தெரு மனிதர்கள் பாவம். ஒரு காலத்தில் தொட்டால் தீட்டு. அந்தத் தீட்டையே நீரில் கழுவித் தான் போக்கினார்கள். நீரே தீட்டுப்பட்டு விட்டால் என்ன செய்வது? அபாய அறிவிப்பைப் போல அங்கொரு அறிவிப்புத் தட்டி வைத்திருந்தார்கள். அந்நியர் பிரவேசிக்கக் கூடாது. மேலத்தெரு ஆட்களின் புழக்கத்திற்கு மட்டும் உள்ள குளம்“ உயர்ந்த குணமுள்ள( ?) மனிதர்கள்.

யார் போனாலும் இல்லையென்றாலும் விசுவலிங்கத்திற்கு வேறு வழியில்லை. அவர் கீழத்தெரு பக்கம் சென்றாக வேண்டிய கட்டாயம். அங்கு தான் அவருக்கு வேலிக் கணக்கில் விளைநிலங்களிருந்தன. ஒரு தென்னந் தோப்புமிருந்தது. அங்கிருந்த கீழத்தெருவாசிகளை அவர் அனுசரித்துப் போக வேண்டிய கட்டாயம். மேலத்தெரு ஆட்கள் கீழத்தெருப் பக்கம் வரும் போது சாதுக்களாகவும், மேலத்தெரு பக்கம் சென்ற பிறகு மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு “ங்கொம்மா..ங்கோத்தா’வெனச் சவடாலடிப்பதும் வாடிக்கை நிகழ்வுகளாகவிருந்தன. விசுவலிங்கமும் தொடக்கத்தில் அப்படி இருந்ததுண்டு.

ஆனால் மீசை முறுக்கிய எவரும் உடல் நோவில் அவர் படுத்த போது ஆறுதல் சொல்லக் கூட வந்து நிற்கவில்லை. பழகிய தோசத்திற்கு ஆதம்நாதம் பிள்ளை மட்டும் துடித்தார். அவருக்கும் நோய் நொடி மருந்து பற்றி பெரிதாக அனுபவமில்லை. நண்பர் துடிப்பதற்குக் கலங்க மட்டுமே அவரால் முடிந்தது.

அந்தஸ்து மனிதர்கள் தனியே கவனிப்பாரற்றுக் கிடக்கும் போது தான் எளியவர்களைத் தேடுகிறார்கள். எளியவர்களின் பூடகமற்ற அன்பு ஒருபோதும் கணக்கு வழக்குப் பார்ப்பதில்லை. யார் துன்புறுகிறார்களோ அவர்களுக்கு ஆதரவாய் வலிய சென்று அவர்களின் கரங்கள் நீண்டு விடுகின்றன. உடல் தளர்வில் தான் மனிதனின் கர்வமும் திமிரும் ஆணவமும் தானாய் உருகி ஓடுகின்றன.

விசுவலிங்கத்திற்குச் சூட்டு உடம்பு. எப்பவும் காய்ச்சல் அடிப்பதைப் போலக் கொதிக்கும். அதன் நீட்சியாக சூட்டு மூலம் ஆசனவாயில் சிறு பருவைப் போல தோன்றியிருந்தது. நாளடைவிலது சரியாகி விடுமென்று தான் நினைத்தார். ஆனால் மெல்ல மெல்ல அதன் வேலையைக் காட்டிற்று. அது வளர்ந்து கட்டி உடைந்து இத்தனையளவு சிரமம் கொடுக்குமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. வலி "சுருக் சுருக்'கென ரணமாய் இம்சித்தது. பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை கீழ்வாயில் யாரோ செறுகியதைப் போல அப்படியோர் எரிச்சல். நெருஞ்சி முள்ளை வைத்து ஆசனத்துளையில் இறுக்கி தைத்ததைப் போல அப்படியோர் அவஸ்தை. நிற்கவும் முடியவில்லை அமரவும் முடியவில்லை. இடைவிடாத துயரம்..தொந்தரவு. விண்விண்னென்று சதா தெறித்துப் பரவும் பேரவலம்.

காலையில் கடன் கழிப்பது அவருக்கு ஒரு யுகப்போராட்டம். உயிர் நரம்பை யாரோ கீழே பிடித்து இழுப்பது போலத் துடிப்பார்.போய் உட்கார்ந்தால் ரத்தமாய்க் கொட்டும். கழிப்பறைப் பள்ளம் முழுவதும் ரத்தக் காட்டேரியாய் மாறி நிற்கும். ரத்தத்தைப் பார்த்ததும் விசுவத்திற்கு மயக்கம் வருவது போலிருக்கும். கண்கள் பொலபொலவென்று கொட்டும். சத்தம் போட்டு அழக்கூடாதெனத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வார். விசும்பி விசும்பித் தேம்புவார். அந்த வேதனையில் பெண்கள் மூன்று நாள் படும் அவஸ்தையை பலமுறை நினைத்துப் பார்த்திருக்கிறார். நோவில் படும் இந்த வேதனையைப் போலப் பெண்களுக்கு பன்மடங்கு. அதுமாதந்தோறும் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் வாதை. பழனியாண்டவாவென முருகனையழைத்துப் புலம்புவார்.

வயல் தோப்பில் அவ்வப் போது அமர்ந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ள ஒரு கீற்றுக் கொட்டகையைக் கட்டி வைத்திருந்தார். ஒரு நாள் அதில் காலையிலேயே சுருண்டு படுத்திருந்தார் விசுவம், நிலங்களைக் கண்காணித்து வேலை செய்ய நம்பிக்கையான ஆள் வேண்டுமென்று கந்தப்பனை வைத்துக் கொண்டிருந்தார். அவன் மனைவி அஞ் சலை தென்னங் கொல்லைக்கு வரும் சமயம் அந்த இடத்தைக் கூட்டிச் சுத்தம் செய்து வைப்பாள்.

அன்று விசுவத்தின் முகம் வெயிலில் பிடுங்கியகீரைத்தண்டெனவாடிக்கிடந்தது. கந்தப்பன் தான் என்னஙகய்யாவெனக் கேட்டான். விசுவம் முதலில் மருகினார். அவருக்கு எதுவோ மனக்கஷ்டம் என்று நினைத்துக் கொண்டான் கந்தப்பன். "சொன்னாத்தான மனசு லேசுபடும். என்றான். விசுவம் தயங்கி தயங்கி மெல்ல உடைந்தார். விசுவத்தால் தொடர்ச்சியாகச் சொல்ல முடியவில்லை. இரண்டு மூன்று முறை துண்டால் முகத்தைப் பொத்திக் கொண்டு குலுங்கினார். அவரின் அழுகை அவனை ஆட்டிப் படைத்தது. எதற்கும் அத்தனை சீக்கிரம் கலங்காதவர் விசுவம். அழுகிறார் என்றால் வேதனை அப்படி.

"அட இதுக்கா கெவலைப் பெடுறீயோ. இதச் செரி பண்ண அஞ்சலக்கித் தெரியும்" என்றான் கந்தப்பன். விசுவத்தின் முகம் நிமிர்ந்து அவனைப் பார்த்தது. "நீங்க நாங்க சொல்லுறத மட்டுங் கேக்கணும்" என்றான் கந்தப்பன். விசுவலிங்கம் படும்

வேதனையில் யார் என்ன சொன்னாலும் கேட்கும் மனநிலையில் இருந்தார். கந்தப்பன் மட்டும் விதிவிலக்கா என்ன?

அஞ்சலையைப் பார்த்து வருவதாக எழுந்து போனான் கந்தப்பன்.

....

விசுவம் கயிற்றுக் கட்டிலிலேயே கிடையாய்க் கிடந்தார். புட்டத்தைக் கீழ் வைத்து மல்லாந்து படுக்க முடியவில்லை. குப்புறப் படுத்திருந்த அவரை வலியும் வேதனையும் மென்று தின்று கொண்டிருந்தன. அவர் துயரத்தின் தொட்டிலில் ஆடி உழன்று கொண்டிருந்தார். புட்டத்தின் மேல்துணி விலகிக் கிடந்தது. அதைச் சரிசெய்யும் எண்ணமில்லை. எரிச்சலுக்குச் சற்று இதமாக வீசிய காற்றை அவர் தன் புட்டப் பகுதிக்குள் அனுமதித்தார். அப்படியே விட்டுக் கண்ணயர்ந்து அரை மயக்கத்திலிருந்தார்.

கந்தப்பனும் அஞ்சலையும் வந்து சேர்ந்தது கூடத் தெரியாமல் அவர் அப்படியே படுத்திருந்தார். அஞ்சலையின் கையில் ஒரு கிண்ணம் இருந்தது. எதுவோ மருந்து அரைத்து எடுத்து வந்திருந்தாள். விசுவம் படுத்திருந்த கோலத்தைப் பார்த்து அவள் விலகி வெளியில் சென்று நின்று கொண்டாள். மருந்தை கையிலெடுத்துப் புட்டத்தை விலக்கி ஆசனவாயில் படும்படி அப்பிடச் சொல்லி அறிவுறுத்தினாள். கந்தப்பனால் தனியொருவனாக செய்யவில்லை. தடுமாறினான். ஒரு கையில் மருந்தையும் மறுகையில் வேட்டியையும் பிடித்துக்கொண்டு அவனால் இயங்க முடியவில்லை. அவன் அஞ்சலையை அழைத்தான். அவள் தயங்கினாள். ஆவத்துக்குப் பாவமில்லெ. ச்சும்மா வா அஞ்சல' என்றான். அவள் மெல்ல பூனையைப் போல உள்ளே பாதம் நுழைத்தாள்.

விசுவத்திற்கு நிதானமில்லாமலில்லை. அரை மயக்கத்தில் நபப்பதை ஊகிக்க முடிகிறது. இருந்தும் தூங்குவது போல நடித்தார். "அத வெலக்கிப் பிடிங்க" என்றாள் அஞ்சலை. கந்தப்பன் புட்டச் சதைகளை விலக்கிப் பிடித்துக் கொண்டான். அவள் கிண்ணத்திலிருந்த மருந்தை அள்ளி புட்டச் சதைகளின் இடுக்கில் அப்பினாள். "ஷ்ஷ்ஷ். சென்று நெளிந்து விரைப்பானார் விசுவம். விசுவலிங்கத்திற்கு அவர் அம்மாவின் நினைவுகள் வந்தன. கண்கள் தாரையாய் வழிந்து தரையைக் குளிப்பாட்டின. அவர்களுக்குத் தெரியாமல் சமாளித்தார். சற்று நேரத்தில் இம்சித்த வேதனை அடங்கி சிலுசிலுவென உடல் மேல் எதுவோ ஏறிற்று. அந்தச் சில்லிப்பில் வலி மரத்துப் போய்க் கொண்டிருப்பதை அவரால் உணர முடிந்தது. "தூங்கட்டும் வா சாயிந்திரம் வெருவோம்" என்று மனைவியை அழைத்துக் கொண்டு போய்விட்டான் கந்தப்பன்.

...

மறுநாள் காலையில் சற்று ஒருக்களித்தபடி எழுந்து உட்கார்ந்திருந்தார் விசுவம். நல்ல உறக்கத்தில் முகவாட்டம் குறைந்திருந்ததைக் கண்டான் கந்தப்பன். அவனுக்கு இப்போது கொஞ்சம் நிம்மதியாய் இருந்தது. விசுவத்திற்கு இந்தக் கை வைத்தியம் உடனடிப் பலனைத் தந்தது. கட்டிய மனைவி கூடச் செய்யத் தயங்குகிற காலமிது. அஞ் சலை தாயாய் மாறிச் செய்த செயலால் ரொம்பவும் நெகிழ்ந்து போயிருந்தார் விசுவம். அன்றிலிருந்து அஞ்சலையை அவர் பெயர் சொல்லி அழைப்பதில்லை. 'அஞ்சலையுடன் அம்மாவைச் சேர்த்து அஞ்சலையம்மாவாகி பிறகு அஞ்சம்மாவாகிவிட்டது. அதன் பிறகு இன்றுவரை அஞ்சம்மாதான். அவளும் கந்தனும் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் அவர் அப்படி அழைப்பதை கடைசிவரை மாற்றிக் கொள்ளவேயில்லை.

அவளின் கை வைத்தியம் தான் பெரும் வாதையிலிருந்து முதலில் விடுபடச் செய்தது. அஞ்சலையிடம் இத்தனை அற்புத மருந்து இருக்கிறதா? தெரியாமல் போய் விட்டதே என்று நினைத்துக் கொண்டார். வந்ததும் வராததுமாக விசுவம், கந்தப்பனிடமும்

அஞ்சலையிடமும் கேட்டே விட்டார். அஞ்சலை தான் பதில் சொன்னாள்.

"அது வொன்னுமில்லிங்கெ. அல்லிக் கொளத்து நத்தை"

நத்தையா?" என்ற விசுவம் ஆச்சர்யத்தின் உச்சியில் உட்கார்ந்திருந்தார்.

"ஆமா அதுக்குத்தெங் அப்டியொரு மவுசு"

"தெரியாமப் போச்சே..அத நிய்யி என்ன செஞ்ச"

"ஓட்டை நீக்கிப்புட்டு வழுவழுப்பு போவ நல்லா சீந்திக் கழுவி, ஆட்டு கல்லுல போட்டு அடை மாவு பக்குவத்துக்கு நல்லா இடிச்சி, அப்படியே கொண்டு வந்து கெட்டினதுதாங்''

"வயக் காட்டுல கெடக்குமே.அதுக்கா இப்படியொரு மவுசு?''

"ஆமாங்''

"தண்ணி கண்ட எடத்துல கெடக்கும். அப்டித்தானேங்''

"அப்டியில்லிங். நல்ல தண்ணியிலதெங் கெடக்கும்"

"அதிசயமா இருக்கே?"

"தண்ணி கெண்ட இடத்துலங்கறியளே. சாக்கடையில பாத்திருக்கியளா? அதெல்லாம் அவ்வளவு சுத்தம்.சத்துஇருக்கற மண்ணுல தான் சகவாசம் வச்சிக்கிடும். அந்தச் சத்தைத் தின்னுட்டுத்தான் இப்டிக் கொழுத்துக் கெடக்குதுங்க??"இதத்தெங் கொக்குமடையான், நாரை, வக்கா அத்தனியும் திங்கிதுங்க அதுக்கெல்லாம் எங்கியாவது இந்த மாரி பிரச்சன வந்திருக்கா பாருங்க? மனுச மக்களுக்குத்தெங் எல்லா எளவும் வந்து தொலையது. அதுவும் ஒங்க சனங்களுக்கு ரொம்ப அதிகம்".

"அதென்ன அல்லிக் கொளத்து நத்தை?

*அல்லிக்கொளத்து நத்தைக்குத் தாங் அவ்வளவு குளிர்ச்சி. அந்தத் தண்ணிக்கும் அவ்வளவு குளிர்ச்சி நல்ல வெயில்ல அல்லிக் கொளத்துல குளிச்சிப் பாருங்க ஆயுசுக்கும் மறக்க மாட்டியோ. ஒடம்புல இருக்கற சூடெல்லாம் நிமிசத்துல பறந்து போயிடும். மண்ட கிறுக்கு பிடிச்சவங்கள அல்லிக்கொளத்துல தினமும் குளிப்பாட்டினாலே பாதி சரியாகிடும்பாங்க, நீங்களே கொஞ்ச நா தெனமும் காலயிலே அள்ளிக் கொளத்துல குளிச்சா நல்லது. ஆனா என்ன செய்யிறது? தீட்டு ஒட்டிக்கிடுமே?

விசுவம் அமைதியாக இருந்தார். அவரால் பதில் சொல்ல முடியவில்லை.

"எங்க தாத்தாவுக்கு உங்கள மாரித்தெங் அவ்வளவு தொந்தரவு. குப்புற படுத்த மேனிக்க கெடப்பாருங். ஆத்தா கை நறைய நத்தைய அரச்சி கோவணத்துல பின்பக்கமா வெச்சிக் கெட்டுறத பாத்திருக்கேன். காலயில மனுசன் ராசா மாதிரி இடுப்ப ஆட்டிக்கிட்டு நடந்து போவாருங்"

மறுநாள் அதிகாலையில் ஊர் விழிப்பதற்குள். அல்லிக்குளத்தில் போய் இறங்கினார் விசுவலிங்கம். குளிர் தாங்க முடியவில்லை. இருந்தும் அவ்வளவு சுகமாய் இருந்தது. உடலின் உஷ்ணம் மெல்ல நீரில் கரைவது போலிருந்தது. குளிக்க குளிக்க கண்கள் அந்தக் குளிர்ச்சியை உணர்ந்தன. குளிரில், துருத்திக் கொண்டிருந்த மூலச்சதை சுருங்கி உள் இழுத்துக் கொண்டதைப் போலிருந்தது ஊரில் யாருக்கும் தெரியாமலேயே இதைத் தொடர்ந்து கொண்டிருந்தார் விசுவம் அதில் நல்ல பலனும் கிடைத்துக் கொண்டிருந்தது நாளடைவில் இது தெரிந்து எவன் என்ன சொன்னாலும் அல்லிக்குளத்தில் குளிப்பதை விடப்போவதில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தார்.

.....

விசுவலிங்கமும் ஆத்மநாதப்பிள்ளையும் கீழத்தெருவை நோக்கி நடக்கத் தொடங்கியிருந்தனர். சிநேகிதர்கள் இருவரும் நடந்து செல்வதை அவர் தெரு ஆட்கள் பார்த்து "சம்மந்திபுரம் வரிசை ஊமைப் புன்னகை புரிந்தனர். கிண்டலும் கேலியும் சூடு பறந்தது. சம்மந்திபுரம் வரிசை போவுது பாருங்கய்யா" என்று அங்கிருந்த தேநீர்க் கடையில் நடுத்தர வயதுடைய ஆள் ஒருவன்

சொன்னான். அனைவரும் கொல்லெனச் சிரித்தனர்.

எதுவும் அவர்கள் காதில் விழவில்லை. அவர்களின் நடை வேகமெடுத்திருந்தது. அணிந்திருந்த வெள்ளை வேட்டி, சட்டையைப் பார்த்துச் சூரியனுக்குக் கண்கள் கூசின. கஞ்சி போட்ட மொடமொடப்பில் கைப்பகுதிகள் கத்தியைப் போல நீட்டிக் கொண்டிருந்தன. அதில் கிரணங்கள் அறுபட்டுத் துடித்துக் கீழே விழுந்து கொண்டிருந்தன ஆத்மநாதம் பிள்ளை சாதாரண மாடல் சட்டை தான் அணிவார். விசுவலிங்கம் மட்டும் அண்மைக் காலமாக ஜிப்பா சட்டைப் போடத் தொடங்கியிருந்தார். அரைக்கை ஜிப்பா சட்டை அவருக்கு எடுப்பாகவே இருந்தது.

ஆளிடம் சொல்லி முன்னமே இரண்டு மாலைகள் கட்டி வரச் செய்திருந்தார் விசுவலிங்கம். ஒன்று மஞ்சள் செவ்வந்தி மற்றொன்று முழுவதும் ரோஜா மலர்கள். அதில் ஆளுக்கொரு மாலையை எடுத்துக் கொண்டனர். விசுவலிங்கத்தின் ரோஜா மாலையை அவரால் தூக்கிப் பிடிக்க முடியவில்லை அவ்வளவு உயரம்.எப்படியும் ஐந்தடியாவது இருக்கும். ரோஜா அவர் சென்ற பாதையில் வாசனையைத் தூவிக் கொண்டே சென்றது.

வீட்டை நெருங்கியதும் இரண்டு வீடுகளுக்கு முன்பே கையில் ஒரு குழந்தையைப் போலக் கிடைமட்டத்தில் தாங்கி நடந்து வந்து கொண்டிருந்தார் விசுவம். அருகில் வரும் ஆத்மநாதபிள்ளைக்கே வியப்பாய் இருந்தது. விசுவம், “தனக்கு வயல் வரப்பில் வேலை செய்யும் ஆளென்று நினைக்காமல் இவ்வளவு உயர்வாய் செய்கிறாரே” என்று ஆத்மநாதம் பிள்ளை மனத்தில் விசுவம் மேலும் உயர்ந்து கொண்டிருந்தார்.

அந்தத் தெருவில் இந்தளவு உயர மாலை மரியாதை யாருக்கும் கிடைத்திருக்காது. எந்தச் சடலத்திற்கும் கிடைக்காத மரியாதை அஞ்சலைக்குக் கிடைக்கப் போகிறது. இந்நேரம் அஞ்சம்மாள் இருந்திருந்தால், ‘ஏ யம்மாடி எவ்வளோ பெரிய மாலடி”யென்று குழந்தையாய் மாறி ஆச்சர்யத்தில் வாயில் கை வைத்து அசந்து பார்த்திருப்பாள்.

நினைத்ததும் கண்கள் குளமாகின விசுவலிங்கத்திற்கு, அவர் அருகில் வந்ததும் எல்லோரும் எழுந்து நின்றார்கள். கந்தப்பன் ஓடி வந்து காலைக் கட்டிக் கொண்டான். அவனுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்று தெரியாமல் தவித்தார் விசுவலிங்கம். கையில் மாலையை வைத்துக் கொண்டு கண்கள் மாலையாக நின்றிருந்தார். பக்கத்தில் இருந்தவர்கள் யாரோ கந்தப்பனை சமாதானப்படுத்தி அங்கிருந்து நகர்த்தினார்கள்.

விசுவலிங்கத்தைப் பார்த்ததும் கூடியிருந்த பெண்களின் அழுகுரல்கள் உச்சத்தில் வெடித்தன. பலரின் அழுகையும் சேர்ந்து ஒரு ராகமிழுப்பதைப் போலிருந்தது. ஒப்பாரி உயிரை வதைத்தது. மாலையைப் போட்டு விட்டு அஞ்சலையின் முகத்தைப் பார்த்தார். அதில் அவரின் தாயின் முகம் தெரிந்தது. தான் நோவில் படுத்திருக்கும் போது அவள் கூச்சமில்லாமல் தன்னைப் பேணியதை நினைத்தவர் வெடித்து விட்டார். ஒரு மகனைப் போல அவர் சற்று நேரம் துண்டை எடுத்து வாயைப் பொத்தியபடிக் கேவினார். ஆத்மநாதம்பிள்ளை கையோடு அணைத்து அழைத்து வந்து நாற்காலியில் அமர வைத்தார்.

விசுவமும் ஆத்மமும் அமர்ந்ததும் அருகில் உடகார்ந்திருந்த அனைவரும் எழுந்து தூரமாய்ப் போனார்கள். எங்கிருந்தோ சுந்தனின் அழுகுரல் திரும்பவும் கேட்டது.

“ஒரு குழந்தை குட்டி கூட இல்லையே விசுவம்“ என்றார் ஆத்மநாதம்பிள்ளை

“பெக்கலையே ஒழிய அத்தனை குழந்தை அஞ்சலைக்கு” என்றார் விசுவம்.

“கௌம்புவமா?” என்றார் ஆத்மம்.

“எதுவும் வேலையிருக்கா?”

“ஒன்னுமில்லெ...” இழுத்தார் ஆத்மம்.

“எடுத்திட்டுத் தாங் போவணும்யா. அவசரப்படாதே”

அத்தோடு நிறுத்திக் கொண்டார் ஆத்மநாதம்பிள்ளை.

அவருக்கு விசுவத்தின் செயல் ஆச்சர்யமாக இருந்தது. ஐந்து நிமிடத்திற்கு மேல் சாதிக்காரன் வீடுகளில் கூட உட்கார மாட்டார். இன்று எடுத்திட்டுப் போகணுங்கறாரே என்று நினைத்துக் கொண்டார்.

அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தைப் போல இருந்தது பாடை, அது என்ன அழகு? அஞ்சலையின் மனத்தை விடவா? வேலைகள் தொடங்கியிருந்தன. அவளைக் குளிப்பாட்ட அவளின் ரத்த உறவுகள் தயாராகினர். அல்லிக்குளத்தில் போய் விழுந்து முழுகி ஆளுக்கொரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து வர வேண்டும். தண்ணீர் எடுத்து வரும் போது ஒரு துணியைத் தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு வருவார்கள். தண்ணீரை வானம் பார்க்க எடுத்து வரக் கூடாது என்பது ஐதீகம்.

அஞ்சலையின் கணவன் கந்தப்பன், அவளின் அக்காள், தங்கைகள், அவர்களின் குழந்தைகள், பங்காளி உறவு முறைகள் என அத்தனை பேரும் குளத்திற்கு நீரெடுக்கக் கிளம்பினார்கள். விசுவமும் ஆத்மநாதம்பிள்ளையும் அங்கு தனியாய் அமர்ந்திருக்க பிடிக்காமல் அவர்களுடன் பின்னாலேயெ அல்லிக்குளம் நோக்கிச் சென்றார்கள். அத்தனை பேரின் முகத்திலும் கண்ணீர் தாரையாய் வழிந்து கொண்டிருந்தது. எதையெதையோ சொல்லி புலம்பியபடியே சென்றனர். குளத்தில் மூழ்கி கொண்டு வந்திருந்த பாத்திரத்தில் தண்ணீரை மொண்டு கொண்டனர். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே நின்றனர் விசுவலிங்கமும் ஆத்மநாதம்பிள்ளையும்.

சடங்கைச் செய்யும் வண்ணார் கூக்குரலிட்டார். யாரும் விட்டுப் போயிடக்கூடாது. யாராவது விடுபட்டுப் போயிருந்தா தண்ணியில மூழ்கிக்கங்க என்றார். அவர்கள் அஞ் சலையின் வீட்டை நோக்கி நடந்தார்கள். விசுவலிங்கமும் ஆத்மநாதம்பிள்ளையும் அங்கிருந்த குளத்துக் கட்டையில் அமர்ந்து கொண்டார்கள். காற்று சிலுசிலுத்தது.

“மவராசி..அவளப் போல மனசுள்ளவ பொறக்கிறது அபூர்வம்ய்யா. கந்தப்பன் கொடுத்து வெச்சவன். அவன ஒரு புள்ளய போலவே பார்த்துக்கிட்டா. இனிமே என்ன செய்யப் போறானோ? நா பொஞ்சாதியில்லாம ஒண்டியா கெடக்கற மாதிரிதெங் அவனுக்கும் இனிமே. எத்தனை பேரு இருந்தாலும் பொண்டாட்டிக்கு மாரி ஆவுமா?”

பாடை கிளம்பி விட்டதை அறிவித்துக் கொண்டிருந்தது சரவெடிகள். அஞ்சலை பயணமாகி குளத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள். குளத்தைத் தாண்டி அரை கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டும். ஆற்றங்கரையில் ஒரு பக்கத்தில் அவர்களுக்கான மயானம் இருந்தது.

விசுவலிங்கம், “நாங் குளிக்கப் போறென்” என்றார்.

“இங்கியா?” என்றார் முகத்தைச் சுழித்தபடி ஆத்மநாதம்பிள்ளை. பிறகு,

ஓமக்கென்னய்யா கிறுக்கா புடிச்சிருக்கு? ஊருக்காரன் என்ன சொல்லுவான்னு நெனச்சிப் பாத்தியளா?”

“நாம் பல நாளா இங்க தாங் குளிச்சிக்கிட்டிருக்கேன்ங். யாருக்கும் தெரியாது”

“ஓகோ...”

“இன்னிக்கு வெளிப்படையா குளிக்கப் போறேன். எவன் என்ன சொன்னாலும் கெவலயில்ல. அது தாங் எந்தாய்க்கு நாஞ் செய்யிற அஞ்சலி”

சட்டெனக் குளத்தில் மூழ்கி எழுந்தார்..

பாடை குளத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தது. விசுவலிங்கம் குளிப்பதை அஞ்சலை வெறித்து கொண்டே பாடையில் படுத்திருந்தாள். பின் சென்றவர்கள் விசுவலிங்கத்தின் செய்கையை ஆச்சர்யத்தோடு பார்த்துக் கொண்டே சென்றார்கள். அது பெரும் விவாதப் பொருளாகியிருந்தது.

●

கட்டுரை

# அப்பா சித்தப்பாவின் அரசியல் நினைவுகள்

## அம்ரா பாண்டியன்

என் அப்பா சுந்தரம் அவர்கள் அந்தக் காலந் தொட்டு திராவிடர் கழகக்காரர்.

பெரியாரை ஒட்டியே அவரது அரசியல் நிலைப்பாடுகள் அமைந்திருந்தன.

பெரியார் காமராசரை பச்சைத் தமிழன் எனச்சொல்லி ஆதரித்தபோது, தீவிரமாகக் காங்கிரசு கட்சியை ஆதரித்தார். பின் தி.மு.க.ஆட்சி அமைத்தபோது அண்ணா திருச்சியில் பெரியாரைச் சந்தித்து, ஆசி பெற்றதும் பெரியார் நிலைப் பாட்டை மாற்றிக் கொண்டார். தி.மு.க.வை ஆதரித்தார்.ஆனால் என் அப்பா போன்ற தி.க. காரர்கள் உடனே தங்களது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு விடவில்லை.



காமராசரைத் தொடர்ந்து கொஞ்ச காலம் ஆதரித்தே வந்தார்கள். காங்கிரஸ், பிறகு ஸ்தாபன காங்கிரஸ் என காமராசர் போன பாதையையே தொடர்ந்தார்கள்.

பிறகே தி.மு.க.ஆதரவு நிலைப்பாட்டுக்கு வந்தார்கள்.என் அப்பா இறக்கும் வரை அதன் பிறகு தி.மு.க.ஆதரவு நிலைப்பாட்டிலேயே இருந்தார்கள்.

என் சித்தப்பாக்களில் இருவர் ஆரம்பம் முதலே தீவிர தி.மு.க.காரர்கள் எம்.எஸ்.பதி என்று அழைக்கப்படும் லெட்சுமிபதி சித்தப்பா (இப்போது இல்லை) சென்னையில் ஆகச்சிறந்த ஓவியர்(பேனர் ஆர்டிஸ்ட்).பாசமலர் படம் வந்த போது மோகன் ஆர்ட்சில் வேலை பார்த்து வந்தார்.நடிகர் சிவகுமார் அங்கு அவரோடு பணியாற்றி உடன் பழகியதைத் தனது ராஜபாட்டை நூலில் பதிவு செய்துள்ளார். அதன் பிறகு நீண்ட காலம் சாமி ஆர்ட்சில் வேலை பார்த்தார்.

இன்னொருவர் சிவ. இராதா.சமீபத்தில் தான் காலமானார். எங்கள் வார்டு தி.மு.க. நகர்மன்ற உறுப்பினராகப் பணி புரிந்தவர்.அரித்திராநதி தெப்பக்குளம் பகுதியில் வாடகை சைக்கிள் கடை வைத்திருந்தார்.

கடைக்கு முரசொலி தினசரி வரும். சிறுவனாக இருந்த என்னை கடைக்கு அவ்வப்போது அழைத்துச் செல்வார்.

கட்சி பற்றிய முதல் நிகழ்வாக என் மனதில் இருப்பது , தி.மு.க.கொடி பிடித்து சிறுவனாக இருந்த போது ஒரு தேர்தலில் ஊர்வலம் போனதுதான். அதற்குக் காரணம் ராதா சித்தப்பா தான்.

“போடுங்கம்மா வோட்டு

சூரியனைப் பார்த்து” என்று கணீர்க் குரலில் கோஷம் வேறு. இந்த ஊர்வலத் தளபதி நான்தான். என்னைப் பின் தொடர்ந்து மேலும் சில சிறுவர்கள் கையில் திமுக கொடி மற்றும் அன்றைய ஆளும் கட்சி காங்கிரசை எதிர்த்து எழுதப்பட்ட பதாகைகளுடன்... எந்தத் தேர்தல் என ஞாபகம் இல்லை.

அடுத்து காங்கிரஸ் ஆட்சியின்போது விலைவாசி உயர்வைக் கண்டித்து சிறைக்குச் சென்று விடுதலையாகி வருவோரை வரவேற்க தி.மு.க.வினர் செய்த ஏற்பாடுகள் நினைவில் இருக்கிறது... திருச்சி சிறையில் இருந்து விடுதலையாகி புகைவண்டி மூலம் ஹரித்ரா நதி ஸ்டேஷனில் இறங்கி மேலப் பாலம் வழியாக அப்படி கைதானவர்கள் ஊருக்குள் நுழைந்தார்கள். தெப்பக்குளம் பகுதியில் என் சித்தப்பா விலைவாசியின் குறியீடாக காய்கறிகள் கட்டித் தோரணம் கட்டி அவர்களை வரவேற்றார் .வேடிக்கையாக இருந்தது பார்க்க.

சித்தப்பா கடைக்கு முரசொலியோடு மன்றம், போர்வாள்,முத்தாரம் இப்படி பல தி.மு.க. ஏடுகளையும் கொண்டு வருவார் சாந்தி நாதன். இறக்கும் வரையில் அவரே முரசொலி ஏஜன்டாக இருந்தார். அதன் பின் முரசொலி சிவா. இருவருமே இல்லை இப்போது.

சித்தப்பா முரசொலியோடு வேறு சில இதழ்களையும் வாங்குவார்.அவற்றைப் படிக்க என்றே ஒரு கூட்டம் கூடும். கடையே ஜே ஜே என்று இருக்கும். ஒருவர் சப்தம் போட்டு கலைஞரின் ‘உடன் பிறப்பே' கடிதத்தைப் படிக்க, எல்லோரும் கூர்ந்து கவனிப்பார்கள். நானும் தெரிந்தது போல காட்டிக்கொண்டு தலையாட்டி கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பேன்.

ஒருமுறை முன்னாள் அமைச்சர் கோசி மணி அவர்களை வைத்து தெப்பக்குளம் பகுதியில் சித்தப்பா கூட்டம் ஒன்றை நடத்தினார். நல்ல கூட்டம். அதை விடச் சிறப்பு கோ.சி.மணி அவர்கள் சாதாரண பேச்சாளராகதான் இருந்து வந்தார். ஆனாலும் அசாதாரணமான பேச்சு.




இப்பேச்சில் கவரப்பட்ட நான் பிற்பாடு கோ.சி.மணி பேச்சு என்றாலே எங்கு நடந்தாலும் சென்று விடுவேன். நெருக்கடி நிலை காலத்தில் ஒருமுறை கோசிமணி கூட்டம் புதுப்பாலம் பகுதியில் ஏற்பாடாகி இருந்தது.

விடவில்லை நான்.. முன் கூட்டியே சென்று கடைசிவரை இருந்து கேட்டுவிட்டு வந்தேன். அதே காலகட்டத்தில் நெல்லை புகாரி பேச்சு. மன்னை நகரில்...புள்ளி விவரங்களை அள்ளி வீசிய உரை. மிகவும் கவர்ந்தது. அதைவிட அதிகம் கவர்ந்தது அப்போது அவரது மீசை எனக்கு.

அப்போது தேர்தல் நேரம். தேர்தல் என்றாலே சித்தப்பா சுறுசுறுப்பாக இயங்குவார்.முன் கூட்டியே தெருக்களின் சுவர்களில் எங்கெல்லாம் இடம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் திமுக என்று எழுதி அம்பு குறியீடு இட்டு இடம்பிடித்து வைத்திருப்பார்.

பின்னர் சுவர்களில் உதயசூரியன் சின்னத்தையும் வேட்பாளர் அறிவிக்கப்பட்டவுடன் அவரது பெயரையும் எழுதத் துவங்கி விடுவார். அவருக்கு அடிக்கடி ஜலதோஷம் பிடித்து விடும். பல தேர்தல்கள் பனிக்காலங்களில் நடைபெறுவது உண்டு. அதற்கெல்லாம் அஞ்சுபவரா அவர்? துண்டை எடுத்து முண்டாசு கட்டிக்கொண்டு மூக்கை உறிஞ்சியபடியே வர்ண வாளிகளை, பிரஷ்களை ஏந்தி தெரு முழுக்க வரைந்த படியே வலம் வருவார். நானும் அவரோடுபின் செல்வேன்.

பல இரவுகள் அதில் தூக்கம் இல்லாமலேயே கழியும். ஆனால் சோர்வு என்பதே இருக்காது.

ஆரம்ப காலத்தில் தில்லைக்கண்ணு என்கிற முடித்திருத்துநர் திமுகவின் நகரச் செயலாளராக இருந்தார். அந்தக் காலங்களில் எல்லாம் அடிக்கடி ஆளும் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் போராட்டங்கள் நடைபெறுவது உண்டு. அதற்கான துண்டறிக்கைகளை எடுத்துக்கொண்டு அவர் நகரையே சுற்றி வருவார்'' எங்கள் சித்தப்பா கடைக்கும் வருவார், தனி ஆளாக மிதிவண்டியில், “ராதா! இந்த முறை நிறைய பேர் கலந்து கொள்ள வேண்டும். உங்கள் பகுதியிலிருந்து அதிகம் பேரை எதிர்பார்க்கிறேன்' என்று சொல்லி துண்டறிக்கைகளைக் கொடுத்து, ஒரு தேநீரையும் அருந்திவிட்டுச் செல்வார்.

அப்போதே சித்தப்பா அங்கிருக்கிற தன்னுடைய கட்சி சகாக்களை தேடிப் புறப்பட்டு விடுவார். சைக்கிள் கடை கதி?

சைக்கிள் எடுப்போர் அவர்களாகவே நோட்டுகளில் தங்கள் பெயர்களை பதிவு செய்துவிட்டு எடுத்துச் சென்றிருப்பார்கள். சைக்கிள் காணாமல் போனதும் கூட உண்டு. அதற்காக எல்லாம் கவலைப்பட மாட்டார் சித்தப்பா. அவருக்கு நகரச் செயலாளர் சொன்னது வேதவாக்காக இருக்கும் அப்போது, வாக்குக் கொடுத்தபடியே ஒரு பெரிய கூட்டத்தை கூட்டிக் கொண்டு போராட்டத்தில் கலந்துகொள்ள தோளில் ஏந்திய கொடிகளோடு செல்வார் சித்தப்பா. அந்த நேரங்களில்

கடையை என் தாத்தா கவனித்துக் கொள்வார்.

அப்போதெல்லாம் அடிக்கடி திமுக மாநாடு நடைபெறும். எனக்குத் தெரிந்து தஞ்சை மற்றும் கும்பகோணம், தாராசுரம் முதலிய இடங்களுக்கு தனியாகவே அந்த இளம் வயதில் சென்று வந்திருக்கிறேன். மாநாட்டில் கலந்து கொள்வதும் அந்தக் கூட்டத்தில் ஒருவனாக தன்னை எண்ணி பெருமிதம் கொள்வதும் எனக்கு உவப்பளிக்கக் கூடிய விஷயமாக அப்போது இருந்தது..

பொங்கல் பண்டிகை அன்று முன்பெல்லாம் வானொலியில் கலைஞர் தலைமையில் கவியரங்கம் நடக்கும். இரு பொருள் சிலேடைப் பேச்சுக் கேட்கவென்றே முன்கூட்டியே காத்துக் கிடப்பேன், ஒலிஅளவை கூட்டி வைத்துவிட்டு. அக்கம் பக்கத்து வீடுகளுக்கும் அவர் குரல் போய்ச்சேர வேண்டும் என்கிற தவிப்பு எனக்கு.

அப்போதெல்லாம் அப்பாவுக்கு உதவியாக நான் கடைக்குச் சென்று வந்து கொண்டிருந்தேன். பொங்கல் மதியம்வரை கடை உண்டு. கலைஞர் கவியரங்கம் முடிந்தபிறகே நான் கடைக்குச் செல்வேன். அப்பாவும் ஏன் தாமதம் என்று கேட்க மாட்டார். அவருக்கு அன்று பொங்கல் கவியரங்கம் இருக்கும் என்று தெரியும்.

கலைஞர் பேச்சை விட, ஒருவரையும் மறவாது விளித்துப் பெயர் கூறி முடிவில் உடன்பிறப்புகளே என்று கூறி கைத்தட்டல்களை அள்ளும் நினைவுத் திறனை வியந்து மறந்து நின்ற காலங்கள் பல உண்டு. கலைஞரின் ஆகச்சிறந்த பேச்சு இலக்கிய சிந்தனை என்ற அமைப்பு மூலம் மன்னார்குடியில் வெண்ணெய்த்தாழி மண்டபம் எதிரில் நடந்தது என்பது என் அனுமானம். கூட்டம் ஆரம்பிக்கும் முன்னதாகவே சென்று இறுதிவரை கேட்டுவிட்டுப் பிறகே கடைக்குச் சென்றேன். அந்தப் பேறு பெற்றதற்காக இன்றுவரை உள்ளத்துக்குள் அகமகிழ்பவன் நான்.

அப்பாவுக்கும் மறைந்த முன்னாள் அமைச்சர் மன்னைக்கும் பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு நெருங்கிய நட்பு சிறுவயது முதலே உண்டு. நான் ஒரு காலத்தில் தினகரன் நாளிதழை ஏஜென்சி எடுத்து மன்னார்குடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கு விநியோகம் செய்ய விரும்பி அப்பாவிடம் சொன்னேன்.

கடுமையான போட்டி நிலவி வந்த நிலையில், அவர் என்னை உடனே மன்னையிடம் அழைத்துச் சென்றார். சவளக்காரன் அருகில் வயலில் இருந்தார் மன்னை.

“என்ன சுந்தரம் இதுக்கா இந்த வெயிலில் இங்கே வந்தே”என்று கடிந்து கொண்டு,கேபி கந்தசாமிக்குக் கடிதம் தந்து உதவி செய்தார்.

மன்னார்குடியில் 40 பிரதிகள் மட்டுமே விற்பனை ஆன தினகரன் நாளிதழை 400 வரையில் விற்பனை செய்தேன்.

ஒருமுறை அப்பா, மன்னையும் கலைஞரும் ஒருமுறை உள்ளிக்கோட்டை கூட்டம் ஒன்றுக்கு சென்ற கதையை என்னிடம் பகிர்ந்து கொண்டார்கள். அப்போது எல்லாம் இந்த அளவு பேருந்து வசதிகள் இல்லையாம்.

கூட்ட நேரம் நெருங்கிய நிலையில் கலைஞரும் மன்னையும் மன்னார்குடியில் கழகத் தோழர்களோடு உரையாடிக் கொண்டு இருந்தார்கள். பேசிக் கொண்டே இருந்ததில் நேரம் போனது தெரியவில்லை. பேருந்தையும் தவறவிட்டு விட்டார்கள். கடைசி நேரத்தில் கூட்டத்தில் கலந்து கொள்ள என்ன செய்வது என்று எவருக்கும் வழி புரியவில்லை.

அப்பாவை அழைத்து மன்னை காதில் ஏதோ சொல்லி இருக்கிறார்.பழைய பேருந்து நிலையத்தில் தஸ்தகிர்(தி.க.) தையல்கடை (இப்போது அன்வர் பரோட்டா கடை) யில் இதெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது.

அப்பா ஒரு தோழரை அழைத்து அருகிலிருந்த சைக்கிள் வாடகை நிலையம் சென்று இரு கேரியர் வைத்த சைக்கிள்களை எடுத்து வந்தார்.

உள்ளிக்கோட்டை கூட்டத்திற்கு கலைஞரும் மன்னையும் அந்த சைக்கிள்களில் கொண்டு சேர்க்கப் பட்டார்களாம்.

இதைச் சொல்கையில் அப்பா மிகவும் நெகிழ்ச்சி உற்றார். “அப்படி அழைத்துப்

போனவர்களில் நானும் ஒருவன்டா" என்பதில் அப்பா முகத்தில் பெருமிதம் ஒளி வீசியது.

அப்போது கடை வீதியில் சென்றாலே பல கடைகளில் நாகூர் அனீபா பாடல்கள் கணீரென்று ஒலிக்கும். "அண்ணா அழைக்கிறார்","கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே"...இப்படி...

நாகூர் அனிபா பாட்டு என்றாலே ஒரு கூட்டம் கூடிவிடும் அப்போது. நான் சிறுவனாக இருந்தபோது எங்கள் தெரு எங்கள் வீட்டு எதிர்ப்புறம் இருந்த பாட்டு டீச்சர் வீட்டில் அவரது மகளுக்கு செய்த திருமணத்திற்கு ஏற்பாடு செய்த கச்சேரியில் அன்று பாடியவர் யார் தெரியுமா? நாகூர் அனிபா! இந்து திருமண தம்பதிகளின் வரவேற்பில் அன்றே இஸ்லாமியர் ஆகிய நாகூர் அனிபா பாடியதன் மூலம் மத நல்லிணக்கம் எந்த அளவு அன்றே இருந்தது என்பதை நீங்கள் உணரலாம்.

பொங்கல் வந்தாலே அன்று மன்னை நகரமே கோலகலமாகி விடும். அன்று மாலை நன்னிலம் நடராஜன் கூட்டம் கண்டிப்பாக இருக்கும். அதுவும் கூட்டம் வெண்ணெய்த்தாழி மண்டபம் எதிரில் நடைபெறும்.

சிரிப்பு வெள்ளத்தில் கூட்டத்தை மிதக்க விடுவார் நன்னிலம்.அந்தக்காலத்தில் பானோசோனிக் டேப்ரிக்கார்டர் கைக்குக் கை பெரும்பாலும் இருக்கும். நானும் என் அப்பா வாங்கிக் கொடுத்த ஒரு பானாசோனிக் செட்டை தூக்கிக்கொண்டு கூட்டத்திற்குக் கிளம்பிவிடுவேன். என்னைப்போலவே அங்கே வந்திருக்கும் பெரும்பாலோனோர் டேப் ரிகார்டரில் நடராஜன் பேச்சை பதிவு செய்து கொண்டிருப்பார்கள்.

அவரவர் ஊர் சேரும் வரை நன்னிலம் குரல் எங்கும் ஒலித்துக் கொண்டே இருக்கும். அதுவும் உச்சபட்ச ஸ்தாயியில்.

மன்னை நகரமே நன்னிலம் நடராஜன் குரலில் அலறிக் கொண்டிருக்கும் அன்று.

என் கையிலும் கருப்பு பானாசோனிக் நன்னிலம் குரலை கசிய விட்டபடியே இருக்கும். வீடு வந்து சேர்ந்ததும் என் அப்பா வாசலில் நின்றபடியே குரல் கொடுப்பார்: "அதை போடு பாண்டி ஆரம்பத்திலிருந்து" ●

# விருதாளர்களைப் பாராட்டுகிறது கண்ணாமூச்சி!




திருவாரூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.R.தியாகராஜன் அவர்களுடன் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்ற விருதாளர்களைப் பாராட்டுகிறது கண்ணாமூச்சி! கல்விப்பணியில் மேலும் பல சாதனைகள் படைத்திட அன்பு வாழ்த்துகள்

# என்னை மறந்ததேன்...

கோ. பூமாரி



தர்மாஸ்பத்திரியில் மாலை ஏழரை மணிக்கும் மக்கள் கூட்டம் இருந்துகொண்டுதான் இருந்தது. ஆஸ்பத்திரி வந்துவிட்டதா? என்று கேட்டாள். ஆட்டோவுக்குள் சாய்ந்து படுத்துக் கிடந்த பெரியம்மா. ஆம் என்று சொல்லிவிட்டு இறங்கத் தயார் ஆனேன் நான். ஆஸ்பத்திரியின் உள்வாசல் வரை ஆட்டோ வந்து நின்றது. பெரியம்மாவைக் கைத்தாங்கலாகக் கீழே இறக்கினேன். ஒருபுறம் நானும் மறுபுறம் அக்காளுமாகப் பெரியம்மாவைப் பிடித்துக் கொண்டோம். உடன்வந்த மச்சானும் கீழே இறங்க ஆட்டோவுக்குப் பணம் கொடுத்து அனுப்பி விட்டோம். தானாகவே நடந்து வருவதாகச் சொன்னாள் பெரியம்மா. எனக்கு மிகுந்த ஆச்சர்யமாக இருந்தது. ஒருமணி நேரத்துக்கு முன்னாலதான் வாயால வயித்தால போச்சு. கேது கூதுன்னு எளச்சா... இப்ப தெம்பா நடந்து வாராளே. இளைப்பு அதிகமாகி விட்டது. உடனடியா செயற்கை சுவாசம் குடுக்கணும். தர்மாஸ்பத்திரியில் சேத்துருங்கன்னு தனியார் ஆஸ்பத்திரியில் சொல்லிட்டாங்க. இந்த நிலைமையிலும் பெரியம்மாவால எப்படித் தனியாக நடக்க முடியுதுன்னு யோசித்தபடியே நடந்தேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னால தனியார் ஆஸ்பத்திரியில போட்ட ஊசி ஆளுக்குத் தெளுச்சியக் குடுத்துருச்சுன்னு அக்காள் சொல்லிக் கொண்டாள். மருத்துவரின் அறைக்கு அருகில் சென்றோம். வராந்தாவில் சுவரில் சாய்ந்தபடி பெரியம்மாவை உட்கார வைத்தோம். மூவரும் அருகில் நின்றோம்.

சீருடை அணிந்த செவிலியர்களும், மருத்துவமனைச் சிப்பந்திகளும் ஓட்டமும் நடையுமாக இருந்தார்கள். யாரிடம் சொல்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை. அந்தா அவங்ககிட்டப் போய்ச் சொல்லுங்க என்றார் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர். மருத்துவரின் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்த நர்ஸிடம் ஓடினேன். சிஸ்டர் என உரக்கக் குரலெடுத்தேன். என்ன வேணும் முகம் திரும்பாமல் சத்தம் மட்டும் என்னை நோக்கி வந்தது. “எங்க... பெரியம்மா...வார்த்தைகள் இழுத்தன. “முதல்ல சீட்டு வாங்கிட்டு வாங்க”என்ற நர்ஸின் குரல் “படக்“ எனச் சாத்தப்பட்ட கதவின் சத்தத்தில் கரைந்து போனது. ‘என்ன சொன்னாங்கன்னு அக்கா ஆவலுடன் கேட்டாள். சீட்டு வாங்கிட்டு வரச் சொல்லுதாங்க’ என்றேன். யாரிடம் கேட்பது என்ற கேள்வி ரேகைகள் மீண்டும் எங்கள் முகத்தில் படர்ந்தது. அருகில் இருந்தவர் எங்களைக் கவனித்துக் கொண்டே இருந்தார். அந்த நர்சு என்ன சொன்னாங்கன்னு கேட்டார். சீட்டு வாங்கிட்டு வரச் சொன்னதைச் சொன்னேன். “முன்னால போங்க.... அங்க கண்ணாடி போட்ட ஒரு ஆம்பளையாளு இருப்பா.... அவருதான் சீட்டு எழுதிக் கொடுப்பாரு’ என்றார் பக்கத்தில் இருந்தவர். உடனடியாக சீட்டு எழுதிக் கொடுக்கும் இடத்தை விசாரித்து ஓடினேன். இரவு வேளையானதால் புறநோயாளிகளுக்கான சீட்டு எழுதிக் கொடுக்கும் இடம் பூட்டிக் கிடந்தது. அங்கும் இங்குமாக சில ஆட்கள் நடந்து கொண்டிருந்தார்கள். எல்லோரும் ஏதோ ஒரு அவசரத்தில் இருப்பது போலவே தெரிந்தது. யாரை நிறுத்தி விசாரிப்பது என யோசித்தேன் : சிலருடைய செவிகளுக்கு

என் கேள்வி எட்டவே இல்லை. இறுதியாக ஒருவரை மறித்து விசாரித்தேன். அவர் அந்த ஆஸ்பத்திரியில வேலை பார்ப்பவர் போலத் தெரிந்தது. அந்த முதல் ரூம்ல போய்க் கேளுங்க என்று சொல்லிவிட்டு அவர் வேகமாக நகர்ந்தார். நான் முதல் ரூமுக்குச் சென்றேன். அங்கு ஒருவரும் இல்லை. சிறிது நேரம் அங்கேயே நின்றிருந்தேன். நர்ஸ் ஒருவர் என்னைக் கடந்து சென்றார். ஓடிப்போய்க் கேட்டேன். அப்படியா... பேசன்ட எங்க என்றார். “டாக்டர் ரூமுக்குப் பக்கத்துல உட்கார வச்சிருக்கோம்... அவங்கதான் சீட்டு வாங்கிட்டு வரச் சொன்னாங்க’’என்றேன். ஒரு நிமிசம் இங்க நில்லுங்க... நான் வந்துடறேன் என்றார் அந்த நர்ஸ்.

அந்த நர்ஸ் திரும்பி வருவதற்குப் பத்து நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. நான் அங்கேயே நின்றிருந்தேன். டாக்டர் ஒரு ஆக்சிடென்ட் கேஸைப் பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார் அந்த நர்ஸ். சிஸ்டர் பெரியம்மாவுக்கு ரொம்பவே உடம்புக்கு முடியல... என்று வார்த்தைகளைப் பவ்யமாக இழுத்தேன் நான். இப்பத்தான ஒங்ககிட்ட சொன்னேன், ரொம்ப எமெர்ஜன்சியா ஒரு ஆக்சிடெண்ட் கேஸை டாக்டர் பாத்துக்கிட்டிருக்காரு... வர்றதுக்கு கொஞ்சம் நேரம் ஆகும்... இங்கேயே வெய்ட் பண்ணுங்க என்று அதட்டலான குரலில் சொல்லிவிட்டுப் போனார் அந்த நர்ஸ். வாய்மூடி ஊமைகளாய் வராந்தாவில் காத்திருந்தோம்.

ஆட்கள் நடமாட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. திடீரென்று ஒரு ஐம்பது பேர் கூட்டமாக ஆஸ்பத்திரியின் முன்னால் வந்து இறங்கினர். அந்தக் கூட்டத்துக்குள் இருந்து பணக்காரரைப் போல் தெரிந்தவரை இருவர் அழைத்துக் கொண்டு வந்தனர். அவரது உடம்பில் ஆங்காங்கே இரத்தக்கீறல்கள் தென்பட்டன. கூட்டம் முண்டியடித்துக் கொண்டு ஆஸ்பத்திரி ஊழியர்களை வழிமறித்தது. அண்ணாச்சிய அடிச்சிருக்காங்க... உடனே அட்மிட் பண்ணுங்க என்று ஆளுக்கு ஆள் சத்தம் போட்டார்கள். இங்க கூட்டம் போடாதீங்க என்றார் அங்கிருந்த நர்ஸ். எவரும் கேட்டதாகத் தெரியவில்லை. சிறிது நேரத்தில் நான்கு பேர் ஆட்டோவில் வந்து இறங்கினர். அவர்களில் இருவருக்கு கடுமையான வெட்டுக் காயங்கள் இருப்பது தெரிந்தது. ஒருவருக்கு தலையிலும் தோள்பட்டையிலும் இரத்தம் உறைந்து கிடந்தது. முதலில் வந்த பெருங்கூட்டம் ஆட்டோவில் வந்து இறங்கியவர்களை முறைத்துப் பார்த்துக் கொண்டே இருந்தது. ஆட்டோவில் வந்த நான்கு பேர்களில் ஒருவர் டாக்டரின் அறையை நோக்கி ஓடினார். அரிவாள் வெட்டு கடுமையாக விழுந்திருக்கு... உடனே பாருங்க என்று நர்ஸிடம் கெஞ்சினார் அந்த ரூம்ல கொண்டு போய் படுக்க வையுங்க என்று சொல்லியபடியே நர்ஸ் விரைந்து சென்றார். பணியில் இருந்த காவலர் கூட்டத்தை வெளியே தள்ளிச் சரிப்படுத்தினர். இதற்கிடையில் பணக்காரருக்கு மருத்துவக் கவனிப்பு விரைந்து நடைபெற்றது. தலையில் வெட்டுக்காயம் பட்டவர்கள் கட்டிலில் கிடந்தார்கள். அவர்களைக் கவனிக்க ஆளே இல்லை. எங்க போனாலும் பணம்தான் பேசும் என்ற முனகல் சன்னமாக என் செவிகளில் விழுந்து கரைந்தது.

எங்களுக்குப் பின்னால் வந்த அடிதடி கேஸை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எங்களை எவருமே சட்டை செய்யவில்லை. யாரிடம் சொல்வது என்றே தெரியவில்லை. சிலரிடம் கேட்டால் சிடுசிடுப்பாகப் பதில் சொன்னார்கள். கடைசியாக தைர்யத்தை வரவழைத்துக் கொண்டு அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த ஒருவரை அணுகினேன். என்ன செய்யுது என்றார் அவர். பெரியம்மாவுக்கு மூச்சித் திணறுது என்றேன். முதல்லயே சொல்லலாமில்ல என்றார். சொன்னேன்... ஆனா... என்று வார்த்தைகளை என்னத்த சொன்னீங்க என்று விழுங்கி விழுங்கித் துப்பினேன். அங்கலாய்த்துக் கொண்டார் அவர். சரி... அந்த ரூம்ல ஒரு கட்டில் கிடக்கும். அங்க போய்ப் படுக்க வையுங்க. சிஸ்டர் இந்த அம்மாவுக்கு ஆக்சிஜன் லெவல் செக் பண்ணுங்க என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். உடனே ஒரு நர்ஸ் ஓடி

வந்தார். சில பரிசோதனைகளைச் செய்தார். இவர்தான் பெரிய டாக்டரா என்றாள் அக்கா. யாருக்குத் தெரியும் என்றேன். அந்த நர்ஸிடமே கேட்டேன். இவர்தான் பெரிய டாக்டரா. ஆமாம்... அவரு டூட்டி முடிஞ்சு போறாரு.. உள்ள இன்னொரு டாக்டரு இருக்காரு.. அவருதான் பாப்பாரு.... அவர் கொஞ்சம் கோபக்காரர்... பாத்துப் பேசுங்க.... என்றார் அந்த நர்ஸ். அப்படின்னா இவரு பாக்கமாட்டாரரா பாக்குறதுக்கு நல்ல மனுசனா இருக்காரு. நமக்கு குடுத்து வைக்கலையே என்று நினைத்துக் கொண்டேன். பத்து நிமிடம் கழித்து நர்ஸ் வந்து ஈ. சி. ஜி நார்மலாகத்தான் இருப்பதாகச் சொல்லிவிட்டுப் போனார். அறைக்குள் இருந்த அக்கா வெளியே வந்தாள். பெரியம்மா எப்படி இருக்கா என்று கேட்டேன். முழிச்சுக்கிட்டுத்தான் கிடக்கா... தம்பிக்குச் சாப்பாடு வாங்கிக் குடுத்துட்டு வான்னு சொன்னாள் என்று அக்கா சொன்னாள். சிறிது தெம்பு வந்தவனாக அருகில் இருந்த ஒரு இட்லிக் கடையில் நான்கு இட்லிகளைச் சாப்பிட்டேன். அக்காவுக்கு மூன்று இட்லிகளைவாங்கிக் கொண்டு நடந்தேன்.

பெரியம்மா இருந்த அறைக்குச் சென்றேன். அறைக்குள் பெரியம்மா முனகிக் கொண்டிருப்பது கேட்டது. என்னத்தா செய்யுது என்று கேட்டாள் அக்கா. வெளிக்குப் போகணும்... அவசரமா இருக்கு என்றாள் பெரியம்மா. கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு பக்கத்தில் இருந்த கழிவறைக்கு அழைத்துச் சென்றாள் அக்கா. அவர்கள் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் டாக்டரும் இரண்டு நர்சும் உள்ளே நுழைந்தார்கள். பாட்டியம்மாவை எங்க என்றாள். நர்ஸ். டாய்லட் போயிருக்காங்க என்றேன். சிஸ்டர் அடுத்த கேஸ் என்ன இருக்கு ..ம்.. சீக்கிரம் என்று நர்சை விரட்டினார். பாட்டியம்மா வந்ததும் தகவல் சொல்லுங்க என்று சொல்லிவிட்டு டாக்டரின் பின்னால் விரைந்தாள் அந்த நர்ஸ். அவர்கள் சென்ற ஐந்து நிமிடங்கள் கழித்து பெரியம்மாவை அழைத்துக் கொண்டு அக்கா வந்தாள். என்னக்கா இந்நேரம் பாத்தா நீங்க போகணும். டாக்டர் இப்பத்தான் வந்துட்டுப் போறாரு என்று அக்காளைக் கடிந்து கொண்டேன். அதுக்கு என்ன செய்யுறது.. டாக்டர் வருவாருன்னு யாருக்குத் தெரியும் என்று முனங்கினாள் அக்கா. சரி... நான் போய் சொல்லிட்டு வாரேன் என அறையை விட்டு வெளியேறினேன். டாக்டரின் அறைக்கு முன்பாக நின்றேன். கதவு திறக்கப்படவே இல்லை. சிறிது நேரம் கழித்து ஒரு நர்ஸ் அந்த வழியாக வந்தாள். டாக்டரு உள்ள இல்லையா எனக் கேட்டேன். இப்பதான் சாப்பிடப் போயிருக்காங்க. வர்றதுக்குப் பத்து நிமிசத்துக்கு மேல ஆகும் என்றாள் அவள் சாதாரணமாக. மீண்டும் அறைக்குத் திரும்பினேன். கட்டிலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஒருக்களித்துக் கிடந்தாள் பெரியம்மா. கால்களை நன்றாக நீட்டியிருந்தாள். என்ன தூங்குறாளா என்று அக்காளிடம் கேட்டேன். ஆமய்யா என்றாள் அவள். கட்டிலில் கால்மாட்டில் உட்கார்ந்தேன். டாக்டர் வாறாரா? என்றாள் அக்கா சாப்பிடப் போயிருக்காராம். பத்து நிமிசம் ஆகும்ன்னு சொன்னாங்க என்றேன். பெரியம்மாவின் கால்கள் இலேசாகப் புரண்டன. கால்களைத் தொட்டுப் பார்த்தேன். கொஞ்சம் சில்லென்று இருந்தது. ஏதாச்சும் பேசினாளா? என்று அக்காளிடம் கேட்டேன். பாத்ரூம் போயிட்டு வந்தவ கால கைய நீட்டிப் படுத்தா. வேற ஒண்ணுமே சொல்லல என்றாள் அக்கா. ஓடம்ப தொட்டுப்பாரேன் என்றேன். யாத்தே! என்று பெரியம்மாவின் தோளை உலுக்கினாள். அக்கா. சத்தம் ஏதும் இல்லை. ஓடிப்போய் நெஞ்சில் கை வைத்துப் பார்த்தேன். இதயத்துடிப்பு குறைந்து கொண்டிருப்பதை கைகள் உணர்த்தின. அறையை விட்டு வேகமாக வெளியே சென்றேன். கண்ணில் தெரிந்த ஒரு நர்சை அழைத்து வந்தேன். சிஸ்டர் ரொம்ப சீரியஸ்ஸா இருக்கு என்றேன். பெரியம்மாவின் உடம்பில் கை வைத்துப்பார்த்தாள் நர்ஸ். உடனடியாக அறையை விட்டு வெளியேறினாள். கண் இமைக்கும் நேரத்தில் ஸ்ட்ரெக்சருடன் ஒரு ஆள் வந்தார். பெரியம்மாவைத் தூக்கி வைத்துக் கொண்டு டாக்டரின் அறைக்கு வேகமாகச் சென்றார்.

மணி பதினொன்று இருக்கும். தூக்கக் கலக்கமும் தலைச்சுற்றலுமாகவும் நின்று கொண்டிருந்தோம் அக்காளும் நானும். நீங்க இங்கேயே இருங்க. கூப்பிட்ட பிறகு வந்தா போதும் என்று கண்டிப்பான குரலில் சொல்லிவிட்டுப் போனாள் ஒரு நர்ஸ். அரைமணி நேரம் ஒருவரும் வெளியே வரவில்லை. பெரியம்மாவுக்குத் தீவிர சிகிச்சை நடப்பதாக எண்ணிக் கொண்டோம். கரையடி அய்யனாருக்குப் பொங்கல் வைப்பதாக அக்கா மனதுக்குள் நேத்திக்கடன் போட்டுக் கொண்டாள். சிறிது நேரத்தில் ஒரு நர்ஸ் எங்களை நோக்கி வந்தாள். அந்த அம்மாவோட மகன் அல்லது மகள் யாராவது இருக்கீங்களா? எனக் கேட்டாள் அந்த நர்ஸ், இவங்கதான் அவங்க மக என்று



அக்காளைக் காட்டினேன். அவங்கள அழச்சுட்டு வாங்க என்று சொன்ன நர்சின் பின்னால் அக்காவை அழைத்துக் கொண்டு நடந்தேன்.

டாக்டரின் அறையில் நர்ஷ் சுட்டிக்காட்டிய பெஞ்சில் உட்கார்ந்தோம். நீங்கதான் அந்த அம்மாவுக்கு மகளா? என்று மேசையைப் பார்த்தபடியே டாக்டர் கேட்டார். சேலைத்தலைப்பால் கண்களைத் துடைத்தபடி ஆமாம் என்றாள் அக்கா. அம்மாவுக்கு என்ன செஞ்சுது? என்று கேட்டார். ரெண்டு நாளா எளப்பு இருந்துச்சு என்று அக்கா சொல்லி முடிப்பதற்கு முன்னால் எப்பவுமே இளைப்பு உண்டா? எனக் கேட்டார் டாக்டர். இவ்ளோ நாளா கெடயாது.. இப்ப கொஞ்ச நாளாத்தான் இப்டி இருக்கு என்றாள் அக்கா. இளைப்பு வந்தாலே சிக்கல்தான்.... ஆள எப்பச் சாய்க்குமுன்னு சொல்ல முடியாது என்றார் டாக்டர். எட்டு மணிக்கு எடுத்த ஈ. சி. ஜி ல ஒண்ணும் தெரியல...ஆனா இப்ப இதயத் துடிப்பே இல்ல... எங்க கையில எதுவும் இல்ல... நாங்க என்ன செய்ய முடியும்... சிஸ்டர் இவங்களக் கூட்டிட்டுப் போய் விவரம் சொல்லி அனுப்புங்க... என்ற டாக்டரின் வார்த்தைகள் இதயத்தில் இடியாக இறங்கின. டாக்டரின் அறையிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டோம்.

யாத்தே! குத்துக்கல்லா இருந்தவ குபீர்ன்னு போயிட்டியே! சீனிக்கல்லா இருந்தவ சீக்கிரமாப் போயிட்டியே! ஆஸ்பத்திரிக்கு நடந்து வந்தவள அறுத்த முண்டமாத் தாரீகளே! அய்யனாரு பார்க்கலியே!அய்யாமாரும் பாக்கலியே! மூணு மணி நேரமா பாக்காமப் போட்டுட்டு முழுசாக் கொன்னுட்டீகளே! உசிரக் கொடுக்குற நீங்களே எங்க ஆத்தா உசிர எடுத்துட்டீகளே! சொல்லி முடியுமா சொன்னாலும் தீருமா! என்னெ அள்ளி வளத்த ஆத்தாள அநியாயமாக் கொன்னுட்டீகளே! அக்காளின் ஒப்பாரி நள்ளிரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு காற்றில் கரைந்து போனது. யம்மா இங்க அழுது ஊரக் கூட்டக் கூடாது. போயி ஆக வேண்டியதப் பாருங்க என்று அதட்டலும் மிரட்டலுமாக ஒரு நர்ஸ் சொல்லிவிட்டுப் போனாள்.

பெரியம்மாவின் காதுகளில் கிடந்த கம்மலைக் கழற்றிக் கொடுத்துவிட்டுப் போனாள் ஒரு நர்ஸ். அவள் சென்றதும் இன்னொருத்தி ஓடி வந்தாள். பாடியை இப்பவே கொண்டு போறீங்களா? டாக்டர் கேட்டுட்டு வரச் சொன்னார் என்றாள் அவள். ஆமா உசிரு இருக்கும் போது அக்கறை காட்டாம இப்ப மட்டும் வேகமா வந்துருங்க! என்று மச்சான் சற்று உரக்கவே பேசினார். சத்தம் இல்லாமல் நர்ஷ் நகர்ந்து சென்றாள். சிறிது நேரத்தில் டாக்டரே வந்துவிட்டார். என்ன செய்யப் போறீங்க? என்று தோரணையாகக் கேட்டார். எந்த வண்டியில கொண்டு போறது என்றேன். நாங்க இலவச வண்டிக்கு ஏற்பாடு பண்ணுறோம் என்றார் டாக்டர்.

நீங்களே வண்டி அமத்தி விட்டாலும் இந்த நடுச்சாமத்துல எப்படிக் கொண்டு போக முடியும்? கொண்டு போயி நாங்க எங்க வைக்கிறது? என்று டாக்டரிடம் உரக்கக் கேட்டேன். அப்படீன்னா ஓங்க முடிவுதான் என்ன? என்றார் டாக்டர். விடிஞ்சப் பிறகுதான் எடுக்க முடியும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டோம் நானும் மச்சானும். அப்படீன்னா காலையில ஒன்பது மணிக்கு வாங்க என்று சொல்லிவிட்டு எங்கள் பதிலுக்கு காத்திராமல் தனது அறைக்குச் சென்று விட்டார் டாக்டர். நல்ல டாக்டருமாரு... நல்ல ஆஸ்பத்திரி... இலவசமுன்னு வந்தா இப்படித்தான் இருக்கும். முதல்லயே தனியார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கணும் என்று தனது ஆத்திரத்தை வார்த்தைகளாகக் கொட்டித் தீர்த்தார் மச்சான். தனியாருக்குப் போனா லட்சக்கணக்குல பிடுங்குவாங்கன்னுதான் இங்க வர்றது... இங்க வந்தா இந்த நிலமை ... ஏழைகளுக்குப் பூமியில எடமே இல்லயா! அழுதுகொண்டே அக்காளின் குரல் ஒலித்தது. பணியில் இருந்த பெண் காவல் ஆய்வாளர் எங்களுக்கு அருகில் வந்தார். எங்களின் ஊர், பேர் ஆகியவற்றை விசாரித்துக் குறித்துக் கொண்டார். அந்த அம்மாவோட இறப்பில ஓங்களுக்கு ஏதாச்சும் சந்தேகம் இருக்குதா? போலீஸ் ஸ்டேசன்ல கேஸ் குடுக்கப் போறீங்களா? என்று ஆதரவாகக் கேட்டார். போன உசிரு போயிருச்சு... கேசு குடுத்தாப்ல அது திரும்பவா போகுது... காலையில மூணாம்பேருக்குத் தெரியாம பிரேதத்தை வாங்கிக்கிறோம் என்றாள் அக்கா. ஆஸ்பத்திரிக்குள் நுழையும்போது நடந்து வந்த பெரியம்மா நான்கு பேர் உதவியுடன் பிணவறைக்குச் சென்று கொண்டிருப்பதைக் கண்கள் நிலைகுத்தப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மறுநாள் காலையில் ஆஸ்பத்திரிச் சம்பிரதாயங்கள் முடிந்து பிரேதத்தைக் கொடுக்க மத்தியானப் பொழுது ஆகிவிட்டது. ஆஸ்பத்திரியில் இலவச வண்டிக்கு ஏற்பாடு செய்தார்கள். நாங்களே பிணத்தை அமரர் ஊர்தியில் ஏற்றினோம். துப்புரவுப் பணியாளர் ஒருவர் டீ குடிக்க. என்று தலையைச் சொரிந்தபடி நின்றார். ஆம்புலன்சு டிரைவருக்குப் பணம் எதுவும் கொடுக்க வேண்டாம் என்று ஆஸ்பத்திரியில் சொல்லி அனுப்பினார்கள். ஊரில் ஏற்பாடுகள் பலமாக நடந்து கொண்டிருந்தது. வெளியூர் சொந்தக்காரர்கள் பெரும்பாலும் வந்திருந்தார்கள். அமரர் ஊர்தி வீட்டின் முன்னால் வந்து நின்றது. கூடியிருந்த பெண்களில் சிலர் உண்மையாகவும், சிலர் பொய்யாகவும் ஒப்பாரி வைத்து முடித்தார்கள். ஏ! செத்துப் போனவளுக்கு ஆம்பளப் புள்ள இல்ல. மகன் முறைக்கு யாரெல்லாம் மொட்டை போடப்போறீங்க? ஊர்ப்பெரியவரின்குரல் மௌனத்தைக் கலைத்தது. நான் உட்பட மூன்று பேர் கொள்ளி வைக்கத் தயார் ஆனோம். சடங்குகள் எல்லாம் முடிந்தன. சுடுகாட்டுக்குத் தேர் கிளம்பியது.



சுடுகாட்டில் நடக்க வேண்டிய சாத்திரங்கள் நடந்து கொண்டிருந்தன. ஊர் இளவட்டங்களும் பெருசுகளும் பல பிரச்சினைகளையும் பேசிக்கொண்டிருந்தார்கள். உள்ளூர்ப் பிரச்சினை முதல் உலகப் பிரச்சினை வரை பேசப்பட்டது. ஆளுங்கட்சி எதிர்க்கட்சிச் சண்டைகள் மயானத்தையும் விட்டு வைக்கவில்லை. தகன மேடையைச் சுற்றி வந்தேன். சிதைக்குத் தீ மூட்டிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்தேன். பின்னாலும் முன்னாலும் ஆட்கள் நடந்தார்கள். எதேச்சையாக ஒரு செல்போன் மணி ஒலித்தது. இரண்டு வார்த்தைகள் மட்டுமே ஒலித்த அந்தப்பாடல் இதயத்தைக் கிழித்துச் சென்றது. “என்னை மறந்ததேன்... ●

# ஒரு பேனாவின் அலறல்!!

## மன்னை எம்.என். கண்ணன்

ஸார்.. ஸார்... ஐயோ இந்த மனுசன் இப்படி கொஞ்சமும் பயமோ பொறுப்போ இல்லாமல் தன் முகத்தை சேவ் செய்துகொண்டு மிஷினில் இருந்து பிளேடை எடுத்து, டேபிள் மேலேயே போட்டுவிட்டு, முகம் கழுவி விட்டு, குளிக்கச் சென்று விட்டாரே. நான் போடும் கூச்சலும் கூட அவரின் காதில் விழவில்லையா.. அய்யோ கடவுளே.. நான் என்ன செய்வது...? எப்படி இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த வீட்டில் நடக்கப்போகும் விபரீதங்களைத் தடுக்கப் போகிறேன்...? வீட்டில் விளையாட்டுப் பிள்ளைகள் அதுவும் துறுதுறு அழகு பொம்மைகள் அவர்களின் கண்ணில் இந்த ரத்தவெறி பிடித்த பிளேடுபட்டு விட்டால் அவர்கள் இதை எடுக்காமல் விளையாடாமல் இருக்க மாட்டார்களே.. அய்யோ... ஐயா யாராவது என் குரலுக்கு செவி சாயுங்களேன்... இந்தக் குடும்ப நிம்மதியை அமைதியை மகிழ்ச்சியை காப்பாற்றுங்களேன். பாவம் காலமெல்லாம் என் குரலை எந்தத் தெய்வங்களும் கேட்கவில்லையோ அதைப் போலவே என் பேனாவின் அலறலையும் தெய்வம் மட்டும் அல்ல எந்த மனிதர்களுக்கும் கேட்கவில்லையே... ஐயா, ஐயா, அம்மா, அம்மா. நீங்களாவது வந்து அந்தக் கொலைகார பிளேடை எடுத்து அப்புறப்படுத்துங்களேன் உங்கப் பிள்ளைகளைக் காப்பாத்துங்கோ... அம்மா ஏ... வீட்டுக்கார அம்மா... என் அலறலைக் கேளுங்கம்மா.. உங்க வீட்டு நிம்மதியை, குழந்தைகளை காப்பாத்திக்க இதுதான்ம்மா கடைசி நிமிடம்... வாங்க வாங்க... ஐயோ இவங்களும் என் குரலை கேட்காது, அவர்களின் ஒரு வயது குழந்தை ரகுவை குளியாட்ட தூக்கிக்கொண்டு பாத்டஃப் இருக்கும் இடத்திற்கு சென்று கொண்டிருந்த வீட்டு எஜமானியை... எப்படித் தடுத்து நிறுத்துவது? இன்னிக்குக் குழந்தையைக் குளிப்பாட்ட வேண்டாம். அம்மா... அம்மா. அய்யோ என் அலறல் யாருக்குமே கேட்கலையா ஏ... தெய்வமே சம்பவாமி யுகே... யுகே...ன்னு எல்லாருக்கும் ஆறுதல் சொன்ன தெய்வமே... இதோ இப்போ இங்கே இந்த இல்லத்தில் நடக்க இருக்கிற அநியாயத்தை... கொடுமை எனும் சம்பவத்தை நிறுத்த நீயாவது வரக்கூடாதா...? கொரானா காலத்தை மனதில் வைத்துக்கொண்டு, குழந்தையை குளியாட்ட வேலைக்காரிகளைக் கூட வைக்காமல், மிகவும் அக்கறை காட்டும் அம்மா... வேண்டாம் அம்மா... பாவம் ஒரு வயது பிஞ்சு. அதை குளியாட்டி இப்போ என்ன ஆகவேண்டி இருக்கு என்று பேனா கத்தும் போதே, அதோ பெரியவன் 3 வயது ராஜா... அம்மா ஐயோ ஐயோ... வலிக்குதே... என்று அலறிய படியே தாயின் அருகில் வருகிறான். பிள்ளையைப் பார்த்த தாய்.. ஐயோ... ஐயோ... ராஜா என்னடா இது? ரத்தம் ரத்தம் அவன் நடந்து வந்த பாதையெல்லாம் அவன் காலடி ரத்தம்.. கிருஷ்ண ஜயந்திக்கு கோலக்கரைசலில் அவனது கால்பாதங்களை துவைத்து வாசலில் இருந்து பூஜை அறை வரை அவனின் ரோஜாப் பாதங்களை பதியவிட்டு அழகுப் பார்த்தவனுக்கு இன்று இப்படியா...? அய்யோ தெய்வமே...! என்று கூறிய படியே குளியாட்டிக் கொண்டிருந்த குழந்தையை அப்படியே டப்பிளேயே விட்டு விட்டு ஓடிச் சென்று, அந்த ரத்தவெறி பிடித்த பிளேடால் தனது குறியை அறுத்துக்கொண்டு... வயற்றுப்பகுதி பூராவிலும் அறுத்துக்கொண்டு ரத்தக்களரியாக வந்தவனை அப்படியே தூக்கி, டவலால் சுற்றி, தன்னோடு அணைத்தபடியே பக்கத்தில் நிறுத்தி இருந்த வீட்டுக் காரைத் திறந்து, பையனோடு சீட்டில் அமர்ந்தபடியே காரை ஸ்டாட் செய்தாள் மருத்துவமனைக்குச் செல்ல... அம்மா... அம்மா... ஐயோ காரை

எடுக்காதிங்கோ... காருக்கு அடியிலே வழக்கம் போல உங்கப்பிள்ளை ராமு விளையாடியகளைப்பில் உறங்கிக் கொண்டிருக்கிறான். காரை எடுக்காதீங்க... ம்... பாவம் இந்தப் பேனாவின் கூச்சலை... அலறலை அந்தத்தாய் கேட்கவே இல்லை... வண்டியை எடுத்து ஓட்டும்போது ஏதோ கல்மேல் ஏறி இறங்குவதாகவும் கூட உணர்ந்தாள் இருந்தும் வேறு சிந்தனையோ புத்தியோ இப்போது வேலை செய்யவில்லை அவளுக்கு. தன்னோடு இருக்கும் பிள்ளையைக் காப்பாற்ற மருத்துவமனைக்குச் செல்வதிலேயே ஒரு வேகமாக இருந்தாள்.. பாவம் இந்தப் பாசத்தாய் போகும் வழியிலேயே பெரியவன் மரிக்க... அவனைக் கண்ட அதிர்ச்சியில் குளிப்பாட்டிய சிறு கைக்குழந்தையை தண்ணீரிலேயே போட்டு, அக்குழந்தை அதிலேயே செத்து மிதக்க... காருக்கு அடியில் படுத்து இருந்த இரண்டாவது மகன் அவனுக்கு அதுவே கடைசி தூக்கமாக போக... இந்த பணத்தாலும் படிப்பாலும் குறைவே இல்லாத வீட்டில், ஆறாவது அறிவை சரியாகப் பயன்படுத்தத் தவறியதால், இப்படியான காலமெல்லாம் மறக்க முடியாத சோகமாக ஆன அவலத்தையும் கண்ணீரையும் நிறுத்த யாராலே முடியும்...? அட... போங்கப்பா... இப்போ அழுது என்ன... புரண்டு என்ன... என் அலறலை நீங்க யாருமே கேக்கலையே... பேனாவை மதிக்காதவங்களுக்கு இந்த மரணங்களும் சோகங்களும் ஒரு பாடந்தான்... ●

---

கவிதை

# தெற்குக் காணி

என்னோட தாயிடா தெற்குக் காணி
யாருக்கும்
விட்டுக்கொடுக்க மாட்டேனாக்கும்.

எம்புருசன் ஒழச்சி வாங்குனது..
வந்துட்டானுங்க ஆளாளுக்கும்
கோட்டு சூட்டுப் போட்டுகிட்டு,
பச்ச மண்ண சுடுகாடாக்க.

காசு என்ன பொல்லாக் காசு
என்னோட சாமிடா.. இந்த நெலம்.

மிரட்டிக் கேட்டாக் கொடுத்திடுவேனா?
என் உசுரு இருக்குற வரைக்கும்
எவன்
கால் வைக்கிறானு பாக்குறேன்.

குமட்டில் குதப்பியிருந்த
வெற்றிலை எச்சி
தாவாங்கட்டை வழிய வழிய
கொசுவம் உதறி ஆவேசமாய் நடந்தாள்
மருதாயிக் கிழவி.
....

நிலம் கையகப்படுத்த
அதிகாரிகள் வருவதாய்
ஊருக்குள் சொல்லிப் போனார்
மணியக்காரர்.

....
உச்சிவெயில் பொழுது...
ஐயோ ஐயோ
ஓடி வாங்களேன்
கூக்குரல் திசைநோக்கி
ஊரே ஓடியது.
....

தெற்குக் காணி மடியைத் தழுவியப்படி
மாரடைத்து விரைத்துக் கிடந்தாள்
மருதாயிக் கிழவி
அழுதக் கண்ணீர்ப் பூத்து.

ஓர் உரிமையின் உணர்வலை
கனத்து வெதும்பி சாக்காடானது.

ஆளுமைச் சந்தையால்
இனி எட்டுவழிச் சாலைக்கு
வழக்கின்றிக் கையாளப்படும்
தெற்குக் காணி.

**கடம்பை அறிவு.**

●

பதிவு

# போகிறபோக்கில்

## சின்னப்பயல்

இன்று காலை ஓர் அலைபேசி அழைப்பு. பேசியவர் என்னுடன் பணிசெய்யும் நண்பர் முருகானந்தம். பேசிவிட்டு “எங்க மாமா உங்களுடன் பேச வேண்டும் என்கிறார்” என்றார்.

பேசினோம்.

எங்கள் உரையாடல் அரைமணி நேரம், ஒருமணி நேரம், ஒன்றரை மணிநேரம் என நீண்டுகொண்டே சென்றது. அந்த உரையாடல் எனக்கு தித்திப்பாகவும், திகைப்பாகவும் இருந்தது. பேசியவர் ஆசிரியர் முருகானந்தத்திற்கு மட்டும் மாமா அல்ல. எங்கள் இலக்கிய முன்னத்தி ஏர் கவிஞர் பரிதி பாண்டியனுக்கும் தாய்மாமா. அவர் கண்ணாமூச்சி குறித்து மிகவும் சிலாகித்துக் கூறி மனம் திறந்து பாராட்டினார்.

அவர் எழுத்தாளர் எம்.என். கண்ணன்.

கூடவே, பரிதியும் அவரும் சேர்ந்து நடத்திய எழுச்சி என்ற சிற்றிதழ் குறித்தும் பேசினார். அந்த இதழ் குறித்து காவல்துறை விசாரணைக்கு எல்லாம் இருவரும் சென்று இருக்கிறார்கள். எழுச்சி இதழை மறைந்த திமுக சட்டமன்ற உறுப்பினர் ஏ.கே. சுப்பையா அவர்கள் இலவசமாக அச்சடித்துத் தந்த செய்தியை நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

மேலும், மன்னார்குடியில் வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகம் முதலில் அரங்கேறியபோது அதில் கட்டபொம்மனாக நடித்தவர் ஆச்சி மனோரமாவின் கணவர் என்ற செய்தியைக் கூறினார். இது நடிகர் திலகம் கட்டபொம்மனாக நடிப்பதற்கு முன்பு நிகழ்ந்திருக்கிறது.

மன்னார்குடிக்கான பெயர்கள் மன்னர்குடி, செண்பகாரண்யம் என்பது என்னைப் போல் உள்ளவர்கள் அறிந்ததே. ஆனால் மன்னார்குடிக்கு ஆதிபெயர் துவரையூர் என்று இருந்திருக்கிறது. துவரம் பருப்பு அதிகம் விளைந்ததால் வந்தப் பெயராகக் கூட இருக்கலாம்.

அண்டோரா தெரு என்பது ஹண்டேராவ் தெருவாம். நான் கூட அடிக்கடி நினைப்பது உண்டு. அது என்ன விழல்காரத் தெரு? விழலுக்கும் வளமானப் படுகைசூழ் மன்னார்குடிக்கும் என்ன தொடர்பு இருந்திருக்க முடியும். வேண்டுமானால், அது நிழல்காரத்தெருவாக இருந்திருக்கலாம் என்று நினைத்ததுண்டு. ஆனால் ஒரு நான்கைந்து மாதங்களுக்கு முன்பு நண்பர் சாமி என்பவரிடம் பேசிக்கொண்டிருந்த போது அது விளக்கேற்றும் தெரு. பெரிய கோவிலுக்கு விளக்கேற்றுபவர்கள் குடியிருந்தத் தெரு என்று கூறினார். எழுத்தாளர் எம்.என். கண்ணனோ, அது விளக்கெண்ணெய் தெரு. விளக்கெண்ணெய் விற்பவர்கள் அங்கு வசித்தார்கள் என்றார்.

மன்னார்குடி குறித்த நிறைய செய்திகள். பேசிக்கொண்டே இருந்தோம்.

இறுதியாக ஒன்று!

எழுச்சி பத்திரிக்கைக்காக எம்.என். கண்ணனும் கவிஞர் பரிதியும் காந்திரோட்டில் முன்னிரவு வெளிச்சத்தில் அடிக்கடி சந்தித்து உரையாடுவது உண்டாம். அப்போது இரவு நேரத்தில் குடிமகன்கள். அங்கங்கே விழுந்து சாய்ந்து கிடப்பார்களாம். அதைப் பார்த்த கவிஞர் பரிதி,

“காலையில்  
காந்திரோடு  
இரவானால்  
பிராந்தி ரோடு!”  
என்றிருக்கிறார்.

கவிதையைப் பற்றி பேசும் போதெல்லாம் பரிதி வந்து விடுகிறார். பரிதியைப் பற்றி பேசும் போதெல்லாம் கவிதை வந்து விடுகிறது. இன்று காலையில் எங்களது அலைபேசி உரையாடல் எனக்கும் கவிஞர் பரிதிபாண்டியனுக்குமானத் தோழமையைக் கண்முன் நிழலாடச் செய்தது. சென்னை செல்லும்போது எழுத்தாளர் எம்.என். கண்ணனைப் பார்க்க வேண்டும். அல்லது, எம்.என். கண்ணனைப் பார்ப்பதற்காகவே சென்னை செல்ல வேண்டும்.

இரண்டாவது முதலிலேயே நிறைவேறும் என்று நினைக்கிறேன்!

-பேசுவோம்


ஸ்ரீ கணேஷ் ஜெராக்ஸ்
79/1, தாலுக்கா ஆபிஸ் ரோடு - மன்னார்குடி
பொது 'இ' சேவை மையம்
அனைத்து விண்ணப்பங்களும் கிடைக்கும்
भारत निर्वाचन आयोग
ELECTION COMMISSION OF INDIA
AADHAAR
Pradhanmantri Fasal Bima Yojana
தமிழ்நாடு அரசு GOVERNMENT OF TAMILNADU
CIVIL SUPPLIES & CONSUMER PROTECTION DEPARTMENT
குடும்ப அட்டை / FAMILY CARD
NPHH-S
பதிவுத்துறை
REGISTRATION DEPARTMENT
fssai
Passport Seva
Service Excellence
G.பிரபு - செல்: 9751786700 e-mail: praboo.praboo@gmail.com
'கண்ணாமூச்சி' இலக்கியப் பணி தொடர வாழ்த்துகள்...


Siva
தொழில்நுட்பமே
எங்கள் சிறப்பம்சம்...
உங்கள் இல்ல
நிகழ்வுகளைத் துல்லியமாகப்
பதிவு செய்திட
சிவா
வீடியோஸ்
டிஜிட்டல் ஸ்டுடியோ
& லேசர் கலர் லேப்
மன்னார்குடி
செல் : 93440 10195 - 92620 74795
SIVA
PERSONALIZED
GIFT SHOP